அமிர்த குணபோதினி

பவ வருஷம் பங்குனி மாதத்திய

விஷய அட்டவணை.

"அமிர்த குணபோதினி"யின் வருஷ சந்தா விவரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா ரூபாய் 1. வெளி நாடுகளுக்கு ரூபாய் 2. தனிப் பத்திரிகை அணா 2. மாதிரி காபி இனம். ஆயுள் சந்தா உள்நாடு ரூபா 15. ஆயுள் சந்தா வெளிநாடு ரூபா 20.

பிரதி தமிழ் வருஷம் சித்திரை மாசமுதல் ஆரம்பமாகிறபடியால் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அவ்வருடத்திய சித்திரைமாத சஞ்சிகை முதல் கணக்கிட்டு அனுப்பப்படும். ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

தங்களின் இவ்வருஷ சந்தா நெம்பரைத் தெரிவித்து எழுதாவிடில் பதில் தரப்படமாட்டா. மணியார்டர் செய்கையில் புதிய—பழய—சந்தாதார் என்ற விவரத்துடன், பழய சந்தாதாரராயிருந்தால் தங்கள் நெம்பரையும் குறிப்பிடவேண்டும். தங்களின் விலாசத்தையும் தெளிவாய் கிறுக்கு எழுத்தின்றி கூப்பனில் எழுதவேண்டும். பதிலுக்கு ஸ்டாம்பு அல்லது ரிப்ளை கார்டு அனுப்புக. பத்திரிகை கிடைக்கப் பெருதோர் பிரதி தமிழ் மாதம் 15-ந் தேதிக்குள் எழுதாவிடில் அன்னோர் விலை கொடுத்தே பெறவேண்டும்.

இனாம்!

அமிர்தகுண போதினி.

புதிய ஐந்து சந்தாதாரர்களின் விலாசம் பூர்த்தி செய்து ரூபாயுடன் அனுப்புவோர்களுக்கு அழகிய அமிர்த குணபோதினி பழைய பயிண்டு வால்யம் இனாமாக அனுப்பப்படும்.

4—புதிய சந்தாதார்களைச் சேர்த்தால்:—ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணியும்,

3—புதிய சந்தாதார்களைச் சேர்த்தால் :—மன்மத சரித சல்லாப சவால் இலாவணி எரிந்தகக்ஷி எரியாதகக்ஷி என்னும் புத்தகமும்.

2—புதிய சந்தாதார்களைச் சேர்த்தால் :-(1)பாலிகா கல்பகம் (2) தங்கசாலை தாசிகள் ரகசியம் என்னும் புத்தகங்களும்.

1—புதிய சந்தாதாரரைச் சேர்த்தால் :—(1) காதலற்ற கல்யாணம் அல்லது பெண்வீட்டாரைக் கொள்ளையடித்தல். (2) தங்கசாலை தாசிகள் ரகசியம் என்னும் புத்தகங்களும் பரிசளிக்கப்படும்.

"அமிர்த குணபோதினி" ஆபீஸ், 158-A, பிராட்வே, சென்னை.

ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

AMIRTHA GUNABOTHINI

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான விஷயங் களும், விகடமும், அநுபவ விநோத நீதிபோதனை களும் நிறைந்த உயரிய செந்தமிழ் மாதப் பத்திரிகை.

படங்களுடன் பிரதி ஸஞ்சிகையும் 80-பக்கங்களுள்ளது.

பத்திராசிரியர்: திரிசிரபுரம்-எஸ் ஜி. இராமாநுஜலு நாயுடு.

பிரபல கிரந்த கர்த்தா. பிரசித்த அநுபவ ஞான சாஸ்திரி.

பழங்காலப் பத்திராசிரியர்களின் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்.

(ஆசிரிய காரியஸ்தலம்: ஸ்ரீரங்க நிலயம், 617, மேலடை வீதி, ஸ்ரீரங்கம்.)

வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூபாய் 2.

ஒன்பதாவது கமலம்.

Vol. 9.

April 1934–March 1935.

பவ வருஷ வால்யம்.

பவஹூ சித்திரைமீ முதல் பங்குனிமீ வரையில்.

[968-பக்கங்கள் கொண்ட ஒன்பதாம் புஷ்பச் செண்டு.]

"All our Knowledge is bassed upon Experience" Vivekananda.

நம்முடைய ஸகல அறிவும் அநுபவத்தையே சார்ந்து நிற்கின்றது.

இ. மா. கோபாலகிருஷ்ண கோன்,

"அமிர்த குணபோதினி" ஆபீஸ், 158-A, பிராட்வே, சென்னை.

[காலிகோ பைண்டு 1-6-0.

பைண்டு செய்த பழய வால்யங்கள் 3, 4, 5, 9 தனித்தனி ரு. 1-6-0-

அமிர்த குணபோதினி

ஒன்பதாவது கமலத்தின் விஷய அட்டவணை.

அடியிற்கண்ட இலக்கங்கள் பக்கங்களைக் காட்டுகின்றன.

அட்டவணை

அட்டவணை

இன்னும் இந்த அட்டவணையில் தெரிவிக்க முடியாத வேறு பல வளைவுக் குறிப்புகளும், பிரதிபக்கங்கள் தோறுமுள்ள அடிவரிகளும், சித்திரப் படங்களும் எவ்வளவோ உள்ளன. இவற்றை முற்றும் வாசித்து, "அமிர்த குணபோதினி"யின் அருமையையுணர்ந்து என்றென்றும் அபிமானிப்பீர்களாக.

80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும்,
ஆநந்தகரமான அநுபவ வினோத ஞானகலா விலாஸங்களும்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-9.	சென்னை பவ௵ சித்திரை௴ 1௳	இதழ் 97.
Vol. 9.	1934 ௵ ஏப்ரல்௴ 15௳	No. 97.



"அன்பே நமதுயிர்" ஆஹா! அன்பும் பக்தியும் பெறுவது எத்துணை மஹத்தானது! பக்தியொன்றுதான் இந்த லோகத்திலே சாசுவதமானது. ஒருவனை சாதானந்தனாகச் செய்யும் வல்லமை பக்தி ஒன்றுக்குத்தான் உண்டு. மெய் பக்திக்கு அதி ஆச்சரியமான சக்தியுண்டு. மெய்யடியார்க்குக் கல்லென்றும் செம்பென்றுமுண்டோ? அங்கிருந்துமல்லவா அவனுக்கு அருள் உதயமாகும்? பக்தி என்பது ஒரு ஜீவசக்தி. செத்த சவத்தையும் உயிர்ப்பிக்கும் ஆற்றலுடையது. எம்பெருமானிடத்து இயற்கையிலேயே பக்தி பூண்டவர்கள் உண்மையில் மிகவும் புண்ய புருஷர்களே. அவர்களே பாக்கியவான்கள். முக்திபெறுவதற்கு நம்பிக்கையும் பக்தியுமே இலகுவான மார்க்கங்கள். இருதயத்தில் பக்தி யுள்ளவர்களே, நீங்கள் வாழ்வீர்களாக.

ஃ

"அன்பே ஈசுவரன்" ஈசுவரன் அன்புருவானவன். மெய்ப்பக்தியொன்றே ஈசுவரதிருஷ்டி யளிக்கவல்லது. வெறும் அறிவு மூலமாக இறைவனை அடைதல் இயலாது. யோகப் பழக்கமும், நானாவிதக் கஷ்டாநுபவமுங்கூட பகவானைக் காண்பதற்குப் பாதைகளல்ல. இது ஈசுவரன் வாக்கு. அவர் களங்கம், தன்னலம், வேறுசிந்தனை—இவையற்ற மெய்யன்பர்க்கே எளியனாக விளங்குகிறார். "எனது அடியார்க்கு நான் அடியன்" என்று அவரே சொல்லியிருக்கிறார். அன்பே கடவுள். ஆனால், இதை அநுபவ

பூர்வமாகக் காண்பது அதிக கஷ்டமானது. எவன் களங்கமற்ற பரிசுத்த மான ஹிருதயம் பெற்றிருக்கும் பாக்கியவந்தனே அவனே இவ்வுண்மையைக் கண்டானந்திக்க ஏற்றவன். தனக்கென்ற இச்சை ஒரு துளியேனும் நமது மனத்திலே யிருக்கும்வரை, நமக்கு இந்நிலை ஸித்திக்கப்போவதில்லை. அது பரிசுத்த நிலை; அது தெய்வீக நிலை. இத்தகைய அன்பு ஒருவனுக்கு உதய மாகும்பொழுதே அவன் லௌகிகப் பந்தங்களினின்றும் விடுபட்டவனாகிறான்.

ஃ

"அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை"யும் ஒரு வாழ்க்கையாமோ? அன் பில்லார் ஹிருதயம் வெறும் பாலைநிலம். பரஸ்பரம் அன்பிருந்தால் ஒரு வரை ஒருவர் எங்குபோனாலும், எங்கிருந்தாலும் மறவார்கள். இந்த அன்பு என்பது "எனது, என்னுடையது, என்னைவிட்டு எங்கும் போகக்கூடாது" என்று சங்கிலி போட்டுக் கட்டிப் பிடித்துப் பெட்டியில் பூட்டி வைத்துக் கொள்ளுகிற ஆசையல்ல. அநித்திய வஸ்துக்களில் அபிமானம் வைப்பது ஆசை. நித்திய வஸ்துவில் பற்று வைப்பதற்கே அன்பு என்பது. தேகம், பிரபஞ்சம்—இவை அநித்திய வஸ்துக்கள்; ஆத்மா நித்ய வஸ்து. தன் தேகமல்லாது பிறர் தேகத்தில் அபிமானம் வைத்தாலும் அதுவும் ஆசை தான்; அன்பாகமாட்டாது. ஸ்திரீயின் தேகத்தில் புருஷனும், புருஷன் தேகத்தில் ஸ்திரீயும் அபிமானம் வைத்தால் அந்த தேகங்கள் மாறினபிறகு அல்லது அழிந்தபிறகு, அத்துடன் அபிமானம் வைத்ததையும் மறந்துவிடு வார்கள். இவ்வித ஆசைகள் இவ்வுலகுடன் அழிந்து கெட, மஹத்தான அன்போ இறைவனிடத்திற்கு அழைத்துக்கொண்டு சென்று, அங்கும் அன்பு மயமாய் பகவத் தியானராய் இருக்கவைக்கும்.

ஃ

"நீர் யாரையா? அங்கேயே நில்லும்" பாரத யுத்தத்தில் அபிமன்யு இறந்தபிறகு அர்ச்சுனன் வெகு துக்கத்தை யடைந்து ஒரு வேலையும் செய்யா திருக்கக் கண்டு, பகவான் அவனுக்குப் பிரமலோகம் போய் அங்கே பிரமா னந்தத்தில் இருக்கும் அபிமன்யுவைப் பார்க்கக்கூடிய ஞானதிருஷ்டி யளிக்க, அர்ச்சுனன் அபிமன்யுவைக் கண்டு, "அப்பா மகனே" என்று கட்டிக்கொண் டானும். அதற்கு அபிமன்யு, "நீர் யாரையா? அங்கேயே நில்லும்; உமக் கென்ன வேண்டும்?" என்றான். "நீ அபிமன்யு, என் மகனல்லவா? அறி யாதவன்போல் பேசுகிறாயே; என்னுடன் பூலோகத்திற்கு வந்துவிடு" என் றான். அதற்கு அபிமன்யு, "நீர் இவ்வளவு சாஸ்திரங்கள் படித்தும் அஞ் ஞானத்தினால் என் வருந்துகிறீர்? ஏதோ கர்ம விசேஷத்தால் உமது குமார னாக ஒரு சரீரம் எடுத்தால், அந்த ஜென்மம் தொலைந்தபிறகு இப்பொழு தென்ன வந்தது அதற்கு? அந்த ஜன்மத்தில் ஏதாவது நான் உமக்குச் செய்ய வேண்டியவைகளில் குறைவுண்டா? என்னை இனி நீர் தொடரக் காரண மென்ன? உமக்கு இஷ்டமானால் நீர் இங்கேயே என்னுடன் இருந்துகொண்டு

அறிந்தோர்தான் அறிந்தோரை மதிப்பர். அறிந்தோரிலும் பலர் ஏழ் மையாகிவிட்டவரை அவமதிப்பர். ஒரு ஆடம்பரஸ்தனைத் தனது மோட்டா ரில் ஏற்றிச்செல்லும் சீமான், ஒரு கலாஞானியை அவனது ஏழ்மை கருதித் தன்னுடன் உட்காரவிட இசையான்.

என்னுடன் போய் வந்துகொண்டிருப்பதில் ஆக்ஷேபனை யில்லை" என்றான். அர்ச்சுனன் வெட்கித் திருமபிச் சென்றான். பெண்பிள்ளைகளென்போர் சந்தையின் சிநேகம் போன்றவர்; நடுவழியிற் சேர்ந்து நடுவழியிலேயே பிரிபவராவர்.

ஃ

"சுய அன்பே பரமாத்மா" உயிரோடிருந்த காலத்தில் ஒரு அபிமானமும் வைக்காமலிருக்கப் பழகாதவர்களுக்குப் புனர் ஜன்மம் வந்தே தீரும். ஸத்தியம், ஆத்மா, தெய்வம் இவற்றில் பற்றுண்டாகாதவர்களுக்கு சுய அன்பு இருக்க முடியாது. மேற்கண்ட சுய அன்புக்கு ஆதாரவாயிருப்பவரே பரமாத்மா ஆவர். அவரிடத்து உனக்கு அளவிறந்த நம்பிக்கை உண்டாகட்டும். உடனே உனது கவலைகளெல்லாம் ஒழிந்துவிடும். அவர் உன்னை ஆசீர்வதித்துத் துன்பங்களினின்றும் விடுவிப்பார். எப்பொழுதும் அவரைப் பற்றித் தொடருகிற ஒரு நிலையிலேயே விழிப்பாக நின்று, குழந்தையைப்போல உனது குறைகளை அவரிடம் முறையிட்டு வணங்கிக்கொண்டிரு வேறொன்றிலும் சிந்தையைச் செலுத்தாதே. அதைரியப்படாதே. அவநம்பிக்கை கொள்ளாதே. ஆனல், எப்பொழுதும் ஸந்தோஷமாயிரு. பிறகு பகவான் உன்னை ஆசீர்வதிப்பார். ஸாந்தியும், ஆநந்தமும் தானே லபிக்கும்.

ஃ

"எங்கிருந்து பார்க்கினு நின் சந்நிதியாம்" பக்திவெறி கொண்டோன் ஸர்வமும் அவன் சரீரமுங்கூட, இஷ்ட தெய்வத்திற்குச் சொந்தமென நம்பி அங்ஙனமே காண்கின்றான். இக்காரணத்தினலேதான் அந்த சரீரத்திற்கும் உணவு கொடுத்துப் பாதுகாக்கின்றான். சரீரத்தைத் தனது எனக் கருதி அங்ஙனம் போஷிப்பிக்கவில்லை. அவன் அங்ஙனம் பாதுகாப்பது, தனது லக்ஷ்யப் பொருளின், (அதாவது ஈசுவர அம்ஸத்தின்) ஒரு பகுதியென்றெண்ணியேதான். அது (உடம்பு) காயப்பட்டாலும் சரி, பசியினல் வாடினாலும் சரி, ஜலதோஷத்தினல் துன்புற்றாலும் சரி, இன்னும் வேறெந்தக் கஷ்டம் அதற்குற்றபோதிலும், அவன் மனத்தில், 'தன் இஷ்ட தெய்வந் தான் வருந்துகின்றது' என்ற எண்ணம் உண்டாகிறது. ஆதலால், தன் "காதலன்" பொருட்டாகவே அவ்வுடம்பைக் குணப்படுத்தவேண்டிய சிகிச்சையெல்லாம் அவ்வப்போது செய்து கொள்ளுகின்றான். அல்லது இவ்விதமும் நினைப்பான்.—"தனது தெய்வ லக்ஷ்யம்" குடியிருப்பதற்கேற்ற கோவிலாகச் சரீரமிருக்கிறது. ஆதலால், அதற்குச் செய்யும் எதுவும் தன் 'காதல" னுக்குச் செய்யும் முறையாகவே முடிகின்றது!" இந்த விதமான எண்ணம் அவன் மனத்தில் உண்டானதினலேதான் இருதய பீடத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்குச் சமர்ப்பிக்கும் பொருள்கள் பரிசுத்தமானதும் ஏற்றதுமாய் இருக்கவேண்டுமென்று அவன் தேடித்தேடிப் பார்க்கின்றான். (கண்ணப்ப நாயனர் தம் மனத்தில் இத்தகைய எண்ணம் உதித்ததினலன்றோ, அவ்விறைச்சித் துண்டுகளை தாம் முதலிலே மென்று மென்று ருசி பார்த்துத் தம் பெருமானுக்கு ஊட்டினர்.) எப்பொழுது "லக்ஷ்யப்

சந்தேகித்து வந்து நோக்குமிடத்தில் எந்த சந்தேகமும் எதிர்ப்படுவதில்லை. காரணம் சந்தேகிப்பவனைவிட, சந்தேகிக்கப்படுவோர் அதிக ஜாக்கிரதையாகிவிடுவதாலேயே.

பொருள்" தன்னுள்ளேயே இருக்கின்றதென்ற ஓயாத சிந்தனை இவனுக்கு உதிக்க ஆரம்பித்ததோ, அப்பொழுதே இதுவரை பீடித்திருந்த பௌதிக பந்தங்களெல்லாம் சிதறுண்டுபோக, இவன் முக்தனாகின்றான்.

ஃ

"ஜீவனின் கடைசி லக்ஷ்யத்துக்குப் பாதை" மேற்கண்டவாறாக, மெய்ப்பக்தியானது வாணாளின் ஒவ்வொரு க்ஷணமும் உன் இஷ்ட தெய்வத்தோடு நீ கூடி வாழும்படியான நிலைமைக்கு உன்னைக் கொண்டுவந்து விடுகின்றது. அப்பொழுது உனது காதலரான பரமாத்மா ஒருவரையன்றிப் பிறிதொன்றும் இருப்பதாக உனக்குத் தோன்றுவதில்லை. எப்பொழுது அப்பெருமானது சமுகத்திலே சம்பந்தப்பட்டு உனது வாழ்க்கை தொடங்குகின்றதோ அப்பொழுதே உனது கவலைகளெல்லாம் பறந்துவிட்டன; உனது மனமெல்லாம் அந்தக் காதலனான பகவானின் பாதாரவிந்தங்களில் ஓடிக் கரைய், அவனைப்பற்றிய சிந்தனையிலேயே அழ்ந்து, உன்னையும் உனது இவ்வுலக நினைவுகளையும்—நீ இழந்துவிடுகின்றாய். இந்நிலையே மகா பாக்கியம் பெற்றது. ஏனெனில், இதுவே ஜீவனின் கடைசி லக்ஷ்யத்திற்கு. அதாவது இறுதியிற் பெறுவதாகிய முக்திக்குப் பாதையாயிருக்கின்றது. இதுவே ஈசுவர திருஷ்டியை அளிக்கவல்லது.

ஃ

"சலனமேதான் மனசு" சலனம் (அசைவு) நின்றால் மனம் சித்மயமாய் விளங்கும். ராகு முழுவதுமே தலையாக இருக்க, "ராகுவின் தலை" என்றும், ஓட்டமே நதியாக இருக்க, "நதியின் ஓட்டம்" என்றும் சொல்லுவதுபோல, சலனமே மனதாயிருக்க, "மனதின் சலனம்" என்று உபசாரமாகச் சொல்லுகிறோம். மனது மாறினால் தேகம் மாறுகிறது. அதாவது, கோபத்தினால் முகம் சிவத்தல், பயத்தினால் முகம் வெளுத்தல் முதலியன. தேகம் மாறினால் மனதும் மாறுகிறது. அதாவது: வியாதி வந்தால் கோபமுண்டாதல், எக்கம் தோன்றல் போன்றவையாம்.

ஃ

"மதம்" ஸ்வாமீ விவேகாநந்தர் கூறுகிறார்:—"நமது மதம் ஒன்றே சாஸ்வதமானது. எந்த மனிதனையும் தனக்கு ஆதாரமாகக் கொள்ளாமல் அறிவுக்கொத்த உண்மைகளையே ஆதாரமாகக் கொண்டது. இதுவே மதம் எனத்தகும்."

ஃ

"நிவேதிதை" யென்னும் அமெரிக்க மாது சொல்லுவதாவது:—"மூவாயிரம் வருஷங்களுக்குமுன் இந்தியாவில் நாகரிகமிருந்ததாகத் தெரிய வருகிறதால், இதர கண்டத்தார் இத்தேசத்தார்க்கு நாகரிகம் கற்றுக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. மதவிஷயத்தில் இந்தியா இட்ட பிச்சைதான்

பிராப்தமுள்ளோர் விளையாடி மகிழட்டுமே. அதை மற்றவர் ஏன் தடுத்துக் கெடுக்கவேண்டுமோ? ஆனவரையில் இருவரையும் ஒன்றுசேர்த்து இன்பத்திலே மூழ்கும்படி உன்னால் ஆனதைச் செய்.


மற்றவர்கட்கு என்பதுபோல், ஆசார விஷயத்திலும் இந்தியா முதற்றரமாயிருக்கின்றது."

ஃ

"வெளிச்சக் குறைவே இருள், இருளின் குறைவே வெளிச்சம்" சர்க்கரையை எந்தப் பக்ஷணமாகச் செய்தபோதிலும், சர்க்கரையின் அணுக்கள் சர்க்கரையாகவே இருப்பதுபோல், பரமாத்மா பார்க்கிறவனுக்கு எந்த ரூபமாகத் தோன்றினபோதிலும், முடிவில் பரமாத்மாவாகவே இருக்கிறார். தின்கிறவனுக்கு மட்டும் சர்க்கரையானது ஒரு பக்ஷணமாகத் தோற்றுகிறது. பேதமாகப் பார்க்கிறவனுக்கு மட்டுமே பரமாத்மா பிரபஞ்சமாகத் தோற்றுகிறார். பேதமே இருள்; பேதம் நீங்குதலே வெளிச்சமாம். நாம் வெளிச்சத்திற்குச் செல்ல முயன்று, பகவானிடத்துப் பக்திகொண்டு, ஸதா காலமும் அவரைத் துதித்து உய்யக்கடவோம். ஓம் தத்ஸத்.

ஒருவரைச் சந்திக்கும்பொழுது அவர் தெரிந்துவைத்துள்ள விஷயங்களோடு கலந்துபேசத் தனி அறிவு பெற்றவர்கட்குமட்டுமே அதிக நேரம் அவர்களோடு பேச சாத்தியப்படுகிறது. மற்றவர்களோ பக்கத்தில் மௌனமாய் வெறுமனே உட்கார்ந்திருந்துவிட்டு விடைபெற நேர்கிறது.

நமது ஒன்பதாம் ஆண்டு.



கருணாகரக் கடவுளின் திருவருளால், நமது "அமிர்த குணபோதினி"யின் ஒன்பதாம் வருடத்தைப் பெரு மகிழ்வுடனும் இன்று துவக்குகின்றோம். நமது அன்பர்கள் அனைவருக்கும் புது வருட சோபனமும் வாழ்த்துதலும் தெரிவித்துக்கொள்கின்றோம். ஒரு பத்திரிகையைத் தொடர்ந்து பெற்று, பொன்னே போன்றும் போற்றி, ஆர்வத்துடனும் ஆதரித்து வருவதானது, உத்கிருஷ்டமான தர்ம கைங்கரியமொன்றை விடாது ஊக்கத்துடன் செய்து வருவதற்கு ஒப்பாகும். குறித்த ஒரு பத்திரிகையை இடைவிடாது படித்து அதன் சுவைநயங்களை அனுபவித் துணர்ந்தோர்க்கு அப்பத்திரிகையின் மீதே ஸதா சிந்தை சென்று அதனையே எக்காலத்திலும் விரும்புமாறு வழக்கப்படுத்திவிடும். இவ்விதம் பழகிவிட்ட இன்பாநுபவத்தால் தங்களின் ஜீவகாலமுற்றும் தொடர்ந்து ஒரு பத்திரிகையைப் பெற்று வரும் கண்ணியர்கள் அநேகராவர். அத்தகையோர்க்கே பத்திரிகையின் உண்மைச் சுவையும், அதன் சிலாக்கிய நயங்களும் இனிது புலனாகும்.

ஃ

சென்ற எட்டு ஆண்டுகளாக நமது "அமிர்த குணபோதினி"யை அபிமானித்து வரும் குண சிரேஷ்டர்கள் இப்பத்திரிகையின் அருமை பெருமைகளை நன்குணர்வர். ஆதலின், அவர்கள் இப்புது வருடத்தில் தாராள சிந்தைகொண்டு விசேஷித்த சிரத்தை வகித்துப் புது சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்பிப் பத்திரிகையை மேன்மேலும் அபிவிர்த்தி செய்யுமாறு வேண்டுகின்றோம். எது ஒன்றையும் தாங்கள் மட்டுமே சுவைத்தால் அவ்வளவாக ருசி தோன்றாது. அருகிலிருப்பவர்கட்கும் கொடுத்து உண்ணச் செய்து, தாங்களும் அன்னாரோடு மகிழ்வதாயின் அப்பொழுது தான் அபரிமிதமான ஆநந்தம் உதிக்கும். அவ்விதமே "அமிர்த குணபோதினி"யைத் தாங்கள் வாசிப்பதுடன், மற்றவர்கட்கும் அதன் சிலாக்கியத்தை எடுத்துக் கூறி, அவர்களையும் சந்தாதாரர்களாகச் செய்து, அவர்களோடு தாங்களும் கலந்து இன்புறுவது இரட்டித்த ஸந்தோஷத்திற்கு இடனாகும். நமது அன்பர்கள் பிரதி மாதமும் ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்தனுப்புவதென்ற வீர விரதத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஃ

பத்திரிகையின் வாசிப்பு நமது உள்ளத்தைக் கவர்ந்து திருத்துவது போன்று வேறெதுவும் செய்வதில்லை. விசால ஹிருதயம் பத்திரிகைகளைப் படிப்பதிலிருந்தே உண்டாகின்றது. கல்வியின் அபிவிர்த்திக்குப் பத்திரிகைகளே முக்கிய ஸாதனமாகும். அதிலுள்ள ஆநந்தம் மற்றொன்றிலில்லை.

சொற்ப கல்வியுடையோரும் பத்திரிகைகளைப் படிக்கும் பழக்கத்தால் சிறந்த வித்தியா நிபுணர்களாகி யிருக்கிறார்கள். பத்திரிகைகள் லோக வாழ்க்கைக்குப் பெருந்துணை; குடும்பத்திற்குப் பொக்கிஷம் போன்றது. ஆதலின், நமது நேயர்கள் என்றும் பத்திரிகாபிமானிகளாய் விளங்கி, "அமிர்த குணபோதினி"யை என்றும் சாஸ்வதமாய் ஆதரித்து அபிவிர்த்தி செய்யுமாறு பிரார்த்தித்துக் கொள்கின்றோம். ஸர்வலோக சரண்யராகிய ஜெகதீசன் நம் மெல்லோரையும் இரக்ஷிப்பாராக. சுபம்.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு,
பத்திராசிரியர்.

பெண்கள் தங்களுக்குத் தாங்களே நேரில் பத்திரிகைகளையும், புஸ்தகங்களையும் பணம் கொடுத்துத் தபாலில் வரவழைத்துக்கொள்கிற சுதந்திரம் அவர்களுக்கு முதலில் ஏற்படவேண்டும். அதற்குத் தகுந்த விசால மனப்போக்குள்ள கணவனை மணக்கப் பாக்கியம் செய்திருந்தால்தான் அது முடியும்.

அமிர்தகுணபோதினி

பவஹூ சித்திரைமூ 1௨

அறிவின் தெளிவிலே எழும் உணர்ச்சிகள்.

ஆரம்பத்தில் அதிசயமாகத் தோன்றுவனவெல்லாம் பின்னர் சாமான்யமாகக் கருதப்பட்டு விடுகின்றனவே;—அது எதனால்? அதிசயமானது அறியாமையின் குணமாக இருத்தலால் தான். அறியாமையானது உள்ளவரையும் அதிசயப்படுதலும் இருந்துகொண்டிருக்கும். நினையாத ஒரு காரியத்தையாகிலும், நூதனமான ஒரு வேலைப்பாட்டையாகிலும், புதிதான ஒரு யந்திர நிர்மாணத்தையாகிலும் கண்டவுடனே புத்தியை ஒரு பிரமிப்போ மலைப்போ கவிழ்ந்து மூடிக்கொள்கின்றது. அதனால் உண்டான குழப்பத்தில் ஒன்றை அதிசயமாக எண்ண வைக்கின்றது. அந்தக் குழப்பத்தை மெதுவிலே நீக்கிக் காரணத்தை விசாரித்தறிந்த பின்பு முன்னர் அதிசயித்த தன்மையும் விட்டுப் போகின்றது. ஒன்றைக் கண்டவுடனே புத்தி மற்றொன்றின்மீது செல்லாமல் உண்டாகிற அதிசயமானது, இன்னின்னதுகூடி இந்தப் படியாயிற்றென்று அதனை அறிந்தவுடன் நீங்கிப்போகின்றது. அவ்விதம் அறியத் தைரியமற்றவர்களும், உழைத்து விசாரணை பண்ணும் வழக்கம் இல்லாதவர்களும் அறியாமையின் திரைக்குள்ளாகவே சோம்பி இருப்பதால், அன்னோர்க்கு எதுவும் அதிசயமாகவே தோற்றும். இத்தகையோர் தங்களின் உறுதியான கல்வியையும், விரைவான புத்தியையும் உபயோகித்து அடையக்கூடிய தெளிவின் இன்பத்தை இழந்துவிடுபவர்களேயாவர். தம்மில் ஒன்றுக்கொன்று இசைவுபட நாணயமாகச் செய்யப்பட்ட பல உறுப்புகள் கூடியதாகிய யந்திர நிர்மாணங்களைக் காணுகையில் அதிசயப்பட நேருவது உண்மையே. பின்பு, அவற்றை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுடைய வேலைத்துறையிற்போய், அந்தந்த வேலைக்கென்று எளிதாகச் செய்யப்பட்டுள்ள பல ஆயுதங்களையும், அவைகளைக்கொண்டு அநேகம்பேர் ஒன்றுகூடி முடிக்கின்ற வேலைகளையும் பார்க்கும்

"நான் உன்னை முதன் முதலாகப் பார்த்த நாள் தொட்டு உன் பெயர் என் ஜெபமாலையாய் விட்டது."

போது, அவனவனுக்கு அந்தந்த வேலையைச்செய்து முடிப்பது சுலபமே யென்றும், முதலில் கரடுமுரடா யிருந்ததானது பிறகு வேலைத் திறமையால் நாணயப்பட்டு ஒன்றின்பின் ஒன்றாகச் சேர்ந்து ஒவ்வோர் உருவமாயிற்றென்றும் அறிந்துகொள்ளுகையில், ஆரம்பத்தில் தோன்றிய அதிசயமானது விலகி விஷயம் தெளிவுபட்டு விடுகின்றது. முதலில் அதிசயப்பட்டபோதிலும், பிறகு அறிவின் தெளிவிலே எழும் உணர்ச்சிகள் அந்த அதிசயத்தை உள்நுழைந்து பிரித்தறிந்து சாமான்யமாகக் கருதுமாறு சுலபப்படுத்தி விடுகின்றன.

ஃ

கையினால் ஆகிற வேலையைப் போலவேதான் புத்தியினாலாகிற வேலையுமாம். மிகப் பிரயாசையும் அதிசயமுமாகத் தோன்றுகிற கணிதமானது, தைரியமும்—ஊன்றிப்பார்க்கும் தன்மையும் இல்லாதவர்களுக்கு மற்றொருமுறை ஆராய்ந்து பார்த்துத் தெரிந்துகொள்வதற்குக் கஷ்டமாகவே படும். அந்தக் கணிதத்தைத் தனித்தனியாகப் பிரித்துப்பார்க்கும் திறமை படைத்திருந்தால், அத்தருணம் எழுகிற அறிவின் உணர்ச்சிகள் முன்பு கஷ்டமாய் நினைத்ததைச் சுலபமாகத் தெரிந்துகொள்வதற்கான வழி வகையைக் காட்டிக்கொடுத்துவிடும். கணிதத்தில் மட்டுமல்ல; உலக நிகழ்ச்சிகளிலும் இந்த அதிசயத்துக்குப் பல உதாரணங்கள் தரலாம். ஒரு பெண்மணி தன்னிடத்து மிக்க அன்புடனிருந்து தன் அவசர சமயங்களிலெல்லாம் முன்வந்து பல உதவிகளைச் செய்தவாறுள்ள ஒருவரின் உத்தம குணத்தைக்கண்டு அதிசயிக்கின்றாள். தன்னிடத்திலிருந்து எதனையும் எதிர்பாராது புரியும் அவரது பரோபகாரசீலத்தைப் பாராட்டுகின்றாள். பின்னர், அவர் அடிக்கடி அதிக நேரம் தங்கிப் பேசுவதும், சந்தித்த தருணமெல்லாம் புன்னகை மிகுந்து காண்பதும், மிக மிக நெருங்கி அருகில் வருவதுமான செயல்களைத் தனித்தனியே பிரித்து யோசிக்குங்கால், உடனே அறிவின் உணர்ச்சிகள் அத்தருணம் ஊற்றெடுத்துப் பெருகி, தன் கற்பைக் கவர்வதற்கே இத்துணை மாயவலைகள் வீசப்படுகின்றனவென்பதை யுணரவைத்து விடுகின்றன. மறு நிமிஷமே பெண்மணியும் தெளிவுற்று, முன்பு தான் அதிசயமாகப்போற்றி உயர்த்திய அந்தமனுஷ்யரது உபகாரங்களை அல்பமாகப் பாவித்துத் தனக்கு அவை இனி வேண்டாமென்று திரஸ்கரித்து ஒதுங்கித் தன்னைக் காத்துக்கொள்வதில் முயல்கின்றாள். தான் வேலைசெய்யும் வியாபார ஸ்தலத்திற்கு அடிக்கடி வந்து தன்னுடன் நெருங்கிப் பழகும் ஒருவரது நட்புக்குணத்திற்கு முதலில் அதிசயப்பட்டு சிலாகிக்கும்படியாகிறது. பின்னர் அவர், தான் செய்

தான் சாப்பிடாமற் போனதற்காக மனஸ்தாபப்படக்கூடிய அன்பான இடங்களை ஒருவன் எவ்வளவுவரை பெற்றுள்ளானோ அவ்வளவுக்கு அவன் கொடுத்து வைத்த பாக்கியவந்தனே.

யும் ஒவ்வொரு வேலைகளையும் நுட்பமாய்க் கவனித்து வருவதையும், தன்னோடுகூடத் துணைக்கு இருந்து தனது வேலைகளைச்செய்து பழகு வதையும், தனது எஜமானிடத்தில் அதிகமாக நெருங்கிக்கொண்டு நிற்பதையும் ஒவ்வொன்றாகப் பிரித்துக் கவனிக்க அறிவு தூண்டும் போது, அவ்வழியே வரும் அறிவின் உணர்ச்சிகள் தனது வேலையைத் தந்திரமாகக் கற்றுக்கொண்டு, பிறகு தன்னையே உத்தியோகத்தி னின்றும் விலக்கித் தன் வேலையில் அமர்ந்துகொள்வதற்காகச் செய் யும் கபடஜாலமென்று தெளிவித்து விடுகின்றன. அதற்கப்பால் முன்பு அந்த மனிதனின் நட்புத்தன்மையைப்பற்றிப் பாராட்டி அதிசயித்ததெல்லாம் மண்ணாகி, அவனிடம் ஜாக்கிரதைப்படும்படி யாய் விடுகிறது. நேசித்து உறவாடிக் குடிகெடுப்போர்தான் எல்லை கடந்த அன்பினைக் கொண்டோர் போலுங் காட்டிக்கொள்பவராவார்.

ஃ

விலையில் இன்னும் குறைக்கவேண்டுமென்று ஒரு சிறு வர்த்த கன் ஒரு பெரிய வியாபாரியை மிகவும் வேண்டி வற்புறுத்துகிறான். பெரிய வியாபாரிக்கோ அவ்வளவு குறைந்த விலைக்குத் தருவதில் எவ்வித லாபமுமில்லையென்று தோன்றுகின்றது. ஆயினும், தன் னையே பூரணமாக நம்பி ஜீவிப்பவனென்று பெரிய வியாபாரி அச்சிறு வர்த்தகனைப்பற்றித் தயாளத்துவ சிந்தையுடன் எண்ணுகிறார். அவ் விதம் எண்ணும் அறிவின் உணர்ச்சிகள் அச்சிறு வர்த்தகனின் பிரி யப்படியே நடக்கச் செய்துவிடுகின்றன. ராமன் ஒரு பிரபுவினிடம் ஸதாகாலத்தும் பலவித உதவிகளைப் பெற்றவாறு இருக்கிறான். ஒரு சமயம் ராமன் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடக்கும்படி நேர, அந்தசமயம் பிரபு தமது பலவேலைகளில் அவனைக் கவனிக்க முடியா மற் போகின்றது. ராமனோ மிக்க துயரத்துடன் "ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று பிரலாபமாய்க் கடிதம் வரைகின்றான். அக்கடிதத்தைக் கண்டதும் பிரபு தன்னைத் தவிர ராமனுக்கு வேறு திக்கில்லையாதலின் இவ்விதம் எழுதினானென்று மனம் உருகுகின் றார். அவ்விதம் உருகிய அறிவின் உணர்ச்சிகள் உடனே பிரபு வைப் புறப்படச் செய்து ராமனை வந்து காணும்படி வைத்திட, ராமனும் பிரபுவைக் கண்டதும் அவரைக் கட்டிக்கொண்டு கண்ணீ ருடன் கதறுகின்றான். பிரபுவும் பிணியால் இளைத்து மெலிந்த ராமனைக் கண்டு துயருற்று விழிநீர் பெருக்குகின்றார். இது உண்மை யான அன்பின் உயரிய நிலை. ஃ

அறிவின் தெளிவிலே எழும் உணர்ச்சிகள் மிக்க மகத்துவம் பொருந்தியவைகள். ஒருவரைக் கண்ட அளவிலேயே அவரைப்

ஒருவருக்கு எது துரதிர்ஷ்டமுள்ள வருஷமோ, அதுவே மற்றவர்க்கு மிக்க அதிர்ஷ்டமுள்ள வருஷமாகக் காண்கிறது.

பற்றி ஒருவித தீர்மானம் கொள்ள வைத்துவிடும். முதலில் அறியாமையாலும், அதிசயப்பட்டு மயங்கியதாலும் ஒருவரிடத்து விசேஷ நம்பிக்கை கொள்ளும்படி நேரிடினும், பின்னர் ஒரு சிறு அல்ப சங்கதியிலிருந்தும் பூரணமான தெளிவை யுண்டுபண்ணி ஒதுங்கச் செய்துவிடும். ஒரு சிறு சந்தேகத்திலிருந்தே பெரிய கபடத்தை அறிந்துகொள்ளப்பண்ணும். ஒருவரது நன்றிகெட்ட தன்மைகளையும், ஈனமான மனப்போக்குகளையும் எளிதில் கண்ணுறச்செய்து எச்சரிக்கையாக்கிவிடும். இன்ன சமயத்தில் இன்ன விதமாக நடந்துகொள்ள வேண்டுமென்று அறிவின் உணர்ச்சிகள் போதிக்கின்றன. ஒரு கடிதத்தைத் தான் கோபத்துடன் ஒருவருக்கு எழுதிவிடினும், அங்கு அறிவின் உணர்ச்சிகள் ஊற்றெடுத்துப் பெருகி, அக்கடிதத்தைத் தபாலுக்கு அனுப்பாதவாறு தடுத்துவிடுகின்றன. அந்தந்த இடத்துக்குத் தக்கபடி தனது காரியம் ஆகும் வரையிலும் நடந்து குலாவிவிட்டு, பின்பு முற்றுமே மறந்துவிடுகிறவர்களின் நன்றியறிவின்மையையும் அறிவின் உணர்ச்சிகள் அத்தகையோரைப்பற்றிச் சிந்திக்கச் செய்து அன்னோரது சுயநலத் தன்மைகளை அறியுமாறு விளக்கிவிடுகின்றன. வாய்விட்டுச் சொல்ல நினைத்ததையும் அறிவின் உணர்ச்சிகள் தடுத்து, அச்சொல்லால் நேரும் விபரீதங்களையும் நினைப்பூட்டுவிக்கின்றன. அவசரப்பட்டு ஒரு காரியத்தைச் செய்யாமல் நிதானித்தலென்பது, அறிவின் உணர்ச்சிகளினிடத்திலிருந்தும் சமயோசிதமான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவேதான். இதைத் தழுவியே, ஒரு காரியம் செய்வதைப்பற்றிச் சிலர் "பிறகு யோசித்துச் சொல்லுகிறேன்" என்று கூறுவதுண்டு.

ஃ

உலக வாழ்வில் பிரதிதினமும் மனிதன் ஒரு புது அறிவைத் தெரிந்துகொள்கிறான். அதற்கு முன்பு அவன் கொண்டிருந்த உறுதிகளையோ தீர்மானங்களையோ, அந்தப் புது அறிவினின்றும் எழும் உணர்ச்சிகள் மாற்றியும், திருத்தியும், அல்லது முந்திய சிந்தனைகளையே பலப்படுத்தியும் தேர்ச்சிகொள்ள வைக்கின்றன. ஒவ்வொரு நாளும் கண்டறியும் புது அறிவுக்கு ஏதேனுமொரு ஸம்பவமோ செயலோ் துணைக்காரணமாகின்றது. எதிர்பாராதவாறு சிற்சில தருணங்களில் உற்பவிக்கின்ற அறிவினின்றும் எழும் உணர்ச்சிகள் விலை மதிக்க முடியாதனவாகி, அவையே ஒருவனுடைய உயர்வுக்கும் அபிவிர்த்திக்கும் மேலோங்குதலுக்கும் காரணமாய்விடுகின்றன.

ஃ

ஒரு காரியத்திலே சம்பந்தப்பட்டு அறிவின் துணைகொண்டு அதைச் செய்யப்புகும் தருணம், அந்த அறிவினின்றும் இதுகாறும்

சிந்தனைக்கு எட்டியிராத—நினைவுக்கும் வாராத—ஒரு புதிய உணர்ச்சி திடீரென்று உதயமாகின்றது. பின் அந்த உணர்ச்சி ஊற்று போன்றும் பெருகிச் செல்கின்றது. இந்தப் புதிய உணர்ச்சி அதற்கு முன்பு உண்டானதில்லையாதலின், நூதனமாக உற்பவித்த இந்த உணர்ச்சியினது ஊற்றின் வழியே நெடுகத் தன் கருத்தையும் கவனத்தையும் செலுத்துமாறு தூண்டப் பெறுகின்றான். அந்தத் தூண்டுதலினின்றும் அவன் விரைவிலே ஒரு புது மனிதனாகின்றான். அதற்கு முன்னர் அவன் சோர்ந்து மெலிந்து களைத்திருந்தானாயினும், இப்போதோ இப்புதிய தூண்டுதலால் அதிக சுறுசுறுப்பும் பலமும் படைத்தவனாய்த் தன்னை உயர்த்திக்கொள்கிறான். முன்பு ஏங்கியிருந்தவன் இப்போது ஓங்கிவிடுகிறான். செய்யும் வகை தெரியாது கலங்கி நின்ற காலம் பறந்துவிடுகின்றது. பலரை நம்பி ஏமாறியவன் மாறி மீறிவிடுகிறான். அவன் தெரிந்துகொண்ட புது அறிவும், அந்த அறிவினின்றும் எழும் உணர்ச்சிகளது ஊற்றும் அவனுக்கு ஒரு புது வழியைத் தெரிவித்துப் புதிய சிந்தனைகளையும் புதிய ஊக்கத்தையும் புகட்டுவிக்கின்றது. இவ்வளவும் ஒரு க்ஷணப் பொழுதில் நடக்கும் விசித்திரமாகும். அது கடவுளின் அருள் என்றும் கூறத்தகும். தர்ம நியாயமான அறிவின் உணர்ச்சிகளைப் பற்றி மட்டுமே இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. அறிவு நல் வழியிலும் திரும்பும். விஷம மார்க்கத்திலும் செல்லும். துரெண்ணங்களின் மூலமாகத் தோன்றும் அறிவின் உணர்ச்சிகளுக்கும், அதன் தீய செயல்களுக்கும் இறுதியிலோ, அடுத்த தலைமுறையிலோ சாபமும், துக்கமுமே முடிவு. சர்வ நாசமும் நிச்சயமே.

ஃ

ஆழச் சிந்திக்கும் தன்மையும், எதையும் உற்றுநோக்கிப் பகுத்தறியும் நுட்ப புத்தியும் வாய்ந்தோர்க்கு அறிவின் உணர்ச்சிகள் பெரிதும் ததும்பி, மற்றவர்களுக்குத் தோன்றாத எண்ணங்களெல்லாம் எதிரே வந்து நின்று காட்சி தரும். தாங்கள் ஏமாறிப் போனவற்றிலிருந்துங்கூட ஒரு புது அறிவு கொண்டு பிரகாசிப்பார்கள். ஒவ்வொரு தோல்வியிலும் ஒரு விசேஷப் படிப்பினையை உணர்ந்துகொள்வார்கள். எதையும் அல்பமென்று ஒருபோதும் கருதார்கள். எதனை மற்றவர்கள் இகழ்ந்து கைவிடுகின்றனரோ, அதில்தான் அதிக மகத்துவமுளதென்று மிகுந்த ஊக்கம் செலுத்தி ஆராய முற்படுவர். ஒரு சாமான்ய சம்பவம், சிறு செயல், சிறு பொருள் இவற்றின் மூலமாகவும் ஏனையோர் அறிதற்கியலாத

சாதாரண இடுப்புவலிக்கு நாலு ஐந்து வயதுள்ள குழந்தையைக் கொண்டுவந்து தடவிக்கொடுத்து கையிலே பக்ஷணமோ காசோ தந்து இடுப்பில் ஏறி மிதிக்கச்சொன்னால், வலி யிருக்கிற இடத்தில் அந்தத் திவ்யமான சிறு பாதங்கள் நன்கு பட்டு அழுந்தி அதி சீக்கிரம் வலி தீர்ந்துவிடுமாம்.

சிறந்த தத்துவங்களை ஊகித்துணர்வர். அன்னோர் அறிகிற புது புது அறிவுகளினின்றும் எழுகிற நூதன உணர்ச்சிகள் ஒரு ஊற்று போன்றும் பெருகிக்கொண்டே செல்லும். அதற்கு ஓர் அளவும் எல்லையுமில்லை. இத்தகையோருக்கு இவ்வுலகமே ஒரு சாஸ்திரக் களஞ்சியமாகத் தோற்றும். புஸ்தகப் படிப்பு புஸ்தகத்திலுள்ளதை மட்டுமே போதிக்கும். உலகை உற்று நோக்கி அறியும் கல்வியோ தன் ஆயுளுக்கு அப்பாலுங்கூடத் தெரிந்துகொள்ளவேண்டிய புது அறிவுகள் அனந்தமாய்த் ததும்புவனவாகி எல்லையற்று விளங்கும். நல்லறிவின் உணர்ச்சிகளையும் அதன் ஊற்றுகளையும் நாம் பாராட்டி, அவை நம்முள்ளே எழும் வேளைக்குக் காத்திருந்து கைக்கொண்டு, அவற்றைப் பயன்படுத்தி உயர்வு பெறக்கடவோம். நல்லறிவு எல்லாச் சிறப்பும் தரவல்லதாகும்.

பத்திரிகா பிரயோஜனம்.

நமது பிராவீன கௌரவங்களைக் காத்து நம்மை நாகரீகப்படுத்தி விருத்தி செய்வதும் பத்திரிகையே. நாம் ஒவ்வொருவரும் நடந்துகொள்ளவேண்டிய நியாயா நியாயங்கள் இன்னதென அடிக்கடி நமக்கு ஞாபகப்படுத்துவதுபோல் தூண்டிக்கொண்டிருப்பினும் பத்திரிகையே. உலக நடை, மனுஷிய ஸ்வபாவம் முதலியனவற்றை அப்போதைக்கப் போது வெளிப்படுத்துவதும் பத்திரிகையே. கிணற்றுத் தவளைபோல் இப்பக்கங்களிலேயே உழன்று திரியும் நமக்குப் பல தூர தேசத்து வர்த்தமானங்கள், நூதனங்கள் முதலியவற்றை நேரில் பார்ப்பதுபோல் அறிவிப்பதும் பத்திரிகையே. தேசாபிமானம், ஒற்றுமை இவைகளினால் உண்டாகும் பிரயோஜனகளை எடுத்துக் காட்டுவதும் பத்திரிகையே. மானிட ஜன்மத்திற்கு முக்கிய ஆதாரமான கல்வியை விருத்தி செய்து, அதனால் அடையக்கூடிய அறம், பொருள், இன்பம், வீடு முதலியவைகளைத் தனக்குத்தானே பெறச் செய்வதும் பத்திரிகையே. இன்னும் ஜீவனத்திற்கு ஸாதனங்களாகிய வியாபாரம், கைத்தொழில், விவசாயம், உத்தியோகம் இவைகள் ஒவ்வொன்றின் வழி துறைகளையும் காணவைப்பதுவும் பத்திரிகையே. ஒரே வார்த்தையாகச் சொல்லி முடிக்கில், இச்சென்மம் கடைத்தேறுவதற்கு ஆதாரமாகிய தெய்வ பக்தியை அடையச் செய்து, இன்னது நலம், இன்னது கெடுதல் எனத் தனக்குத்தானே பயந்து நடக்கும் மார்க்கத்தைக் காட்டி, இகத்தில் ஸகல நன்மைகளையும் கொடுத்து, பரத்தில் மோக்ஷ வீட்டிற்கும் வழிகாட்டுவதா யிருப்பதும் பத்திரிகையேதான்.

ஒன்பதாம் வருட வாழ்த்து.

உலகம் உவப்ப நலம்பல தோன்றுவ
அருந்தொண் டாற்றுவ இருந்தமிழ் அணங்கின்
அமிர்தச் சேயாள் அமிர்த குணபோதினி
நாலிரு வருடமாய்ப் பாலியப் பெண்ணுய்
நம்வயின் போந்தே அம்பொன் னருமொழி
அறிவினர் உவக்கும் பரிசெறி மழலைப்
பண்புடன் பழகுமெம் ஒண்குணப் போதினி
ஒன்பதாம் பிராயம் இன்போ டடைந்தனள்.
அடைந்தனம் என்றுமே அடைந்திலா மகிழ்வே.

ஃ

ஆற்றெழுக் கானப் பொற்பு நன் னடையும்,
பொன்னினும் உயரிய நன்மொழித் திரளும்,
அனுபவ அறிவே நணுகிய தாமென
இதமார் நெறியிற் பதமுறப் பொறித்தும்,
விகடத் துணுக்கும், பகுடிப் பேச்சும்,
மாதர் பகுதியும், போதன முறையும்,
இன்சொற் கவிதை நன்மொழிப் புலவர்
கவிதா விலாசமுங், கவிமணிக் குவையும்,
வேண்டுவ பலவும் யாண்டும் உளதாய்
அறிவும் ஒழுக்கமும் மறுவில் காட்சியும்
அறப்பெருந் திறனும் நிரம்பிய இருபிதா
வளர்க்க வளருமெம் வளர்மதி யாளே!
அமிர்த குணபோதினீ! அமிர்தப் பெருக்கே!
ஓங்குக உன்புகழ்! ஓங்குக உன்புகழ்!!
பரிதியுள் ளளவும் விரியுமுன் புகழே!!!

மு. துரைப்பிள்ளை.

சுதேசம்

(ஸ்ரீமான் வி. ஓ. சிதம்பரம் பிள்ளையின் கருத்து.)

ஒருவர் பிறந்த தேசமே அவருக்குச் சுதேசமெனக் கூறலாமெனின் அது பொருந்தாது. ஏன்?

இங்கிலாந்து சென்றிருக்கும் இந்தியர் ஒருவருக்கு இங்கிலாந்தில் ஒரு புத்திரன் பிறப்பானாயின், அப் புத்திரனுடைய சுதேசம் இங்கிலாந்து எனக் கூறாராதலின்.

2

ஒருவருடைய பெற்றோர் பிறந்த தேசமே அவருக்குச் சுதேசமாம் எனக் கூறலாமெனின் அதுவும் பொருந்தாது. ஏன்?

இங்கிலாந்துவாசியாகிய ஒரு இந்தியருடைய இங்கிலாந்திற் பிறந்த புத்திரன், இங்கிலாந்து வாசியாகிய மற்றொரு இந்தியருடைய இங்கிலாந்திற் பிறந்த புத்திரியை விவாகம் செய்து இங்கிலாந்தில் ஒரு புத்திரனைப் பெறுவாராயின், அப்புத்திரனுடைய சுதேசம் இங்கிலாந்து எனக் கூறாராதலின்.

3

இந்தியரிற் பெரும்பாலோர் கருப்பு நிறமுள்ளவராயும், ஆங்கிலேயரிற் பெரும்பாலார் வெளுப்பு நிறமுள்ளவராயு மிருப்பதுபற்றி, வெளுப்பு நிறத்தோர்க்கெல்லாம் சுதேசம் இங்கிலாந்து எனவும், கருப்பு நிறத்தோர்க்கெல்லாம் சுதேசம் இந்தியா எனவும் கூறலாமெனின் அதுவும் பொருந்தாது. ஏன்?

இந்தியர் ஒருவர் குடும்ப சகிதம் இங்கிலாந்தில் பல வருஷங்கள் வசிப்பாராயின், அவருக்குப் பிறக்கும் புத்திரர் பெரும்பாலும் வெளுப்பு நிறமுள்ளவராயிருப்பர். அப்புத்திரர் மற்றொரு இந்தியருடைய இங்கிலாந்திற் பிறந்த புத்திரியை விவாகம் செய்து அங்கேயே வாழ்வாராயின், அவருக்குள் பிறக்கும் புத்திரர் ஆங்கிலேயரை மிகுந்ததோர் வெளுப்பு நிறமுள்ளவராகவே யிருப்பார். ஒரு தேசத்தார் வெளுப்பு நிறத்தராயும், மற்றொரு தேசத்தார் கருப்பு நிறத்தராயு மிருப்பது—முக்கியமாக அவ்வத் தேசங்களின் சீதோஷ்ண நிலையைப் பொறுத்ததேயாம்.

4

ஒருவருடைய நடை உடை பாவனைகளைப்பற்றி அவருடைய சுதேசம் இன்னதெனக் கொள்ளலாமோவெனின், இந்தியர் ஒருவர் ஆங்கிலேயருடைய நடை உடை பாவனைகளையும், ஆங்கிலேயர் ஒருவர் இந்தியருடைய நடை உடை பாவனைகளையும் கைக்கொள்ளக்கூடுமாதலின் அதுவும் பொருந்தாதென்க.

5

பின்னர், ஒருவருக்குச் சுதேசம் இன்னதெனக் கொள்ளுமாறுதான் யாங்ஙனமெனின், ஒருவருடைய உற்பத்திக்கு அவருக்குத் தெரிந்த

வரையிலும் மூற்காரணரா யிருந்த முப்பாட்டன், முப்பாட்டி முதலிய முன்னோர் பிறந்த தேசம் எதுவோ, அதுவே அவருக்குச் சுதேசம் எனக் கொள்ளற்பாலதாம்.

6

ஒருவருடைய உற்பத்திக்கு மூல காரணராயிருந்த ஸ்திரீ புருஷர் களில், ஸ்திரீயின் தேசம் எதுவோ அதுவே அவருக்குச் சுதேசம் எனச் சிலரும், புருஷர் தேசம் எதுவோ அதுவே அவருக்குச் சுதேசம் எனச் சிலரும் கூறுகிற்பர். அவ்விருவர் கொள்கையும் பொருத்தமுடைத்தே யாம்.

7

"ஈதேன் சொந்த ஊர்;
ஈதேன் பிறப்பிடம்"
எனத்தன் னுள்ளே
எப்போ தாயினும்
உன்னுதற் கொண்ணுத்
தன் உணர் வில்லா
ஒருவ னேனும்
உயிருடன் உளனே?
ஃ
அந்நிய நாட்டினில்
அலைந்துபின் தன்னூர்
நோக்கிக் காலடி
போக்கிய காலையில்
உள்ளம் குளிரா
ஒருவனும் உளனே?

பழமொழி குறிப்புகள்

4. மக்கள்.

(8-வது கமலம் 664-ம் பக்கத் தொடர்ச்சி.)

360. "எங்கப்பன் பிறந்தது வெள்ளிமலை
எங்காயி பிறந்தது பொன்மலை."

இந்த மாதிரிப் பெருமை பேசிக்கொள்வதில் ஒரு சிறுவனுக்கு என்ன பிரயோஜனம்? என் தகப்பனர் தாசில்தாராக இருந்தாரென்றால், அந்தப் பெருமை தந்தைக்கே தவிர இவனுக்கு ஒன்றுமில்லை. என் தம்பி டிப்டி கலெக்டரென்றால், அந்தக் கௌரவம், பதவி, மதிப்பு அவரவர்களோடே என்பதுபோல, தனக்காகத் தான் தேடிக்கொண்ட கௌரவமே தனக்குத் தங்கும் என்பதை ஒவ்வொருவருந் தெரிந்துகொள்ள வேண்டும். அவ்வித மின்றி மற்றவருடைய கௌரவத்தைப் பேசித் தான் பெருமைப்படுவதற் கில்லை. அப்படிப் பெருமைப்பட விரும்பினால், அந்தப் பெருமையைப் பெறுவதற்கான உயர்ந்த குணத்தையும் தன்னிலே உண்டாக்கிக் கொள்ள வேண்டும். தாய் தந்தையர் இருவரும் உயர்ந்த குலத்திற் பிறந்தவர்களாக இருந்தபோதிலும், தன் குணம் உத்தமகுணமா யில்லாவிட்டால், தனது தாயின் வம்சத்தையும் தகப்பனின் வம்சத்தையும் எடுத்துச் சொல்லிப் பெருமை பேசுவதில் என்ன பிரயோஜனம்? நல்ல மடத்தில் புல்லுருவி பாய்ந்திருப்பதையும், நல்ல வண்டல் படிந்த படுகையில் முள் மரம் முளைப்பதையும் நாம் காணுகிறோம் ஆகையால், குலத்தைப்பற்றியோ, தன் தாய் தந்தையர்கள் வசித்திருந்த உன்னத நிலைகளைப்பற்றியோ கட்டியம் கூறிப் பெருமை யளப்பதில் ஒருவித லாபமுமில்லை. தனது சொந்த குணசீலமும், தானே உழைத்துத் தேடிக்கொண்ட பெருமையுந்தான் ஒருவனுடைய நன் மைக்குக் காரணமாகும் என்றபடி.

361. "நடந்த பிள்ளை தவழுதாம் தாயார் செய்த
பாக்கியத்தால்."

பெற்ற தாயின் அதிர்ஷ்டத்திற்குத் தக்கபடி அவளுடைய குழந்தை யின் சுகமும் இருக்கும். தாய் மேன்மையான நிலையில் தன் கணவனோடு வாழும்போது குழந்தையும் அதற்குத்தகுந்த செல்வாக்கிலிருக்கும். நல்ல பலத்தோடுமிருக்கும். திடீரென்று கணவன் காலமாக, சொத்துக்களெல் லாம் கடன்காரர்களின் வசமாக, மிஞ்சியவற்றிற்கும் தாயாதிகள் எதிர்ப் பட்டு அபகரித்துக்கொள்ளப் பார்க்க, இவ்வித நிலைக்கு ஒரு தாய் ஆளாவாளா னல், அதற்குத் தக்கபடி அந்த வேளையில் அவளுடைய குழந்தைக்கும் நோய்

தன் வேலைகளை மற்றவனிடம் அதிகம் தந்து பழகுவது பிறகு கொடிய மனஸ்தாபத்துக்கு வழி.

கண்டு இளைத்து உருமாறி, அதற்கு முன்பு நன்றாக ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்ததுபோய், பலஹீனத்தால் நிற்க முடியாமல் தவழ்ந்து நடக்கும்படியான க்ஷீணித்த நிலைக்கும் வந்து விடலாம் தான். நமது தௌர்ப்பாக்கியத்தால் பிள்ளைக்கும் முன்னிருந்த வலுவும் குறைந்து போகக்கூடும் என்பதை இப்பழமொழி எடுத்துக் காட்டுகிறது. நகைகளோடும் விளங்கிய குழந்தை வெறும் கழுத்தும் கையுமுள்ளதாகும்போது, அத்துடன் நோயும் வந்து கூடிக்கொண்டுவிடுவதும் சுலபந்தான். எல்லாம் காலகதி செய்கிற கோலம்தான். உலக வாழ்வு எத்தனையோ பேருக்குத் திடீரென்று தடமாடிப் போயிருக்கிறதல்லவா?

362. "பெண்களுக்குப் பெற்றோரிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் மூப்பில்லை."

ஒரு பெண் எவ்வளவு கிழவியாய்விட்டபோதிலும் அவளுக்குத் தாய் தந்தையர் உயிருடன் இருந்தால், அவர்களுக்கு அந்தப் பெண் ஒரு சிறுமி போலவேதான் அருமையாகத் தோன்றுவாள். இவ்விதமே, ஒரு பெண் எத்தனை வயோதிக மடைந்தபோதிலும் அவளுடைய குழந்தைகள் அவளை உயர்வாகவே பாவித்துக் கொண்டாடுவார்களே தவிர கிழக்கட்டை யென்று கேவலப்படுத்தமாட்டார்கள். ஒரு பெண்ணுக்கு யௌவனம் போய் மூப்பு வந்தால், அப்பொழுது புருஷன் ஒரு சமயம் அவளைத் தாழ்வாக நினைக்கலாமே யன்றி, அப்பெண்ணைப் பெற்றவர்களும், அப்பெண்ணின் வயிற்றில் பிறந்தவர்களும் ஒருபோதும் அவளைக் கேவலம் செய்யமாட்டார்களென்றபடி. இதற்கு இன்னொரு பொருளும் கூறலாம்.

363. "டில்லிக்கு பாச்சா, தல்லிக்கு பிட்டா"

மேலே கூறிய 362-வது பழமொழியுடன் இந்தப் பழமொழியையும் சேர்த்துக்கொள்ளலாம். இப்பழமொழிகளின் கருத்து, ஒரு பிள்ளை என்ன வயது சென்றவனானாலும், என்ன பெயரும் கீர்த்தியும் பெற்றவனானாலும், தன் தாயாருக்கு அவன் பிள்ளைதான். 50-வயதுள்ள ஒருவனை, அவன் தாயார் அக்காலத்தில் பிழைத்திருந்தால், "குழந்தாய்" என்று கூப்பிடுவதைப் பார்த்திருக்கிறோம். அதே மாதிரியாக, அந்தத் தாயாருக்கு, தனது பிறந்தகத்து ஆசையும் எவ்வளவு கிழவியாயினும் உண்டென்று 362-ம் பழமொழி சொல்லுவதாகவும் கொள்ளலாம். (தொடரும்.)

1906-ம் வருஷம் ஜனவரிமீ 17-ம் தேதியுள்ள "லோகோபகாரி"ப் பத்திரிகையின் 4-ம் பக்கம் 3-வது கலத்தின் முதலில் 'குளித்தலை' என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது:—"ஆங்கரை முத்துஸ்வாமி சாஸ்திரிமின் குமாரி ஜானகி என்பவள் தன் புருஷன்மீது ஜீவனாம்ச வியாஜ்யம் கொண்டுவந்த வழக்கில், மேற்படியாளின் புருஷன் மாதம் ஒன்றுக்கு சாப்பாட்டுக்காக 4 ரூபாயும், வருஷமொன்றுக்கு 7-ரூபாய் வீதம் 14-ரூபாய்க்கு 2-புடவையும், மாதம் 1-க்கு 4-அணா வீதம் 3-ரூபா குடிக்கூலிக்கும் ஆகச் சேர்ந்து வருஷத்தில் 65-ரூபாயை 32-8-0 ஆக இரண்டு தடவையில் கொடுக்கிறதாய் ராஜிநாமா எழுதித் தாக்கல் செய்யப்பட்டது" என்று இருக்கிறது. இதில் விசேஷமென்னவெனில், அந்த ஜானகியம்மாள் தமது மனைவி என்பதை "லோகோபகாரி"ப் பத்திராதிபரான ஸ்ரீமான் வி. நடராஜ ஐயர் பத்திரிகையில் வெளியிடாது சாதுர்யமாய் மூடி மறைத்திருந்தது தான்.

மார்க்கோபோலோவின் கதை.

(8-வது கமலம் 687-ம் பக்கத் தொடர்ச்சி.)

II

கூப்லேகான் வயோதிகபருவம் அடைந்த பின்பு மார்க்கோபோலோவுக்குத் தன் ஜன்மதேசம் போகவேண்டுமென்ற விருப்பம் அதிகமாயிற்று. கூப்லேகானுடைய பேத்தியை அவனுடைய பந்துவான பாரசீக தேசத்து அரசனுக்கு விவாகம் செய்யும்படி நிச்சயமாயிற்று. தரைவழியாகப் பெண்ணை அழைத்துச்செல்ல அநேக இடையூறுகள் வழியில் இருந்தன. மார்க்கோபோலோ தான் கடல் வழியாக இப்பெண்ணை யழைத்துப் போய் பாரசீக தேசத்தரசரிடம் ஒப்புவிப்பதாக உறுதிகூறவே, அதற்குக் கூப்லேகானும் சம்மதித்து நிகலோ போலோ, மார்க்கோபோலோ, இன்னும் இவர்களைச் சேர்ந்த வெனிஸ் வர்த்தகர்கள் எல்லோருக்கும் சந்தோஷமாய் அனுமதி தந்து பிரயாணப் படுத்தி யனுப்பினான். பதினான்கு கப்பல்கள் பிரயாணத்திற்குச் சித்தம் செய்யப்பட்டன. யாவரையும் அழைத்துக்கொண்டு சக்ரவர்த்தியினுடைய உத்தரவுச் சீட்டுடன் மார்க்கோபோலோ புறப்பட்டு இந்திய சமுத்திரத்து வழியே சென்றான். மார்க்கத்தில் பல அபாயங்கள் நேரிட்டனவாயினும், அந்த இராஜகுமாரத்தியை மாத்திரம் அவன் வெகு ஜாக்கிரதையாய் பாரசீக தேசம் கொண்டுபோய்ச் சேர்த்தான். இவர்கள் போய்ச் சேர்வதற்குள் அப்பெண்ணுக்கு மணவாளனாக நிச்சயித்த அரசன் இறந்து போகவே, அவனுடைய குமாரனுக்கு அப் பெண்ணை விவாகம் செய்வித்தார்கள். புராதன காலத்தின் செய்திகள் எப்படி யிருக்கின்றன பாருங்கள்!

ஃ

இதற்குப் பிறகு கூப்லேகான் இறந்துபோனதாகச் செய்தி எட்டிற்று. ஆகவே, மறுபடியும் சீன தேசம் போகவேண்டுமென்ற சிந்தையில்லாமலே நிகலோபோலே, மார்க்கோபோலோ முதலியவர்கள் சுதேசத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். அங்கே அவர்களை அறிந்தவர்கள் எவருமேயில்லை. இருபத்து நான்கு வருஷங்களுக்கு முன்பு ஊரைவிட்டுப் போனவர்களை யார் அடையாளம் கண்டு கொள்ள முடியும்? கடைசியில் வெகு வருத்தப்பட்டு இவர்கள் தம் உற்றார் உறவினர்களுடன் சேரவேண்டியதாயிற்று. அப்பால் அனைவராலும் அபிமானிக்கப்பட்டு மார்க்கோபோலே செல்வமும் செல்வாக்குமாக வாழ்வதானான்.

ஃ

இதன்பின்பு வெனிஸ் தேசத்தாருக்கும், ஜினோவா தேசத்தாருக்கும் உண்டாகிய கலகத்தில் மார்க்கோபோலோவும் கைதியாகி ஒரு வரு

உத்தியோகம் பார்க்கும்பொழுதும் அது மிக்க கஷ்டமாகிக் கனவருத்தம் தருகிறது. உத்தியோகத்திலிருந்து விலகும்போதும் பெருமூச்சாகி வேலை போயிற்றே யென்று விசாரப்பட நேர்கிறது.

ஷத்திற்குப் பிறகு சமாதானமுண்டானபின்பு விடுதலை யடைந்தான். மார்க்கோபோலோ சிறையிலிருந்த காலத்தில் தன் நண்பனுக்குத் தான் போய்வந்த தேசஸஞ்சாரத்தின் அற்புதங்களை யெல்லாம் எடுத்துக் கூறினன். பின்பு அவன் அவற்றை யெல்லாம் சேர்த்து ஒரு புஸ்தகமாக எழுதினன். அதுதான் இப்போது பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வழங்குகின்றது.

1254-ம் வருஷத்தில் பிறந்த இந்த மார்க்கோபோலோ பலநாள் வரையில் மிகப் பெருமை பெற்று வாழ்ந்திருந்து, கடைசியில் எழுபதாவது வயதான 1324-ம் வருஷத்தில் இப்பூலோக வாழ்க்கையை விட்டு நீங்கிப் பரலோகம் சேர்ந்தான். மார்க்கோபோலோவின் திடசித்தமும், துணிகரமும், உத்தம சத்திய குணங்களுமே அவனை இவ்வளவு மேன்மைகொள்ள வைத்தது.

கடையில் என்ன வேண்டும் ?

காலையில் வீட்டுக்கு வேண்டிய காய்கறிகளுக்குக் கணவன் தன் மனைவியிடம் "கடையிலென்ன வேண்டும் ?" என்று கேட்கிறன். மனைவியோ, தான் மறைத்திருந்த காரியங்களை அறிந்தே வைத்து மௌனமாக இருப்பதாக நேற்றிரவு தன் கணவன் கூறிய வார்த்தைகளை எண்ணிக் கொண்டு கடுஞ்சினத்துடன் பதில் தராதிருந்து விடுகிறள். இவள் மறைத்த காரியங்களுக்காக ஒரு பெரிய சண்டை பிடிக்கவேண்டியிருந்தும், அதை யடக்கிக்கொண்டு சகித்துள்ள கணவனுக்கு, இவள் ஏதும் சொல்லாமலும் பேசாமலுமிருப்பது மிகுந்த ஆக்கிரகத்தை யுண்டாக்குகிறது. அதையும் பொறுத்தபடி இன்று பொழுது சமாதானமாகப் போகட்டுமென்று வீட்டுக்காரன் ஒதுங்க, இந்த மூட ஸ்திரீயோ, தான் தகாததையும் செய்துவிட்டு, அதனைக் கணவன் அறிந்ததாய்க் காட்டிக்கொண்டதற்குக் கோபமும் கொண்டு மூர்க்கமாய் நிற்கிறள். இவ்விதம் தான் மூர்க்கமாய் நின்றல், தனது தகாத செய்கையைத் தன் கணவன் கேட்கமாட்டானென்ற எண்ணம் போலும்! இச்செய்கைகளினுல் கணவனுக்கு இன்னும் ஆத்திரம் அதிகமாகி விடுகிறது! தன் குடும்பத்தில் அவன் வைத்திருந்த பற்றுதல் விட்டுப் போகிறது. அதன் பலனை அந்த மூட மனைவி கடைசியில் வெறுங்கழுத்தினளாய் அனுபவிக்க வேண்டியதுதான். கணவனை எதிர்த்துக்கொண்டு சுகப்படுவது எது? பதிலுக்குப் பதில் தப்பாது.



லீலா—சங்கர் :—

[ஒரு தமிழ் நாவல். திரிச்சூர் பூந்தோல் ஸ்ரீமான் T. ரெங்கசாமி ஐயங்கார் அவர்கள் இயற்றியது. விலை ரூ. 1-4-0. கிளேஸ் காகிதப் பதிப்பு. 264-பக்கங்கள். இராமகிருஷ்ணபிரதர்ஸ்-திருவனந்தபுரம்.]

"லீலா சங்கர்" மிக்க ஸமத்காரமான கற்பனை. சாமளாவை மன்னித்துச் சேர்த்துக்கொள்வதில்தான் அந்த ஸமத்காரம் அதிகமாக விசேஷப்பட்டுள்ளது. சிம்ஹநாதன் திருந்தினான் என்பதும் சிறந்த கற்பனையாகும். மற்ற ஆசிரியர்கள் சாமளாவைக் கொன்றும், சிம்ஹநாதனை ஊர் நீக்கித் துரத்தியுமே தமது கதையை முடிப்பர். தீயோர் அழிந்தனரெனக் காட்டுதல் எங்கும் சாதாரண பாகம். தீயோர் நல்வழிப்பட்டு நல்லோராயினரென முடித்தலில் தான் அதிக ஸ்வாரஸ்யமுள்ளது. கதாநாயகியான லீலா தன் அருங் காதலன் கள்வனெனத் தூற்றப்பட்ட காலையும் அவனையே விரும்பி மாறாத பிரேமை மிகுவது படிக்கப் படிக்கப் பரவசமே. காணாமற்போன நோட்டுகளைக்கண்டுபிடிக்கும் வகையில்ஒரு சன்யாசிக் கூட்டத்தார் முயன்றனரெனல் புது கற்பனை. சாதாரணமாக அந்தப் பாகத்தை ஒரு துப்பறிவோன் கைக்கொண்டானென்றே மற்றைய ஆசிரியர்கள் முடிப்பது வழக்கம். கள்ள நோட்டுகளை இரும்புப் பெட்டியில் வைத்து, அதை மற்றவர் களவாடவும், அவ்வகையில் துராத்மாக்களை சிக்கச் செய்து திகைக்க வைத்தல் சிறந்த அமைப்பு. உண்மைக் காதலர் ஏமாறிய விதத்தை கமலநாதரின் ஜீவியம் வெகு தெளிவாகக் காட்டுகின்றது. அந்த உண்மைக் காதலின் மகத்துவமே சங்கரனைத் தன் சொந்த மைந்தன்போன்றும் காதலின் ஞாபகமாகக் கொள்ளவைக்கின்றது. கமலநாதர் மகா உத்தமர். லக்ஷக்கணக்கில் களவுபோனதை வெளியிடாது மறைத்து, வேறு தொகைகளைக் கொண்டு தன் வியவகாரங்களைச் சமாளித்து விடுவதும், புதுக் கோட்டை ஒப்பந்த முறையும் அவருக்குள்ள வியாபார நிபுணத்துவத்தை விளக்குகின்றது. சோமநாதப் பிரபுவின் திருவிளையாடலும், தன்னிடத்தில் சிக்கிய சாமளாமூலம் கமலநாதரின் சொத்துக்களைக் கவர்தலும், அதற்குத் துணையாக சிம்ஹநாதனை உபயோகித்தலும், லீலாவை சிம்ஹனுக்கு மணமுடிக்க சூழ்ச்சி தேடலும் சண்டாளத்துவமான தந்திரங்களாகும். சிம்ஹனை லீலா அலக்ஷியம் செய்யும் பாகங்களும், சிம்ஹனின் மதிகுறைந்த செயல்களும் வாசிக்க ரஸமாயுள்ளன. சாமளா தன் துர்ச்செயல்களை மறைத்துக் கமலநாதரை எதிர்த்து வாதாடித் தான் உத்தமியேபோல் காட்டும் இடம் (பக்கம் 83.) அதி ஸ்வாரஸ்யமானது. கதையினூடே சிறந்த அநுபவங்களும், புத்தி போதனைக

இரவிலே ஆகித் தீர்ந்து முடிகிற வேலைகள் பகலிலே ஆகிறதில்லை. இரவு வேலைக்கே ஒரு தனி மகத்துவம் இருக்கிறது.

ளும் நிறைந்து வாசகர்களின் மனத்தில் புது எண்ணங்களைத் தோற்ற வைக்கின்றது. இது ஒரு உத்தமமான நாவல். இதனை ஆக்கிய ஸ்ரீமானைக் கதாசிரியர்களின் கூட்டத்திலே அன்புடனே சேர்த்துக் கொள்ள நல்வரவு கூறுகின்றோம். கதையின் தலைப்பிலன்றி, இடையிடையே பாடல்களை உபயோகிக்க எண்ணுகையில், அந்தப் பாடல்கள் ஆசிரியரே சுயமாகப் பாடிய புதிய கனிகளா யிருந்து வாசகர்களைச் சுவைக்குமாறு செய்யவேண்டுமே யன்றி, எற்கனவே எல்லோருக்கும் தெரிந்த பாடல்களைச் சேர்த்துப் பக்கங்களை நிரப்புதல் கூடாதென்பதும், அதில் சிலாக்கியனையில்லை யென்பதும், தெரிந்த அப்பாடல்களைப் படியாமலே வாசகர்கள் மறுபக்கம் திருப்புவதே அதிகமாதலின், இரண்டொரு குறிப்பான வரிகளை மட்டும் எடுத்து உபயோகித்தாற் போதுமென்பதும், பொதுவாகத் தெரிந்த பாடல்களைக் கதையின் இடையில் சேர்க்காமலே செல்வதுதான் தக்கதென்பதும் நமது கொள்கை.

ஸ்ரீ கிருஷ்ண பற்பொடி:—

[பாக்கெட் 1-க்கு அணா 1. ஸ்ரீமான் K. V. கிருஷ்ணசாமி ஐயங்கார், தோப்புத் தெரு, கும்பகோணம்.]

பற்பொடிகளின் எண்ணிக்கை பகரொணாது. அதனை உபயோகித்து நற்சாக்ஷி தந்தோரெனக் காட்டும் பிரபலஸ்தர்களின் பெயர்களும் அதிகமே. பற்பொடி விளம்பரமும் அபாரந்தான். டப்பியைத் திறந்தால் உள்ளுக்குச் சரக்கு பெரும்பான்மையும் சீமைச் சுண்ணும்பு கலந்ததாகவே காணப்படும். நமக்குக் கிடைத்த இப்பற்பொடியை ஆரம்பத்தில் அலக்ஷியமாகவே உபயோகித்தோம். அதன் குணங்களை அவ்வாறு அலக்ஷியம்செய்யக்கூடியதா யில்லையென்று பிறகு கண்டோம். பற்களுக்கு வேண்டிய துவர்ப்பும், ருசியுள்ள காரமும், மனோகரமான வாசனையும் கொண்டு தந்த ரோகங்களைப் போக்கவல்லதா யிருந்ததை நம் அனுபவத்தில் உணர்ந்தோம். மேன்மேலும் அதனையே உபயோகிக்க விருப்ப முற்றோம். சிறந்த பற்பொடிகளில் இதுவும் ஒன்றெனல் தகும். நாம் சுவைத்த அனுபவத்தையே இங்கு தெரிவித்தோம். நமது புகழுரையைப் பரீக்ஷிக்கவேனும் இந்தப் பற்பொடியை உபயோகித்துப் பார்த்தல் நன்றாம்.

ஒருவனிடமிருந்து பெற்ற ஒருபொருள் தனது கையிலிருக்குமானல், தன்னிடமிருந்து அவன் வாங்கிச் சென்றவற்றைப்பற்றி அதிகமாகக் கவலைப்படத் தேவையில்லை. அவன் தன்னுடையதைக் கேட்க வருகையில், அவன் தராமலே ஏமாற்ற நினைத்துள்ள உன்னுடைய பொருளை வற்புறுத்தி நீ கேட்கலாம். உன்னுடையது உனக்கு வந்தபின் அவனுடையதையும் நீ தரலாம்.

ஆடவர்களின் ரதிசக்தி வெகு காலத்திற்கு நீடிப்பதில்லை. ஏதோ அந்த சக்தியால் அவர்கள் செய்கிற சிறு ஹிம்ஸைகளைப் பொறுத்துக்கொண்டால், பிறகு அவர்களின் தொந்தரையில்லாமல் தனித்துத் தூங்கிக்கிடக்க, இனி வருகிற காலத்திலே வேண்டிய நாட்கள், வருஷங்கள் சுமங்கலியாகவோ, அமங்கலியாகவோ—எவ்வளவோ நீண்டு இருக்கின்றன.

தோல்வி அடைதல் வெற்றி பெறுவதைவிட மேலான படிப்பினையைக் கற்பிக்கும்.

நாகானந்தம்

(8-வது கவலம் 693-ம் பக்கத் தொடர்ச்சி.)

V

5. இனிது முடிவதே இனியது.

நாம் மிக விரும்பும் ஒரு பொருளைச் சிறிது நேரம் காணா விட்டால் மனதில் கவலை யுண்டாவது பிராணிகளின் இயற்கையே; அதிலும், அப்பொருள் பயங்கரமான ஓரிடத்திலிருந்தால் எவ்வளவு கவலை யுண்டாகு மென்பதைச் சொல்லக் கூடுமோ? ஜீவகாருண்யமே ஓருருவங் கொண்டது போன்ற ஜீமூதவாகனன் கடற்கரைக்குச் சென்று வெகு நேரமாகியும் திரும்பிவராதது கண்டு விச்வாஸுவின் மனதில் கவலையாகிய அலைகள் மோதின. உடனே அவன் ஸுனந்தனை யழைத்து "ஸுனந்த! ஜீமூதவாகனன் கருடன் வரும் சமயத்திலும் கடற்கரையிலேயே நின்று விட்டதாகத் தெரிகிறது. ஒருவேளை அவன் வீட்டுக்கு வந்து விட்டானோ என்பதை அறிந்து வா." என்று உத்தரவிட, ஸுனந்தன் ஜீமூதவாகனனுடைய வீட்டுக்கு வந்தான்.

ஃ

ஸுனந்தன் வரும் சமயத்தில் ஜீமூதகேது தனக்குள்ளேயே "நான் இளம் வயதில் உலகத்தை ஒரு குடைக்கீழ் ஆண்டு அளவற்ற கீர்த்தியைச் சம்பாதித்தேன்; இராஜ்யத்தை நிலை நிறுத்தினேன்; மனதை வசீகரித்துத் தவமும் செய்தேன்; புகழத்தக்க மைந்தனையும் நற்குலத்திற் பிறந்த மருமகளையும் பெற்றேன். இப்போது நான் விரும்பத்தக்க பொருள் மரணமே" என்று சொல்லிக்கொண்டிருந்தான். அச்சமயத்தில் சுனந்தன் அவனையணுகி, "ஜீமூதவாகனன்—" என்று சொன்னவுடனே, ஜீமூதகேது விம்மித்து, "ஐயோ! அப்படிக்கூறாதே. ஸுனந்தா; ஜீமூதவாகனனுக்கென்ன?" என்று வினவ, சுனந்தன் "ஜீமூதவாகனன் இங்கு வந்தானா என்பதை அரசர் அறிந்துவரச் சொன்னார்." என்றான்.

ஃ

அவ்வார்த்தையைக் கேட்ட ஜீமூதகேது "என் மைந்தன் அங்கு வரவில்லையா? அவன் என்னிடமும் கூறாமல் எங்கு சென்றான்? வெகு நாழிகையாக அவனைக் காணாமல் என் மனம் பரிதபிக்கிறது. இடது கண் துடிக்கிறது. இதோ நம்முன் விளங்கும் திரிபுவனசக்ஷுவாகிய சூரிய பகவானே நமக்கு நன்மையைச் செய்யவேண்டும்." என்று சொல்லிக் கொண்டிருக்கையில் திடீரென ஆகாயத்திலிருந்து ஓர் சூடாமணி அவனு

பெண் இணங்காமல் நெருப்புத் துணுக்காய் இருந்தால் எவனும் அங்கு நெருங்கமாட்டானாம். எல்லாம் பெண்ணினுடைய குணத்தில்தான் இருக்கிறதாம்.

டைய காலில் விழுந்தது. இரத்தத்தில் நனைந்திருந்ததனுற் சிவந்த அச்சூடாமணியைக் கையிலெடுத்து உற்றுப் பார்த்தபின் ஜீமூதவாகனனுடைய தாய் "மகாராஜாவே! இது நம் புத்திரனுடைய சூடாமணியே" என்ருள். ஸுனந்தன் "அன்று, அன்று! வீணுக வருந்தவேண்டாம். கருடனுல் பக்ஷிக்கப்பட்ட நாகங்களின் சிரோமணிகள் இங்கு பிரதிதினமும் விழுகின்றன இது நாகரத்தின மணியாகவே யிருக்கவேண்டும்" என்று சமாதானங் கூறினுன் ஜீமூதவாகனனுடைய தாய் "ஸுனந்த! இதற்குள் ஒருவேளை என் புதல்வன் அங்கு வந்திருந்தால், அவனை இங்கு அனுப்பு." என்றுரைக்க, "அப்படியே செய்கிறேன்" எனப் பதில் தந்து ஸுனந்தன் அரண்மனைக்குச் சென்ருன்.

ஃ

ஸுனந்தன் கூறிய மொழிகளால் ஜீமூதகேதுவும் அவன் மனைவியும் சமாதானமடையவில்லை. நம் கணவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கவேண்டுமென்ற எண்ணம் மலயவதியின் மனதிலுதித்தது. மனிதர்களுக்குள் நிகழும் நன்மைகளை மனச்சாக்ஷி அவர்களுக்கு அறிவிக்குமன்ருே? ஜீமூதகேது "இது நாக சூடாமணிதானே?" என்று சந்தேகித்தான். இவர்கள் இவ்வாறு வருந்திக்கொண்டிருக்கையில் நாகக்குலத்திலுதித்த ஓரிளம்பிள்ளை அவர்கள் முன்வந்து, ஜீமூதகேதுவை வணங்கி நின்ருன். வருத்தத்தின் மிகுதியால் தழதழுத்த நாவுடைய அப்பிள்ளை ஒன்றுங் கூருமல் திகைத்து நிற்க ஜீமூதகேது "பிள்ளாய்! என் புதல்வனைப்பற்றிய விஷயம் உனக்கு ஏதேனும் தெரியுமாகில் கூறு." என்ருன்.

ஃ

வாசகர்களே! ஜீமூதகேதுவிடம் வந்த இக்குமாரன் சங்கசூடனே. கோகர்ணேச்வரரை வணங்கியபின் கருடனுக்குத் தன்னைப் பலியாகக் கொடுக்கும்பொருட்டு வெகு வேகமாகத் திரும்பிவருகையில். கருடன் தன் மூக்கினுல் ஜீமூதவாகனனைக் கொத்தியெடுத்துச் செல்வதை அவன் கண்டான். உடனே "ஆ! மகாபுருஷ! மிகவும் தயையுள்ளவனே! ஒரு காரணமுமின்றிப் பிறருக்குதவி புரிபவனே! தன்னுயிரைப்போல் மன்னுயிரை நினைப்பவனே! என்னுடைய வார்த்தைக்குப் பதிலுரைக்காமல் எங்கு சென்ருய்? நான் மற்ற நாகங்களையும் காத்துக் கீர்த்தியை அடையவில்லை. உயர்ந்த நாகராஜனுடைய உத்தரவுக்கும் கீழ்ப்படியவில்லை. எனக்குப் பதிலாக வேருெருவனைப் பலியாகக் கொடுத்தேன். ஐயோ! நான் ஜீவித்திருந்தும் பயனென்ன? ஆகிலும் இச்சமாசாரத்தையாகிலும் ஜீமூதவாகனனுடைய பெற்ருேருக்கு அறிவித்து வருகிறேன்." என நினைத்து அவன் அம்மலையைச் சுற்றித் தேடுகையில் அங்கு ஜீமூதகேதுவைக் கண்டான்.

(தொடரும்.)

K. S. ஸ்ரீநிவாசாசாரியார்;

நாமே ஏற்படுத்திக் கொள்ளுகிற நாளைவிட, முன்ஞேர் ஏற்படுத்திய விசேஷ நாட்களில்தான் அதிகமான உற்சாகம் உண்டாகிறது.

வீட்டிலுள்ள கைக்குழந்தைக்குச் சுகமில்லாமற் பாயில் படுத்துவிடில், அவ்வீட்டின் ஸந்தோஷமும் சந்தடியும் அடங்கிவிடுகிறது.

குழந்தைகள் பக்கம்

விசித்திரக் கணக்குகள்.

என் சின்னஞ்சிறு குழந்தைகளே! உங்களுக்கு ஒரு! சிறு கணக்குப் போடுகிறேன். அந்தக் கணக்கின் சூக்ஷ்மம் தெரிந்து விடை சொல்லுங்கள். முன்னே சொன்னவன் தான் கெட்டிக்காரன்.

1.

மாம்பழக் கணக்கு.

இரண்டு பையன்களுக்கு நான் பத்து மாம்பழத்தை வெகுமதியாகக் கொடுக்க, அவர்களில் ஒருவன், தான் 6-பழம் எடுத்துக்கொண்டு, மற்றவனுக்கு 4-பழம் மட்டும் கொடுத்து விட்டு, "நான் உன்னைக்காட்டிலும் அதிகமாய்ப் பழம் எடுத்துக்கொண்டதற்கு இதோ 2-அணா" என்று சொல்லி, அவன் கையில் கொடுத்தான். பழம் விலை என்ன?

☞ விடை:—அநேகர் ஒரு அணா என்று சொல்வர். ஆயினும் சரியான விலை 2-அணா. ஒவ்வொருவனும் ஐந்து பழம் எடுத்துக்கொள்ள வேண்டியதற்கு, அவர்களில் ஒருவன் மற்றவனுடைய பழம் ஒன்றைக்கூட எடுத்துக்கொண்டு அதற்குப் பதிலாக 2-அணா கொடுத்தான்.

2.

மூன்று தம்பதிகள் ஆறு தாண்டுதல்.

இன்னொரு கணக்கு சொல்லட்டுமா? ஏ. பீ. ஸி. என்னும் மூன்று உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய மனைவிமாரும் ஒரு ஆற்றுக்கு வந்தார்கள். அங்கே இருவர் மாத்திரம் போகக்கூடிய ஒரு படவிருந்தது. ஆயினும் படவுக்காரன் இல்லாமற் போனான். ஒரு புருஷனுடைய பெண்சாதி அவரில்லாதபொழுது பரபுருஷன் பக்கத்தில் இராத வண்ணம் அந்த ஆற்றை அவர்கள் எவ்வாறு கடந்து போவார்கள்?

☞ விடை:—(1) ஏ என்பவரும் அவர் மனைவியும் போகவேண்டும். (2) ஏ திரும்பிவர வேண்டும். (3) பீ. ஸி. இவர்களுடைய பெண்டுகள் போகவேண்டும். (4) ஏ யின் மனைவி திரும்பிவரவேண்டும். (5) பீயும் ஸியும் போகவேண்டும். (6) பீயும் அவரது மனைவியும் திரும்பிவர வேண்டும். (7) ஏயும் பீயும் போக வேண்டும். (8) ஸியின் பெண்சாதி திரும்பிவந்து, முதலில் ஏயின்

தன்னைக் கபடனென்றும், நெருங்கிப் பழகத்தக்கவனல்லவென்றும் மற்றவர் அபிப்பிராயப்படும்படி ஒருவன் நடந்துகொள்வானாகில், பிறகு அவன் எவ்வளவு நல்லவனாகக் காண்பித்துக்கொண்டாலும், முதலிலே ஏற்பட்டுவிட்ட அபிப்பிராயத்தை மாற்றிவிடுவதற்கு முடியாது.

பெண்ஜாதியையும், மறுபடியும் திரும்பிவந்து பீயின் பெண்ஜாதியையும் அழைத்துக்கொண்டு போக வேண்டும்.

3.

3புத்திரர்களுக்கு 17-குதிரைகள்.

மற்றொரு சாமர்த்தியக் கணக்கையும் கேளுங்கள். ஒரு குதிரை வியாபாரி தான் சர்குங்காலத்தில் தன் சாலையிலுள்ள 17-குதிரைகளைத் தனது மூன்று புத்திரர்களுக்குப் பின் வருகிறபடி பகிர்ந்து கொடுத்தான். (1) மூத்தவனுக்குத் தனது குதிரைகளில் பேர்பாதி. (2) இரண்டாவது குமாரனுக்கு மூன்றிலொரு பங்கு. (3) மூன்றாவது புத்திரனுக்கு ஒன்பதில் ஒரு பங்கு.

இவ்விதமாகப் பங்கு பிரித்துக் கொள்ள முடியாததினாலே அவர்கள் மூவரும் சச்சரவு செய்துகொண்டிருந்தார்கள். அந்தத் தகராரைத் தீர்க்க எவருக்கும் சாத்தியமில்லாமற் போயிற்று. அப்பொழுது அந்த வழியில் மெலிந்த குதிரையிலேறிப் போய்க்கொண்டிருந்த ஒரு பைராகி அங்கு வந்து பின் வருகிற பிரகாரம் அவர்களுடைய வழக்கைத் தீர்த்தான். அது மிகவும் ஆச்சரியமானது! அது எப்படி என்றால்:—

"அப்பன்மாரே! இந்தக் குதிரைப் பாக்கியத்திற்கு நீங்கள் இவ்வளவு சண்டை போட்டுக்கொள்ள வேண்டுமோ? நான் உங்கள் வழக்கை ஒரு நிமிஷத்தில் தீர்க்கிறேன்" என்று சொல்லி மூத்தவனைப் பார்த்து, "அப்பா! உன் பாகம் எவ்வளவு என்று கேட்டான். அவன் "பேர்பாதி" என்றான். பிறகு இரண்டாவதவனை உன்னது எவ்வளவென்று கேட்க, அவன் "மூன்றிலொரு பங்கு" என்றான். பின்னர் மூன்றாவதவனை உன்னதெவ்வளவென்று வினவ; அவன் "ஒன்பதிலொரு பங்கு" என்றான்.

அடடா! இந்தப் பாகங்கள் எவ்விதமும் பிரிக்க முடியாதே. என்ன செய்வேன்? அப்பன்மாரே! என் குதிரையையும் நீங்கள் இனாமாக எடுத்துக்கொண்டு அதையும் சேர்த்துப் பாகம் செய்துகொள்ளுங்கள் என்று சொல்ல, அவர்களும் சந்தோஷமாய் விலையில்லாமல் ஒரு குதிரை தங்களுக்குக் கிடைத்ததென்று பூரித்துச் சம்மதித்தனர்.

உடனே பைராகி தனது குதிரையையும்கூட அவர்களது 17-குதிரைகளோடு சேர்த்தான். மெலிந்த குதிரையானாலும் இனாமாக வந்த குதிரையல்லவா என்று அவர்களும் சந்தோஷித்தார்கள். மொத்தம் 18-குதிரைகளாயின. பிறகு இந்த 18-குதிரைகளிலே மூத்தவனுக்கு அவனது பாகத்திற்கு பேர்பாதிக் கணக்கின்படி அங்கிருந்த குதிரைகளில் 8-குதிரைகளோடு பைராகியின் மெலிந்த குதிரையையும் சேர்த்து 9-குதிரைகளாகக் கொடுக்கப்பட்டது. பிறகு இரண்டாவது புத்திரனுக்கு மூன்றிலொரு பங்குக் கணக்குப்படி 6-குதிரைகளையும், மூன்றாவது குமாரனுக்கு ஒன்பதிலொருபங்குக் கணக்குப்படி 2-குதிரைகளையும் தந்துவிட்டு. கடைசியில் வெகு நேர்த்தியான சிறந்த குதிரையொன்று மீதியாகவே, அதைப் பைராகி இந்தக் கஷ்டமான வழக்கைத் தீர்த்ததற்

உச்சிக்கு உயர்வதற்கு ஒருவன் செய்த கபட வழிகளும், நன்றித் துரோகங்களும் யாவுமே மூடுண்டுபோக, இப்போது அவன் இருக்கும் உயர் பதவிக்கே அதிகமான பெருமையை உலகினர் அவனுக்குக் கொடுக்கிறார்கள்.

காகத் தனக்கு எடுத்துக்கொண்டான், அதற்கு மூன்று குமாரர்களும் சந்தோஷத்தோடு சம்மதித்தனர். அந்தப பைராகி தனது மெலிந்த குதிரைக்குப் பதிலாகத் தனக்குக் கிடைத்த புதிதான சிறந்த குதிரையின்மீது ஏறிக்கொண்டு ஆனந்தமாய்ப் புறப்பட்டுச் சென்றான். பார்த்தீர்களா! எவ்வளவு சுலபமாய்ப் பாகங்கள் தீர்ந்தன! மூன்று குமாரர்களும ஆச்சரியத்தோடு பரவசப்பட்டார்கள். அவ்வளவே தவிர, தங்களிடமிருந்த நேர்த்தியான குதிரையை வழியிலே போன பைராகிக்குக் கொடுத்துவிட்டு, தாங்கள் மேலிந்துபோன உதவாக் குதிரையொன்றைப் பெற்று ஏமாறிப் போனதை அவர்கள் அறியவேயில்லை. சச்சரவிடுவோர் தங்களின் நஷ்டத்தை உணரார்கள். ஒரு சண்டையின் நடுவே நுழைகிற அன்னியன் எவ்விதமும் தான் லாபமடைவதற்கே வழி தேடிக்கொள்வான்.

பொறாமை மனத்தினரின் போக்கு!

பொறாமை மனத்தினருக்குத் தாம் கட்டிய வீட்டைக் காண்பித்தால் பொறாமை வளருமேயன்றி ஸந்தோஷிக்க மாட்டார்கள். அந்தப் புஸ்தகம் எப்படி யிருக்கிறதென்றால், அது ஒரு காசுக்கும் உதவாதென்பார். எவ்வளவோ சிரமப்பட்டு எழுதிய ஒன்றை வாசித்துப் பார்க்கும்படி தரினோ, முதலில் பத்துப் பக்கங்களை வாசித்து விட்டு, "இவ்வளவு விரிவு எதற்கு, விஷயம் எவ்வளவோ சுருக்கி எழுதலாமே, அமைப்பின் போக்கு நன்றாயில்லையே" என்று நடுவிலேயே பிரசங்கிக்கத் தொடங்கி விடுவர். முற்றிலும் பார்க்காமல் 10-பக்கத்துள்ளேயே இவ்வளவுபொறாமையான அபிப்பிராயமாவென்று, படித்தது போதுமெனத் திரும்பி வாங்கிக்கொள்ளும்படியாகிவிடும். பிறருக்கு நல்லதொன்றைச் செய்ய முற்படுகையில், அதை வெகு தந்திரமாய்க் கெடுத்து விடவும் இவர்கள் முற்பட்டுக்கொள்வர். வெளிக்கோ பரம சாதுவாய் விளங்குவர். பார்ப்பவர்க்கும் "பரிதாப மனிதன்" "மனுஷி" என்று தோன்றும். உள்ளுக்குச் செய்யும் விஷம வேலைகளும், பிறரின் நற்பெயரைக் கெடுக்கிற சண்டாளத் தனங்களும், பொறாமை வெள்ளமும், காலணுக்கு வாங்கியதை ஒரு அணு என்பதும், ஆறணு கூலி தந்துவிட்டு அதை எட்டணு என்பதுமான கபடங்களும் நிறைந்து நாறிக் காணும். தாமும் திருந்தார். மற்றவராலும் திருத்த இயலா.

தன் தீய நோக்கையும், காமுற்ற தன்மையையும் மறைத்துப் பரிசுத்தனைக் காட்ட மனிதன் அதிகப் பிரயத்தனம் எடுத்துக்கொள்கிறான்.



ஹாஸ்ய சஞ்சீவினி



பால்கார அம்மாள்:—(தன் பால் விற்பனையாவதற்காக) உங்களின் வயிற்றுக்கடுப்புக்கு ஆட்டுப்பால் சாப்பிடுவது நல்ல குணத்தைச் செய்யும். உங்களுக்காகக் கறந்து வைத்திருக்கிறேன். கொண்டுவரட்டுமா?

வயிற்றுக் கடுப்புக்காரன்:–(பாலுக்குக் காசு தரவேண்டுமே என்ற நினைவுடன்) தங்கள் பால் இப்போது வேண்டாம். ஏனெனில் நான் புது மருந்து சாப்பிடுகிறேன். அதில் பாதி குணமும் ஆகிவிட்டது.

(இருவரும் தங்கள் மனத்தை வெளியிடாத குள்ளநரிகளே.)

ஃ

உபாத்தியாயர்:–நவரத்தினத்தில் ஏதேனும் நான்கு எழுதுக.

பையன்:—ராமரத்தினம், சுப்புரத்தினம், முத்துரத்தினம், கனகரத்தினம். (S. R. R.)

ஃ

ராமச்சந்திரன்:—நேரில் தங்கள் வீட்டுக்கு வந்தால் அப்போதுமட்டும் வெகு அன்பாகக் குலாவுகிறீர்களே? பிறகு ஊர் சென்று 10-கடிதங்கள் போட்டாலும் பதில் எழுதுவதில்லையே ஏன்?

பூர்ணிமாசந்திரன்:—தன் வீட்டுக்கு ஒரு சத்துரு வந்தாலும்கூட முகங்கொடுத்துப் பேசி உபசரிக்க வேண்டியதே நியாயம்.

ராமச்சந்திரன்:—அப்படியானால் நான் சத்துருவா?

பூர்ணிமாசந்திரன்:–அப்படி நான் சொன்னேனா?

ஃ

தாய்க்கிழவி:—அவனால் ஒரு பணமும் கிடைப்பதில்லை. பின் ஏண்டி அவன் மேலேயே ஆசை வைத்து அலைகிறாய்?

நீலா:—அவர்தான் என் உடம்புக்கு ஒத்தவர் அம்மா.

ஃ

மனைவி:—இந்த வடை நன்றாயிருக்கிறதா?

புருஷன்:—அது நன்றாகவேயிருக்கிறது. உன் குணங்கள் தான் நன்றாயில்லை.

ஃ

ராமன்:—அவன் உன்னை உதைப்பேன் என்றபோது நீ ஏன் பேசாமல் வந்துவிட்டாய்?

பீமன்:—உதைக்காமல் விட்டுவிட்டதால் தான்.

ஃ

தங்கை:—ஆசை வெட்கமறியாது என்கிறார்களே, அதன் கருத்து என்ன?

தமக்கை:—உனக்கு விவாகமாகி உன்னை உன் புருஷன் முத்தமிடும்போது அதைத் தெரிந்துகொள்.

ஃ

பிறரது வீட்டில் சுடச்சுடப் பாலை மடமடவென்று பல தடவைகளில் விருந்தினனாகக் குடித்துவிட்டு, பிறகு அவர்கட்கு ஒரு கடிதமும் போடாமல் பிரிந்துவிடும் நன்றியறிவில்லாத சுயநலப் புலிகள் எத்தனையோ பேர்!

துரை:—(மன எக்கத்துடன்) உன் மனைவி எங்கே? இரண்டு நாட்களாக இங்கே வேலைசெய்வதற்கு வரக் காணோமே?

பட்லர்:—அவளுக்கு இங்கு வரப் பயமா யிருக்கிறதாம். அதற்குப் பதில் என் பாட்டி வந்திருக்கிறாள்.

ஃ

கனவான்:—உன்னைப் புதுப்பெண்ணைப்போல் காண்பித்து எனக்கு விவாகம் செய்துவிட்டார்களே? நீ விதவையென்று ஒரு மொட்டைக் கடிதம் வந்திருக்கிறதே?

புது மனைவி:—தங்களின் அனுக்கிரமிருந்தால் நான் சுமங்கிலியே யாவேன். இல்லாவிடின் இந்த நிமிஷமே நான் விதவைதான். என் வாழ்வு தாழ்வு உங்களின் திருக்கரத்திலிருக்கிறது. நாதா! தங்கள் சித்தம். நமஸ்கரிக்கின்றேன்.

ஃ

சுப்பு:—"காந்தியே திரும்பிப் போ" என்று சுவர்களிலெல்லாம் பெரிய விளம்பரங்கள் ஒட்டினார்களே, அது எப்படி முடிந்தது?

குப்பு:—தன் இஷ்டப்படி காந்தி ஊருக்குள் வந்தார். பிறகு அவர்களின் இஷ்டப்படியே திரும்பிப் போய்விட்டார்.

ஃ

விசாலம்:—சேஷிக்கு சாந்தி முன்பே ஆய்விட்டது. இன்றைக்கு நடக்கிறது இரண்டாவது தடவை!

காமு:—சரிதான் வாயை மூட்டி. உன் சங்கதியும் முந்தி அப்படித்தானென்று உன் மாமி சொல்ல எனக்கும் தெரியுமடி.

ஃ

அவர்:—முட்டாளையும் புத்திசாலியையும் ஒரே இடத்தில் வைக்கமுடியாது.

இவர்:—இருவரும் ஆண் பெண்ணாயிருந்து, இருவருக்கும் கல்யாண முடிச்சு போட்டு விட்டால், ஒரே இடத்திலிருக்கச் சரிப்பட்டுப் போய் விடும்.

ஃ

குற்றவாளி:—(அழுதபடி) பிரபுக்களே! நான் ஒரு நாளும் ஜெயிலுக்குப்போனதில்லையே.

நியாயாதிபதி:—அழாதே அப்பா! அழாதே! இந்த க்ஷணமே உன்னை அவ்விடம் அனுப்பி வைக்கிறேன்.

ஃ

அவன்:—நான் கற்கண்டைப் பார்க்கிலும் இன்பம்.

அவள்:—நான் தேனைப் பார்க்கிலும் அதிக ருசி.

வேறு மனிதன்:—வீண் வார்த்தையாலென்ன பயன்? கற்கண்டும் தேனும் கலந்தாலன்றோ காணக் கூடாத பரமானந்தமுண்டாகும்.

ஃ

அவர்:—மாப்பிள்ளையின் விரலில் போடுவதற்காக உங்களிடம் வாங்கிப் போன மோதிரம் எங்கோ கைநழுவி விழுந்து விட்டதாம். தேடியுங் காணோமாம்.

இவர்:—கல்யாண வீடல்லவா? அப்படித் தான் நடக்குமென்று

தூரமான இடத்திலுள்ள ஒரு நண்பர் மற்றொரு நண்பரின் வீடு தேடி வந்து கண்டு மகிழ்ந்து செல்லுதலானது, பரஸ்பரம் இருவரிடத்துமுள்ள சக்தி தத்துவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து பங்கிட்டுக்கொண்டு பூரிப்பதுபோலுள்ளது.

யினைத்தே நான் பித்தளை மோதிரம் அணிந்து வந்தேன்.

ஃ

குமாரசாமி:—நாலாவது தெருவி லுள்ள எங்கள் வீட்டிற்குள் நடந்த சண்டை உங்களுக்கு எப்படித் தெரிந்தது?

பொன்னுசாமி:—ஆற்றங்கரையில் நடந்த பெண்கள் கச்சேரியிலிருந்து என் மனைவி கேட்டுவிட்டு வந்தாளாம்.

ஃ

நாவின் நுகர்ச்சி:—நுனி நாக்கு கார்ப்பையும் புளிப்பையும், மத்திய பாகம் இனிப்பையும் கசப்பையும், அடி நாவும் பின்புறமும் கொழுமையான வஸ்துக்களின் சுவையையும், சுவைத்துண்ணுகின்றதென ஒரு பண்டிதர் கூறுகின்றார்.

சிலோன் அன்பர்கட்கு

முக்கிய விண்ணப்பம்.

பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகட்கு அனுப்பப்படும் வி. பி. பார்ஸல்கள் வாங்கப் படாமல் திருப்பியனுப்பப்பட்டால், இரண்டு மடங்கு வி. பி. சார்ஜ் கட்டி அவைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டி யிருப்பது போலவே, சிலோனுக்கு அனுப்பப்படும் பார்ஸல்களும் திருப்பி அனுப்பப் பட்டால் இரண்டு மடங்கு சார்ஜ் கட்டிப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று தபால் அதிகாரிகள் உத்தரவிட்டிருக்கின்றனர். ஆதலின், சிலோன் நேயர்கள் தங்கட்குத் தேவையான சாமான்கட்கு ஆர்டர்கொடுக்கும் போது சாமான்கட்குள்ள விலையையும் தபால் சார்ஜையும் சேர்த்து முன்பணமாக மணியார்டர் மூலம் அனுப்பினால் நாங்கள் வீணாக நஷ்டமடைய நேராது என்பதை இதன் மூலமாய் விண்ணப்பித்துக்கொள்கின்றோம்.

நேயர்களின் ஆர்டர்படிக்கு வி. பி. மூலம் அனுப்பப்படும் பார்ஸல்களை மூன்று தினங்களுக்குள் பணம் கட்டி வி. பி. யைப் பெற்றுக்கொள்ளக் கோருகின்றோம். இதை சிலோன் அன்பர்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டுகின்றோம்.

மானேஜர்.

க்ஷேத்திர தரிசனம்.

1. பிரயாகை.

பிரயாகை க்ஷேத்திரத்துக்கு மகம்மதிய அரசர் அலகாபாத் என்று பெயரிட்டார். நமது புராணங்களிலும், ஹிந்துக்களுடைய வழக்கத்திலும் இதற்குப் 'பிரயாகை' என்றும், 'தீர்த்தராஜா' என்றும், 'திருவேணி' என்றும் பெயர் வழங்குகின்றன. பிரம்மதேவர் இந்த க்ஷேத்திரத்தில் அநேக யாகங்கள் செய்தபடியால் "பிரயாகை" என்ற பெயர் வந்தது. இந்தியாவிலுள்ள அநேக புராதன ஸ்தலங்களில் இதுவொன்று. ரிக் வேதத்திலுங்கூட இதன் பெயர் காணப்படுகிறது. இராமாயணம், பாரதம், மத்ஸிய புராணம் இவைகளிலும் பிரயாகை மகா புண்ணியஸ்தலமாகச் சிலாகிக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. ராமாயணத்தில் பரதன் வனவாஸம் சென்ற தன் ஜேஷ்ட சகோதரனைத் திருப்பி அழைத்துவரச் சென்றபோது, அவனும் அவனுடன் வந்த பரிவாரங்களும் சைநியங்களும் அங்கு வசித்து வந்த பரத்துவாஜ மகா முனிவரால் விருந்து செய்யப் பெற்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே பத்தாயிரம் சிஷ்யர்களுடன் இந்த முனிவர் வசித்து வந்தார்.

ஃ

சுமார் 2500—வருஷங்களுக்கு முன்னால் பௌத்த மதத்தை ஸ்தாபித்த ஸாக்கியமுனி பிரயாகை க்ஷேத்திரத்துக்கு வந்து பௌத்த தர்மங்களைப் போதித்தார். சைன தேசத்தாராகிய ஹுவேன்சாங் என்ற பௌத்தரொருவர் அந்த மதத்தை அது பிறந்த இடத்துக்கு வந்து அறிந்து கொள்ளவேண்டுமென்று இங்கு யாத்திரையாக வந்தபோது, பிரயாகை க்ஷேத்திரத்தின் மகிமையைப்பற்றி விஸ்தாரமாய் எழுதியிருக்கிறார். இப்போது எப்படி அந்த க்ஷேத்திரத்தில் இந்தியாவின் நாலுபக்கங்களிலிருந்தும் ஹிந்துக்கள் திருவேணியில் ஸ்நானம் செய்து பாவங்களைப் போக்கிக் கொள்ள வேண்டுமென்று கூடுகிறார்களோ, அப்படியே அக்காலத்திலும் ஜனங்கள் கூடுவது வழக்கமாயிருந்ததென்றும், ராஜாக்களும் செல்வவான்களும் ஸ்நானம் செய்து பிண்டம் போடுவது முதலான புண்ணிய கிரியைகள் செய்வதுமன்றி, பிராமணர்களுக்கும் மற்ற ஜாதி ஏழைகளுக்கும் ஏராளமான திரவியம் தானம் செய்வது வழக்கமென்றும் இந்த சைன பௌத்த யாத்ரீகர் எழுதியிருக்கிறார்.

ஃ

கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் பிரயாகையில் ஒன்று சேர்வதால் அதற்கு இத்த மகிமை உண்டாயிருக்கிறது. சரஸ்வதி நதி இப்போது அந்தரவாகினியா யிருப்பதால், கங்கை, யமுனை இரண்டு மட்டும் அங்கே சேருகின்றன. நதிக்குத் தென்கரையில் 'அக்ஷய வடம்' என்ற ஓர் ஆலமரம் அநாதி காலமாயிருந்து, அதில் யாத்ரீகர்கள் ஏறி நதியில் விழுந்து மாளு

வது முக்தி கொடுக்குமென்று நம்பி, அப்படியே செய்து அநேகர் அந்த மடிவது வழக்கமாயிருந்தது. இந்த வட விருக்ஷத்தை இப்போதுங்கூட ஒரு சிறு குகைபோன்ற இடத்தில் க்ஷேத்திரவாசிகள் பிரயாணிகளுக்குக் காட்டுகிறார்கள். இவ்வாறு இந்த மரத்திலேறி ஜனங்கள் உயிர் துறக்கும் வழக்கத்தை நிறுத்தும் பொருட்டு அக்பர் சக்ரவர்த்தி இந்த மரத்தை உள்ளடக்கி ஒரு கோட்டை கட்டி அதற்குள் ஜனங்கள் வருவதைத் தடுத்தார்.

ஃ

பிரயாகை க்ஷேத்திரத்தில் அநேகம் பழய கோயில்கள் இருக்கின்றன. அவைகளில் வாசுகி என்று புராணங்களில் சொல்லப்படும் சர்ப்ப ராஜனுக்குக் கட்டப்பட்டிருக்கும் கோவில் ஒன்றிருக்கிறது. சமுத்திர கூபம் என்று ஒரு கிணறு உண்டு. அது பூமியின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு வழியால் சமுத்திரத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறதென்ற நம்பிக்கையால் இந்தப் பெயர் அதற்கு வழங்குகிறது. உண்மையில் பிரயாகைக் கருகில் மௌஸாம்பி என்கிற பட்டினத்தில் மகா கீர்த்திவானாய் ராஜ்யமாண்ட சமுத்திர குப்தா என்ற அரசன் பெயரைக்கொண்டு இப்பெயர் அதற்கு வந்தது. பிரயாகை சங்கமத்தில் ஸ்நானம் செய்வது எப்போதுமே புண்ணியமாகக் கருதப்பட்டாலும், தை, மாசி, மாதங்களில் மகா மேலாவென்றும், கும்பமேலாவென்றும் சொல்லப்படுகிற இரண்டு புண்ணிய காலங்களில் ஸ்நானம் செய்வது விசேஷமென்று லக்ஷக்கணக்கான ஜனங்கள் இந்தியாவின் எப்பாகத்திலிருந்தும் கூடுகின்றார்கள். பல்லாயிர வருஷகாலமாகப் பாரத வருஷத்தில் பேர்போன ஸ்தலமாயிருந்துவரும் இந்தப் பிரயாகை தற்போதும் நவீன பிராதான்யமும் கீர்த்தியும் பெற்று விளங்குகின்றது.

இயற்கையிலேயே ஜாதி உண்டு. அவை ஆணும் பெண்ணுமாம். இட்டார், இடாதார் என்ற இரு ஜாதிகளை ஔவையார் படைத்தார். குணத்தினாலும் கருமத்தினாலும் நான்கு ஜாதிகளைத் தான் உண்டாக்கினதாகக் கண்ணன் கூறியிருக்கிறார். நிறத்தினால் இரண்டு ஜாதிகளைப் படைக்க, ஐரோப்பியர்கள் முயன்று வருகிறார்கள்.

தேகாரோக்கிய விதிகள்.

கிரிக்கட்டு டென்னிஸ் விளையாட்டுகளைப் போன்று நமது சுகத்தைப் பாதுகாத்து வருதலும் ஒரு விளையாட்டாகும். ஒவ்வொருவரும் நன்கு தெரிந்து கவனிக்க வேண்டிய முக்கிய விதிகள் எட்டு அடியிற் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவை பின்வருமாறு:—

(1) தினந்தோறும் குளித்துப் புதிய வஸ்திரம் அணிதல். குளிர்ந்த ஜல ஸ்நானம் சுகாதாரமானது. ஒவ்வொரு சாப்பாட்டுக்கு முன்பும் கைகள் நன்ருய்ச் சுத்தம் செய்யப்பட வேண்டும். நகங்களை நாளுக்கொரு தடவையாவது சுத்தப்படுத்த வேண்டும். ஏனெனில் விஷக் கிருமிகள் கலந்த அழுக்குடன் அவைகள் அடிக்கடி சம்பந்தப்படுகின்றன. கைகளை நன்கு சுத்தம் செய்வதால் நமது ஆகாரத்தில் விஷ பதார்த்தங்கள் கலப்பதைத் தடுக்கிருேம்.

(2) பற்களை தினத்திற்கு ஒரு தடவையாவது துலக்கல். நன்ருய்த் துலக்காமையே பல் நோய்களுக்குக் காரணம். சொத்தைப் பற்களால் மந்தம் முதலானவைகள் உண்டாகின்றன.

(3) நாள்தோறும் ஒரு தடவையாவது மலங்கழித்தல். தேகத்திலிருந்து விஷ சம்பந்தமான பொருள்களை அகற்றவே மலங்கழித்தல் இயற்கைச் சாதனமாக அமைந்துள்ளது. மலச்சிக்கலால் விஷ பதார்த்தங்கள் நமது குடல்களில் தங்கி வியாதிகளை உண்டாக்குகின்றன.

(4) சாளரம் திறந்து வைக்கப்பட்ட அறையிலோ அல்லது வெட்ட வெளியிலோ நெடுநேரம் தூங்குதல். இது தேகத்திற்கு இன்றியமையாதது.

(5) காபி அல்லது தேயிலை போன்ற பானீயங்களுக்குப் பதிலாக போதுமான அளவு பால் பருகுதல்.

(6) நாள்தோறும் மரக்கறிகளும், பழங்களும் உட்கொள்ளுதல்.

(7) குறைந்தது 4—கோப்பை நல்ல தண்ணீர் குடித்தல்.

(8) குறைந்தது இரண்டு மணி நேரமாகிலும் தினந்தோறும் வெளியில் சென்று விளையாடவோ அல்லது வியாமம் செய்யவோ வேண்டும்.

U. N. இராமஸ்வாமி நாயுடு.

வாரத்திற்கு ஒருமுறை வருபவர் மாதத்துக்கு ஒருமுறை வரின் அதிக மரியாதை நடக்கும். அவரே வருஷத்துக்கு ஒருமுறை வந்தாலோ ஸ்பெஷல் விசாரிப்புடனே தனி விருந்து!

ஒருவரின் மரணத்தைக் குறித்துத் தந்தி தந்ததற்கு அவர் வராமலே ஒரு அனுதாபக்கடிதம் எழுதிவிடுவதாயிருந்தால், பிறகு தந்தி என்பதே நின்றுபோய் ஒப்புக்குமட்டும் ஒரு கார்டு எழுதித் தொலைப்பதோடு நிறுத்திக் கொள்ளுகிருர்கள்.

கனவின் முடிவு.

பொழுது விடிகிறது; பொழுது சாய்கிறது. என்ன விசாரத்துடன் விடிகிறது; என்ன விசாரத்துடன் மறைகிறது? உலகின்கண் தோற்றும் அந்தகாரத்தை நீக்கச் சூரியன், துரதிர்ஷ்டமான வஸ்துவிலும் சரி, அதிர்ஷ்டமான வஸ்துவிலும் சரி, தூரத்திலும் சரி, அருகாமையிலிருந்தும் சரி, பண்டைக்காலத்திலும், தற்போதும், வருங்காலத்திலும் சரி, எப்பிராணியாயிருப்பினும், இல்லாவிடினும் சரி, சமமாகவே உதயம், அஸ்தமனம் செய்கிறான் என்பதை அறிவோம். இவ்விதமே, பிரமோத மெனப்படும் மாளிகையிலும் அச்சூரியன் பிரகாசித்தான். உலக வாழ்க்கையின் க்ஷணிக சுகபோகத்தில் மதிமயங்கிக் காலத்தை வீணாக வியர்த்தப்படுத்தும் மானிடர்களுடைய துயரத்தைப் போக்குவதற்காக அவதரித்த உத்தமர்களுடைய திவ்ய சரிதை லோகத்திற்குப் பயன்தர வல்லது. ஆதலின், அதை இங்கு கூறுவோம்.

ஃ

சுத்தோதன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு சித்தார்த்தன் என்ற ஒரு புத்திரன் உண்டு. இவ்வரசனுடைய அரண்மனையின் அந்தப்புரத்தில் நல்ல நடையுடை பாவனைகொண்ட ஆடல்பாடல்களை மதுரசுரத்தில் அநேக ஸ்திரீகள் நடத்திக்கொண்டிருந்தனர். சிரிப்பும், கொண்டாட்டமும், மங்கையர்களின் தமாஷ் பேச்சும், உல்லாசமும் நிம்மதியாக நடந்து கொண்டிருந்தது. இப்படி ஆநந்தக் கொந்தளிப்பின் மத்தியில் இருந்தபோதிலும் உலகில் மக்கள் படும் துயரங்களையும் துன்பங்களையும் கவனித்து மனமிரங்கி, அவைகளின் காரணமென்ன வென்றும், அவைகளிலிருந்து எப்படி விடுதலை உண்டென்றும் சிந்தித்துச் சித்தார்த்தன் கவலை யுற்றான்.

ஃ

சித்தார்த்தன் தன் மனைவி கோபாவின் பக்கத்தில் உட்கார்ந்து இதை யோசிக்கலானான். அவன் சொன்னதாவது:-"இவ்வாநந்தமயமாயிருக்கும் கூண்டில் சிக்கிக்கொண்டு இருக்கிறேன். வெளியில் ஏகாந்த இடத்திற்குச் சென்று, "நாம்" எதற்காக ஜன்மம் எடுத்துள்ளோம்? நம் வாழ்நாளை எவ்விதத்தில் கழிப்பது? என்று விசாரணை செய்தால் மனதிற்கு எவ்வளவோ சாந்த முண்டாகும். அஞ்ஞானமெனப்படும் சம்சார ரூபமாயுள்ள சிறையிலிருந்துகொண்டு இறக்கும்வரையில் வீணாக வாழ்நாட்களைக் கழிப்பதின் பலன் யாது? ஒரு க்ஷணப் பொழுதாகிலும் வாழ்க்கையின் இலட்சியம் என்னவென்று யோசிக்கவேண்டாமா?" என்றான்.

ஃ

ஒரு கலாநிபுணனை மதிக்காமல் அலக்ஷியம் செய்கையில் ஏற்படுகிற கௌரவத்தைவிட, அவனை மதித்துக் குலாவுதற்கில்லாத துர்ப்பாக்கியமானது இரட்டிப்பான துரதிர்ஷ்டத்தைக் காட்டுவதாகும்.

இதை கேட்டவுடன் கோபா தன் கணவனுக்கு இப்படிப்பட்ட உதாசீன எண்ணம் உண்டானதைப் பற்றி மிகவும் கவலை யுற்ருள். இவ் வெண்ணங்களை இவருடைய மனத்தி லிருந்து எப்படி விலக்குவது என்று ஆலோசிக்கலானுள். சுகபோகங் களையே அனுபவித்து அறியவேண்டி, கஷ்ட மென்பதே இல்லையென அறியுமாறு, இவருடைய தந்தை சகல வசதிகளையும் அமைத்திருக்கின் ருர். தன் புத்திரனிடத்தில் அன் பும் பாராட்டி வருகின்ருர். தன் புத் திரன் ஒரு விதத்திலும், மனக் கலக் கம் கொள்ளக்கூடாதென்று சகல ஏற்பாடுகளும் செய்து இருக்கின்ருர். தன் புத்திரனுக்கு உதாசீன குணம் நீங்கி, மனக்களிப்பு உண்டாக வேண்டுமென்று கலியாணமும் செய்து வைத்தார். தினந்தோறும் புதிய புதிய ஆடல் பாடல் முதலிய சகல சுகாஸ்பதமான வஸ்துக்களை ஒருங்கே அமைப்பதிலும் ஈடுபட் டுள்ளார். ஒருவித சுகமும் பாக்கி யில்லை. இவருக்கு மட்டும் என் சிந்தை? கணவனை சந்தோஷப்படுத் தத்தான் எனக்குத் தெரியவில் லையோ? இவருடைய விரக்திக்குக் காரணம் என்ன? எவ்விதத்திலும் இவருடைய மனக்கவலையை ஒழிக்க என்னல் முடியவில்லையே என்று விசாரப்பட்டாள் கோபா.

ஃ

சித்தார்த்தனும் மனைவியின் எண் ணங்களை அறிந்து "என் உதாசீனத் திற்கு நீ காரணமல்ல. உனக்கும் எனக்கும் யாதொரு வித்தியாசமு மில்லை. மனைவியும் கணவனும் உடல் நிழல்போலன்ருே?" என்ருர்.

ஃ

கோபாவின் முகம் மலர்ந்தது. சற்று மனக்கவலையும் நீங்கியது. அநேக ஸ்திரீகளின் மத்தியிலிருந்தும் தன்னிடம் மட்டும் அன்பு வைத்து ஆதரித்து வரும் தன் கணவனைப் பெற்றது தான் செய்த பாக்கியமே என்று நினைத்தாள். எப்படிக் கணவ னிடம் தான் கண்ட பயங்கரக் கன வைச் சொல்லாம லிருப்பதென்று ஆலோசித்தாள். பிறகு ஒருவாருகத் துணிந்தாள்.

ஃ

கோபா தான் கண்டகனவை சித் தார்த்தனிடம்சொல்ல ஆரம்பித்தாள். அதுவென்னவெனில் :—"உலகம் பெரும் பிரளயத்தில் மூழ்கியது. மலைகள், குன்றுகள் பிளந்து சின்ன பின்னமாக விழுந்தன. எங்கும் பயங்கரமான இருள் சூழ்ந்தது. சூரிய னின் கிரணங்கள் மறைந்தன. சந்தி ரனும் ஆகாயத்திலிருந்து பூமியில் விழுந்து கிடந்தான். எந்த மஞ்சத் தில் தானும் தன் கணவனும் சுகமாய் சயனம் செய்து வந்தார்களோ, அது அலங்கோலமாயும், மங்களமற்றதா யும், பார்த்தவர்களுடைய மனதில் பரிதாபத்தை உண்டாக்கக்கூடிய நிலைமையிலுமிருந்தது. தங்களுடைய ரத்னமிழைத்த கிரீடமும், ஆபரணங் களும், ஆடைகளும், அங்குமிங்கும் சிதறிக் கிடந்தன. நகரங்களில் பெரும் புயல் வீசியது. கொரமான

ஒரு தினத்து வேலை முடிந்து வேலையாட்கள் வீட்டுக்குப் போகும் போது வெகு குளிர்மையுடன் இன்பமாய்ப் பேசிக் குதூகலப்படுத்தி அனுப்பு. பாடசாலை விட்டபோது வழியில் நின்றுகொண்டு ஒரு கலாசாலைத் தலைவர் எல்லா மாணவர்களையும் ஆசீர்வதித்தனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருந் தார். பிறரை உற்சாகப்படுத்துவதில் அதிக நன்மை உண்டு.

தீ பரவி சகல வஸ்துக்களையும் எரித்தது. நம் அரண்மனையும் இடிந்து விழுந்து நாசமாயிற்று. சக்ரவர்த்தியின் செங்கோலும், கொடையும் உடைந்தது. தூரத்திலுள்ள சமுத்திரமும் பொங்கி வழிந்தது. பூமியும் வெடித்தது. பர்வதமும் அசைந்தது. இப்பெரும் பயங்கரமான கனவை நான் கண்டேன்'' என்றாள். கண்ணீர் சொரிந்தாள். அவளுடைய ஹிருதயத்தில் சுகமென்பதே யில்லையென்று தோன்றியது. எதிர்பாராமல் திடீரென ஒரு கோர விபத்து ஏதாகிலும் வாஸ்தவத்தில் நேர்ந்துவிடுமோ வென்ற பயமும், சந்தேகமும் அவளுடைய மனத்தைக் கலக்கியது. இப்பீதியால் முகமும் பால்போல வெளுத்தது. உயிர் இடிந்தாப்போல இருந்தாள். சாதாரணமாய், உலகில் யானை வரும் பின்னே. மணி யோசை வரும் முன்னே என்று சொல்லுவது வழக்கம். அதுபோல, இக்கனவு இனி வரப்போகும் ஆபத்தின் அறிகுறியோவென்று கவலையடைந்து பயத்தால் நடுநடுங்கித் திடுக்கிடலானாள்.

ஃ

சித்தார்த்தன் தன் பிராண நாயகிக்குத் தேர்தல் வார்த்தைகளைச் சொன்னான். "கனவில் காணும் மனக்கோட்டை வாஸ்தவமாகாது. கனவைக்கண்டு பயப்படுவானேன்? ஒருக்கால் உன்னைத் துறந்து நான் போனாலும், குழந்தையை வைத்துக் கொண்டு சுகமாய் இருக்கலாம். ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டியதில்லை'' என்று தேறுதல் வார்த்தைகளைச் சொன்னான்.

ஃ

இவ்வார்த்தைகள் கோபாவுக்குக் கொஞ்சம் தைரியத்தை அளித்தது. தோழிகளுடைய சங்கீதத்தால் தன்னுடைய மனத்தைச் சாந்தப்படுத்திக் கொண்டாள். பிறகு அந்தப்புரத்தில் இருவரும் நித்திரையில் அமர்ந்தனர்.

ஃ

நிலா வெளிச்சம் பூர்ணமாயிருந்தது. புருஷனும் மனைவியும் கட்டிலில் நித்திரையில் ஆழ்ந்தனர். ஊர் ஓசையும் அடங்கியது. நிச்சப்தமாயிருக்கும் நடு நிசியில் வெகுதூரத்திலிருந்து, "என்ன செய்துகொண்டிருக்கிறாய்? நீ செய்யவேண்டியகடமையைச் செய்துதீர்க்க ஏன் தாமதம்?'' என்று ஒரு அசரீர வாக்கு சித்தார்த்தனுடைய செவியில்பட்டு, அந்தக்கரணத்தைக் கவர்ந்தது. இவனைத் தட்டி எழுப்பியதுபோலத் தோன்றியது. சித்தார்த்தனும் உடனே எழுந்தான். பக்கத்தில் கோபாவும், மற்றுமுள்ளவேலைக்காரர்களுமிருப்பதையும் கவனிக்கவில்லை. அவர்கள் இருக்கின்றார்கள் என்ற நினைவும் இவனுக்குச் சற்றுமில்லை. அவர்களை கண்ணெடுத்துப் பார்க்கவுமில்லை. இவருடைய சரீரத்திலும்

சென்ற 76-வருஷங்களில் இந்தியாவில் 41-ஆயிரம் மைல் நீளமுள்ள ரயில் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகளில் 30-ஆயிரம் மைல் நீள முள்ளவை கவர்ன்மென்ட்டுக்குச் சொந்த மானவை. அவைகளில் 18-ஆயிரம் மைல் நீளமுள்ளவை கவர்ன்மெண்டினாலேயே "ரயில்வே போர்டு'' மூலமாக நிர்வகிக்கப்படுகின்றன. 12-ஆயிரம் மைல் நீள முள்ளவை கவர்ன்மெண்டுக்குச் சொந்தமாயினும், கம்பெனிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. கவர்ன்மெண்டுக்குச் சொந்தமல்லாத பாதைகள் கம்பெனிகளுக்கோ, சுதேச ஸமஸ்தானங்களுக்கோ சொந்தமானவை.

மனத்திலும் பயமும், குழப்பமுமில்லை. சாந்தமாயிருந்தார். ஜன்னல் வழியாக சந்திரனுடைய குளிர்ந்த நிலா அறைக்குள் ஒளி வீசியது. சந்திரகாந்தியும் சித்தார்த்தனுக்கு அருவெருப்பு கொடுத்தாற் போலத் தோற்றியது. உலக வாழ்க்கையை விஷமென்றே கருதினன். "சம்சார வாழ்க்கையின் சுகம் அல்பம்." இது சுகம், அது சுகம் என்று எண்ணி எண்ணி ஆசையின் வலையில் சிக்கி உழன்றும், அங்குமிங்கும் பித்தனைப்போல அலேந்து திரிந்தும், துன்பப்பட்டு மனம் வாடி வருந்தியும், பன்முறை கஷ்டப்பட்ட போதிலும், சுகத்தை தேடுவதில் மனிதனுக்குப் பிராந்தி விலகுவது கிடையாது. அந்தோ! என்ன அறியாமை! இனி தாமதிப்பது ஏன்? எவ்வளவு தாமதம் செய்கிறேமோ அவ்வளவுக்கும் மாயையில் சிக்கிக் கொள்ளுவதே யாகும். நமது பந்தங்களும் கெட்டிப்படும். எக்காரியத்தின்பொருட்டு உலகில் ஜன்மம் எடுத்தோமோ அதைச் செய்ய முடியாமல் போய்விடும்போலிருக்கிறதே. இச்சமயம் போனல் எச்சமயம் வாய்க்குமோ? காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வோம். இச்சம்சார பந்தம் அறவே ஒழியவேண்டும். தாய்தந்தையின் ஆதரவும், மனைவியின் காதலும், புத்திரர்களின் வாஞ்சையும் ஸ்வப்பனமேயாகும். ராஜ ஐஸ்வரியம், சுகம், போகம் முதலியவற்றில் பற்றுதலானது விருத்தி அடைய அடைய, ஆசையும், துன்பமும் ஒழியாது. எவ்வுயிருக்கும் உயிராய் விளங்கும் சாசுவத வஸ்துவின் அழைப்பைத் தடுப்பது மகாதோஷம் ஆகும். கோடிக்கணக்கான ஜீவராசிகள் திக்கற்றுப் படும் கஷ்டங்களிலிருந்து அவர்களை உஜ்ஜீவிப்பதெப்படிஎன்று. கண்டு, அறிந்து அவ்வேழை மக்களுக்குத் தொண்டு புரிவதற்கன்றோ இந்த அசரீரவாணி என்னை அழைக்கின்றது. இதைத் தவிர வாழ்க்கையின் உன்னத தருமம் வேறு ஒன்று உளதோ? கபில வஸ்துவும் அல்பம்; இதில்அகப்பட்டுக்கொள்ளல்கூடாது. ஏழைமக்களின் துக்கத்தை நீக்குவதில் ஈடுபட்டு ஆரம்பித்த காரியத்தைப் பூரணமாக நடத்த சங்கல்பம் செய்வதே சரி. இனி அரண்மனையை விட்டுப் புறப்படத் தயங்குவானேன்?" என்று எண்ணினர். சித்தார்த்தன் உடனே ராஜ்யத்தையும், அரண்மனையையும், அல்பமெனக்கருதி, மனைவியையும் பிள்ளையையும் ஒரு க்ஷணத்தில் தியாகம் செய்து வெளியே புறப்பட்டு, போத விருக்ஷத்தின் அடியில் உட்கார்ந்து தவம் புரியத்தொடங்கினர். கோபாவின் பயங்கரக் கனவும் தன் பலனைக் காட்டிவிட்டது. இவ்வாறு வெளியேறின பெரியாரான சித்தார்த்தன் என்ற புத்த பகவானின் சரிதையைக் கேட்டுப் புத்துணர்ச்சி பெற்று மகிழ்ச்சி யடையாதார் எவர்?

எஸ். வி. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,

ஒருவர் கூற்று:—"இரவெல்லாம் வயிற்றுப் போக்கு. வேஷ்டி, கால்கள் யாவும் மலம். திக்கில்லை, திசையில்லை, எவரும் துணையில்லை, காட்டின் மத்தியில் அனதைப் பிராணியாக விழுந்து கிடந்தேன். வெளியூரிலுள்ளவனின் நிலையை அவனது வீட்டினர் அறிய இயலுமா?

ஒரு நங்கையை அவளது கணவன் விகார நோக்குடன் தொட்டு அனுபவிப்பதற்கும் மேலாக, ஒரு குழந்தை தன் தாயை நிர்மல உள்ளத்தோடும் அதிகமாகத் தொட்டு மகிழ்ந்து குலாவி அனுபவித்துவிடுகிறது.

கவிதா விலாஸம்.

கண்ணைக்கண்டு குறிப்பறிதல்.

கண்—நோக்கிடல் கண்டே கருத்து முற்றும் தெரிந்திடலாம்;
புண்ணுனர் நெஞ்சமும் புன்னகையும் கண் விளக்கும். (1)

ஐயுறவு * கொண்டானேல், அவன் கண் அதை விளக்கும்;
எய்திய வெஞ்சினத்தை இனிதிலே கண் உணர்த்தும். (2)

வஞ்ச மனத்தரையும் வாய்மை மிகு தூயரையும்
அஞ்சாத வீரரையும் அவர் கண் குறித்திடுமே! (3)

குடியர்—தடியர்—குலமாதர்—விலைமாதர்
நடிப்பிலா மெய்க்காதல் நல்லாரைக் கண் உணர்த்தும். (4)

பேசுகின்ற வேளையிலே பெரும்போது சென்றதென
யோசிப்பது(ம்) அவர் கண் இனிதில் புலப்படுத்தும். (5)

நலம் செய்பவன் போலும் நயந்தே உரையாடிக்
கலகம் விளைப்பவனேல், கண்ணே விளக்கிவிடும். (6)

நயந்து மிக வேண்டிடினும் நம் காரியம் மதியான்—
சுயநலத்தே நோக்கம் சூழ்வானைக் கண் உணர்த்தும். (7)

உள்ள உண்மையை ஒளித்தே உரையாடுவோனை அவன்
கள்ளப் புன் கண்ணே கபடம் விளக்கிவிடும். (8)

ஏமாந்த கண்; பொருளை இழந்து மிக ஏங்கும் கண்;
காமாந்தகாரக் கண்; கள்ளக் கண் வகை பலவே! (9)

பேராவலில் மிகுந்து பிறர் சொத்துக்கே அலைவோர்
ஆராரேனும் உண்மை அறிந்திடலாம் கண்ணாலே! (10)

கடனைக் கொடுத்துவிட காத்திருக்கும் தூயனையும்
கடத்திவிட எண்ணும் கயவனையும் கண் உணர்த்தும். (11)

வேதாந்தியின் விழிகள் மேற்செல்லும் நோக்கினவாம்;
தீதாம் புவியாசை சேர்வோர் கண் கீழ் நோக்கும். (12)

நாணுங் கண்; நற்குணக் கண்; நகை போலியும் இன்பக்கண்;
கோணும் மனக்கண்; கோள் மூட்டும் வஞ்சகக் கண். (13)

திருட்டுக் கண்; திகைக்கும்கண்; திக்கற்றவர்தம் கண்;
உருட்டுங் கண்முதல் வகைகள் உரைப்பரிய பற்பலவே! (14)

ஆங்கிலர் கண்; சீனர் கண்; அமை இந்தியர்தங் கண்;
ஓங்கும் உயர் தீரர் கண்—உரைப்பரிய பலவகையே! (15)

இரப்போர் கண் கெஞ்சிடுமாம்; ஈவோர் கண் அன்புடைத்தாம்;
பரமனைப் பார்க்குங் கண் பரமானந்தம் தருமே! (16)

ஆரியூர்—வ. பத்மநாப பிள்ளை.

*ஐயுறவு—சந்தேகம்.

தசரதரின் தவறு.

[தசரத சக்ரவர்த்தி தமது பக்கத்தில் அழுது வந்து அமர்ந்த கோசலைக்கு, ஆதி நாளில் தாம் வேட்டையாடச் சென்றபோது விதிவசத்தால் செய்துவிட்ட தவறையும், அதற்காகத் தமக்குற்ற புத்திரசோக சாபத்தின் விவரத்தையும், அதனால்தான் இப்போது இராமன் கானகம் சென்றானென்பதையும் பின்வருமாறு அறிவிக்கின்றார்.]

அருமைக் குமார னாகிய ராமன்
கருது சண்டாளி கைகேசி யாலே

காட்டுக்குச் செல்லக் கடமை வாய்த்தது
வாட்ட மெனக்கு மரண சமீபம்

ஆச்சு தெனக்குள் அறிந்தது சொல்வேன்
ராச்சியக் காப்பில் நான் வேட்டையாட

முன்னொரு நாளில் முயற்சியாய்ச் சென்றேன்
அன்னமே! கோசலை யாரணங்கே! கேள்

புண்ணியப் பார்ப்பான் புகழ்ப் பத்தினியுடன்
தண்ணீர் தாகந் தணித்திட வேண்டி

ஏக புத்திரனை யினிய சற்குணனை
தேகமெலியவே சேர்தோட் சுமையில்

மாதா பிதாக்கா வடியெனத் தூக்கி
ஆதாரமாய் வரும் அன்புடையானை

கமண்டல மெடுத்து கரைநதி யடுத்து
அமைந்த சலம் பெற அனுப்பின ரவனும்

மொண்டுகொண்டிருந்தான்; மும்மத யானை
கண்டுநானெய்யக் காத்தொளித்திருந்தேன்

அவ்வேளை விதியால் அறிவு மயங்கி
ஒவ்விய யானை நீ ருறிஞ்சியதென்ன

குழந்தை இல்லாதவர்கட்கு சுகநித்திரை யுண்டென்று பிள்ளை பெற்றவர்கள் சொல்லும்போது, குழந்தை பிறவாமைக்காகத் தாங்கள் முன்பு நித்திரையின்றி எங்கியதையும் சேர்த்து யோசிக்க மறந்துவிடுகின்றார்கள்.

எண்ணி நானம்பை எடுத்தெறிந்தேன்
துண்ணென மறையோன் சோகமாய் வீழ்ந்தான்

கூவினான் புலம்பினான் கூக்குரலிட்டான்
பாவிநான் மிக்குப் பயந்து நொந்தயர்ந்து

தந்தைதாய் காப்போன் றன்மொழிப்படியே
வந்து நானவரை வணங்கி விவரம்

உரைக்கக் கேட்டவர் உளங்கரைந் தழுதே
இரக்கமாய்ப் பின்பெனக் கிட்டனர் சாபம்

'புத்திர சோகத்தால் புவி மீது
செத்திடுவோ'யெனத் தேவியே அந்த

வினை விளை கால மிதுவே யாதலால்
எனை யகன் றிராம னேகினா னினிமேல்

மண்ணாசை வேண் டேன் மானே!
விண்ணே புகவும் விரும்பி நின்றேனே.

நண்பர்கள் தூரத்தில்! பகைவரோ அருகில்!

ஹா! கடவுளே! பிராணபதமானவர்களை யெல்லாம் எந்தக் காலத்துக்குமே தூரமான ஊர்களிலேயே வைத்துக் கடிதங்களிலேயே அவர்கள் நெடுநாளைக்கும் பேசிக்கொள்ளும்படி செய்கிறாய்! எப்போதோ ஒருகாலம் சந்திக்கவிட்டு, சிலநாட்களிலோ வாரங்களிலோ பிரித்து, இவ்விதமே ஜீவகாலமுற்றும் பிரிவினையே கதியாக்கிவிடுகிறாய்! இறந்த முகத்தையும் காட்டாமல் மசானம் சென்ற மறுநாளில், அவர்கள் வியாதிப்படுக்கையுடன் கிடந்த வெறுந் தரையைப் பார்த்து அலறிப் புலம்பும்படி புரிகின்றாய். பரஸ்பரம் பிரேமை கொண்டு பிரிதித்ததற்கு ஆ! இறைவா! நீ செய்யும் உதவி இதுவேயோ? ஆனால், பகைவர்களையும், அன்பற்றவர்களையும், பழித்துப் பேசுவோரையும், பக்கத்திலேயே இருக்க வைக்கிறாயே? அது ஏனோ?

உன் மூஞ்சியைப் பாரு!

“ஏண்டி! என்னுடைய மூஞ்சி என்னடி கோணிப்போனது? எதற்காக உன் முகத்தைக் கோணிக்கோணி இழுத்து என்னைப் பழிக்கிறாய்? என்னைப் பழிக்கிறதற்கு உனக்கு என்னடி அவ்வளவு பெருமை மிஞ்சி நிமிர்ந்துவிட்டது? என்னைப் பழித்துக் குதித்துக் கோணிக்காட்டினாயே? என்னைப் பழிக்க உனக்கு யோக்கியதையுண்டாடி? என் காலில் ஒட்டிய தூசி கூடப் பெறமாட்டாயே? எந்த அந்தஸ்திலே காலை நீட்டிக்கொண்டு இப்படிப் பழிக்க வந்தாயடி? பாரிசவாயு வந்தவர்களுக்கும், வலிப்பு கண்டவர்களுக்குமல்லவா இப்படி வாய் கோணிக்கோணி இழுக்கும்! கிட்ட வா நாயே என்றால் மூஞ்சியை நக்க வருகிறாயே! கட்டிக்கொண்ட புருஷனைப் பழித்துவிட்டு பதிவிரதைத்தனம் காட்டுகிறாயா? எந்த சின்ன சங்கதிக்கும் உடனே சண்டையா? எப்போது பார்த்தாலும் கலகவீடா? இன்றைக்குத் தின்ற சாப்பாட்டின் திமிர் இப்படிப் பேச வைக்கிறதா? புருஷன் - மனைவி என்றால் அந்நியோந்நியம் இருக்கவேண்டும்; அன்பு பொங்கவேணும்; அந்த சங்கதி கடுகளவும் காணோமே! பட்டி முண்டைக்கு வாய் கொழுத்துப் போச்சுது! சண்டையிட வேறு எவரும், எந்த திக்கும் கிடைக்கவில்லையென்று என்னிடம் வருகிறாளாக்கும்! நான் இதற்கெல்லாம் அடங்கிவிடுகிற பேர்வழியல்ல” என்றார் சாமுபிள்ளை தன் மனைவி காளியைப் பார்த்து.

ஃ

காளி:—பெட்டியில் வைத்த பழங்கள் குறைகிறதென்று எப்படிச் சொல்லலாம்? நான் எடுத்துத் தின்றுவிட்டேனா? நான் என்ன திருடியா? அந்த நாறிப்போன பழங்கள் எனக்கு என்னத்திற்கு? காணோமென்றால் இந்த வீட்டில் எடுப்பவர்கள் யார் இருக்கிறார்? எங்கே போச்சோ! என்னவோ! அதற்காக என்மேலே சொல்லுகிறதா? உன் மூஞ்சியைப் பாரு!

சாமுப்பிள்ளை:—பின்னும் பின்னும் என்னைப் பழித்துப் பேசாதே. என் மூஞ்சி உன் மூஞ்சிக்கும் தாழ்ந்துவிடவில்லை. பெட்டியில் வைத்தது குறைகிறதென்றால், கூட இருந்து தேடிப்பார்க்கவேணும். ஒத்தாசையாகப் பக்கத்திலிருந்து உதவவேணும். அதை விட்டுவிட்டு, திடுதிடென்று ஓடிவந்து, நானா எடுத்தேன் என்று வாயைப் பிளந்துகொண்டு சண்டைக்கு வருகிறதா? காணாமற்போனது ஒரு பக்கமிருக்க சண்டை இன்னொரு பக்கமா? சண்டை பெரிதாய்விடுகிறதே தவிர காணாமற்போனதில் கருத்து கவலை காணோமே! பெட்டியில் வைத்தபழங்களில் இரண்டு குறைகிறது என்றேனே தவிர, நீஎடுத்தாயென்று சொன்னேனா? உன்மேலே பேசினேனா? அதற்குள்ளே திடுதிடென்று ஓடிவந்து என் உன் சிடுமூஞ்சியைக்

பிடி ஆகாரத்தை உட்கொள்ளும் பொழுதும், அந்த ஆகாரத்தை நமக்குக் கிடைக்கச்செய்த பகவானை நாம் முதலில் நினைத்துத் துதிக்கவேண்டும்.

காட்டுகிருய்? "நானு எடுத்தேன்?" என்று ஏன் கத்திப் பேசிக் குலேக்க வருகிருய்? சும்மா தெருவிலே ஒருவன் தன்பாட்டில் போனுலுங்கூட வீதியில் விழுந்து கிடக்கும் எச்சில் நாய் அவனைப் பார்த்து "ளொள் ளொள்" என்று குலேக்குமாம்! பழம் குறைகிறதென்று உன்னிடம் கேட்டேனு? உன்னைக் கூப்பிட்டேனு? என்மட்டில் நான் தேடிக்கொண்டிருக்கும்போது நீ ஏன் இங்கே வந்து நாய்போல் குலேக்கிருய்? அடி! பொறுமை யற்றவளே! அல்பக் கட்டையே! உன் அல்ப புத்தி இப்படிப் பேச வைக்கிறதா? நீ ஒரு கேடு கெட்ட அல்ப மனுஷி, அற்பத்தனத்துக்குத் தகுந்த புத்திதானே இருக்கும். பொழுதும் போச்சு, இரவும் வந்தாச்சு, தூங்கப்போகிற வேளேயிலே உன் பட்டித்தனத்தைக் காட்டிக்கொண்டு எட்டி எட்டிக் கிட்டி வந்து நீட்டுகிருயே? போன ஜென்மத்திலே நீ நாய்ப் பிறப்பா? அதனுல் தான் நீ இப்படி நடுவே வந்து குலேக்கிருயா?

காளி:—மூஞ்சியைப் பாரு! ஹே-ஹோ—ஹூ என்று ஓயாமல் ஏன் பேசணுமோ! ஒரு பேச்சைஎடுத்தால் அதை விட்டு விடுகிறதில்லேயே? சும்மா நோண்டி நோண்டி நீளமாய்க் கத்தியபடியே இருக்கிறதா? என்னே ஏன் வீணுக இப்படிப் பிடுங்கிப் பிடுங்கிப் புண்ணுக்கவேணுமோ? ஓயாமல் கூச்சலிட்டு வெடு வெடுக்கிறதா?

சாமிபிள்ளே:—ஆமாம்! அது என் வழக்கம். ஒரு சிறிய சங்கதியை எடுத்துக்கொண்டு ஒருமணி நேரம் அதைக்குறித்து வளர்த்தி விவரித்துப் பேசுவது என் ஜென்ம சுபாவம். அவரவர் செய்யும் தொழிலுக்குத் தகுந்தாற்போல் அவரவர் சுபாவமும் இருக்கும். சங்கீதம் கற்றவன் எந்த இடத்திலும் தன் விரல்களேத் தட்டிக்கொண்டே தன் சங்கீத ஞானத்தைக் காட்டியபடி இருப்பான். நான் உபாத்தியாயரல்லவா? காலேமுதல் மாலே வரையில் பையன்களிடம் ஓயாமற் பேசித்தானே பொழுது போக்கவேணும். அந்தப் பேச்சின் மூலமாகத்தானே வயிற்றுப்பிழைப்பு மிருக்கிறது. ஒரு வார்த்தைக்குப் பத்து அருத்தம் பையன்களுக்குச் சொல்லுவதுபோல, நீ பேசிய ஒரு வார்த்தையை எடுத்துக்கொண்டு அதற்கு ஓயாமல் பதில் பேசியபடியே இருப்பதுதான் என் போக்கு! அதுவே என் பிறவிக்குணம். அதை மாற்ற என்னுலும் முடியாது, உன்னுலும் முடியாது. என்னிடம் ஒருவர் வாய்த்திமிர் காட்டவந்தால் நான் இலேசில் விடுவதில்லே. ஆயிரம் தினுசுகளில் திருப்பித்திருப்பி பதில் பேச்சு போட்டுக்கொண்டேதான் போவேன். ஒரு மணியோடு ஒரு நாளோடு என் வாய் ஓயாது; பல நாளேக்கும் மறவாமல் அந்த வாய்த்திமிருக்குப் பதில் சொல்லிக்கொண்டே இருப்பேன். வலிய எந்தச் சண்டைக்கும் நான் போகிறதுமில்லே; என்னிடம் வந்த சண்டையைச் சுலபத்தில் விடுகிறதுமில்லே. "உன் மூஞ்சியைப் பாரு" என்று என்னேப் பழித்த பட்டித்தனத்தை, நாளேக்கு நீ சிரித்துக்கொண்டு ஏதாவது ஒரு சங்கதிக்கு என்னிடம் வரும்போது சொல்லிக்காட்டி உன் பழிப்புப் புத்தியை ஞாபகப்படுத்துகிறேன். எதையும்நான்மறந்துவிடுகிறவனல்ல. அவ்வளவுக்கு மறதியிருந்தால் நான்

ஒரு மனிதனுடைய எதிலும் பட்டுக்கொள்ளாத தன்மை வெகு நன்ருகத் தெரியினும், தெரியாத பான்மையிலேயே அவனுடன் குலாவுகிருர்கள். காரணம், அவன் ஒரு பணக்காரச் சீமானுக இருத்தலினுலேயே தான்.

உபாத்தியாயர் வேலைக்கு வருவேனு? எனக்கு அந்த வேலைதான் கிடைக்குமா? நீ நாலு எழுத்துப் படித்தறிந்தவளா யிருந்தால் என் கலா ஞானங்களை அறிந்து என்னை மதிப்பாக நினைத்து நடந்துகொண்டு போகத் தெரியும். நீயோ ஒரு எழுத்தும் அறியாத மூடம்! தினம் சாதம் வடிக்கவும், பிள்ளைகளைப் பெறவும் தான் உனக்குத் தெரியும். வேறு எந்த சங்கதிக்கு நீ எனக்கு உதவியாக இருந்து கோட்டைக் கட்டிக் கொடியேற்றி விடப்போகிறது? அந்தப் பவிசி ஏதுமில்லை! ஒரு நல்ல விஷயத்தைக் குறித்து உன்னுடன் சம்பாஷிக்க முடியுமா? அதை அறிகிற புத்திதான் உனக்கு உண்டா? சும்மா வாய் அரட்டை அடிக்கத்தான் உனக்குத் தெரியும். இன்று காலையிலே பால் ஊற்றியிருந்த டம்ளரில் நான் உண்ட மருந்தின் நாற்றம் வீசுகிறது என்று வீணுக்குப் பேசினாய். அதில் வேண்டுமென்றே ஒரு கலகம் எழுப்ப நினைத்தாய். அந்த டம்ளரில் நான் மருந்து கலந்து அருந்தவே யில்லை. ஏதாவது ஒரு கலகம்சண்டை வேணும் உனக்கு!

காளி:—என் சும்மா பேசுகிறதோ? அந்த டம்ளரில் மருந்து நாற்றம் இல்லாமல் நான் சொல்லமாட்டேன். மருந்தை அதில் ஊற்றாமற்போனாலும், மருந்துக் கையால் தொட்டிருந்து தான் நாற்றம் வந்திருக்கும்.

சாமுபிள்ளை:—டம்ளரில் எந்த நாற்றமும் வரவே வராது. நான் மருந்துக் கையாலும் தொடவே யில்லை. நீ ஏதாவது சொட்டு வார்த்தை சொல்ல நினைத்து, நான் டம்ளரில் மருந்தை ஊற்றி யிருப்பேனென்றெண்ணி வெறுமனே மருந்து வாடை வருகிறது என்றாய். பிறகு நான் டம்ளரில் அருந்தவில்லை யென்றதும், இப்போது மருந்துக்கையாலே தொட்டிருக்கலா மென்கிறாய். அதுவுமில்லை. சும்மா வாய்வீச்சு வீசப் பார்த்து சொட்டு வார்த்தை பேச எண்ணினாய். அது என்னிடம் பலிக்காது. உன் ஒவ்வொரு செய்கையையும் எழுத்து எழுத்தாக எடுத்துக் காட்டி உன் திருவாயை மூடச் செய்தால் தான் குந்தினையா குரங்கே என்று நீ அடங்குவாய். எவ்வளவோ உழைத்து சம்பளம் வாங்கி வீட்டில் கொண்டு வந்து கொட்டுகிறதற்குக் கலகம் சண்டையா கூலி? வீட்டு சம்சாரத்திலே செலவிடுகிறவனுக்குக் கஷ்டம் தெரியும்; அவிழ்த்துக் கொடுப்பவனல்லவா வருத்தத்தை அறிவான். சம்பாதிக்கிறவனுக்கல்லவா பிழைப்பின் திகைப்பும் பாடும் தெரியும். ஏதோ கடவுள் கிருபையால் கைக்குக் கிடைப்பதைக் கொண்டு சந்தோஷமும் சமாதானமுமாய் வாழப்பார்த்தால் அதைக் கெடுத்துக் கலகப்படுத்தும் அலங்கோல அறிவீனத்தை யாரிடம் சொல்லி அழுகிறது? உழைத்துத் தேடி வந்து படி யளக்கிறவனுக்கு வீட்டில் கொஞ்சமாவது சந்தோஷம்—சமாதானம் இருக்கவேண்டாமா? 'உன் மூஞ்சியைப் பாரு" என்றாயே? உன் மூஞ்சிக்குப் பூசிக்கொள்ளக் கிடைக்கிற மஞ்சள் யாராலே என்று நினைத்துப் பார்த்தாயா? நான் படித்த படிப்புக்கு இப்படிக் கல்லாத மூடமா மனைவியாக வரவேணும்? எழுத்து வாசகம் அறியாதவள் மட்டி, ஏதும்

ஒருவரை வியாதிப் படுக்கையில் கண்டு விட்டுத் தங்களின் ஊர் செல்லுவோர், பிறகு எப்படி யிருக்கிறதென்பதற்கு ஒரு கடிதம்கூட எழுதுவதில்லை. ஆனல், நேரில் வரும்போதோ வெகு விசுவாசமாகக் கொஞ்சுவதில் குறைவில்லை.

அறியாள் அவள் சுரண்டுவாள் சட்டி, கழுத்தில் அவளுக்குத் தாலியைக் கட்டி, காரியமில்லே— அது காசுக்கு நஷ்டி என்று வேதநாயகம் சொன்னது வெகு சரி. ஐயோ! விதியே! என்று கூறியபடி சாமுபிள்ளே நித்திரை செய்யச் சென்ருர்.

ஃ

மறுநாள் பொழுது விடிந்தது. அன்று புதன்கிழமை. நேற்றிரவு சண்டையானதால் இன்று காலையில் தனக்கு எண்ணெய் ஸ்நானம் கிட்டாதென்று எண்ணமிட்டபடி சாமுபிள்ளே படுக்கையிலிருந்து எழுந்தார். காளி அவரின் அருகே காய்ச்சிய எண்ணெயைக்கொண்டு போய் வைத்து, “நேரமாகிறது எண்ணெய் தேய்த்துக் கொள்ளுங்கள்” என்ருள்.

ஃ

சாமுபிள்ளே:—ஏது இன்றைக்கு இவ்வளவு சுறுசுறுப்பில் புத்திசாலியாய் நடக்கிருயே? உன் குணம் ஒரு வேளைக்கு இருந்ததுபோல் இன்னெரு வேளைக்குக் காணுமே? முதல் நாள் சண்டையானல் மறுதினம் எட்டுமணி வரையில் முக்காடிட்டுத் தூங்குவதும், தலைவலி, உடம்புவலி, என்று சொல்லிப் படுத்தபடியே யிருப்பதும் உன் வழக்கமாயிற்றே? அன்று அன்னப்பிடி வெல்லப்பிடி யாகுமே?

ஃ

காளி:—என்னேடு மறுபடியும் சண்டைக்கு வரவேண்டாம். உங்களேத்தவிர எனக்குத் திக்கு வேறு யார் இருக்கிருர்கள்? உங்களுக்கு வேண்டியவர்களின் வீட்டிற்கு நீங்கள் போய் நன்ருய் உண்டுவிட்டு வருவீர்கள். எனக்கு அப்படிப் போய்வர எந்த இடமிருக்கிறது? “இவளுக்கு யாருமில்லேயே, நம்மையே நம்பின பிராணியாயிற்றே” என்கிற விசுவாசம் உங்கள் நெஞ்சிலே யிருக்க வேணும். நேற்று ஒரு வார்த்தைக்கு எவ்வளவு தூரம் பேசினீர்கள்? அப்படி யெல்லாம் நோகச் செய்யக் கூடாது. மனதிலே அன்பு வைக்க வேணும்.

ஃ

சாமுபிள்ளே:—அப்படா! உனக்கும் நல்ல புத்தி வந்ததா? இந்தப் புத்தி எவ்வளவு நேரத்துக்கு இருக்கப் போகிறதோ? நீ புத்தி யறிந்து அடக்கம் வணக்கமாய் உட்பட்டு நடந்து கொள்கிறவளா யிருந்தால், நீ படியாத பெண்ணு யிருந்தாலும் அந்தக் குறைவை மனதில் எண்ணுமல் எவ்வளவோ சந்தோஷத்துடன் என் பொழுதைப் போக்குவேனே. உன்னே எவ்வளவோ உயர்வாக நினைப்பேனே. உன்மேல் அன்பாவது விசுவாசமாவது எனக்கு இல்லையென்று நீ சொல்ல முடியாது. அது உனக்கே தெரிந்திருக்கும். நீ அடங்காப் பிடாரியாக நடுவே வந்து சண்டை பிடிக்காமலும், குழந்தைகளே அடிக்காமலு மிருந்து அன்புடன் நடந்து கொண்டால் நீயும் சுகப்பட முடியும். நானும் சுகப்பட முடியும். வீணுக ஒரு தினத்தைக் கலகப் பொழுதாக்கப் பார்க்காதே. அதில் இருவருக்கும் சுகமில்லே. நான் கொடுமைக்காரனுமல்ல, போக்

ஒருவரின் வீட்டிற்கு வந்து தங்குவோர் தாங்கள் மிக்க செல்வ வந்தர் போன்றும், அவ்வீட்டாரின் அந்தஸ்தைவிடத் தமது கௌரவம் உயர்ந்ததென்றும் காண்பித்துக்கொண்டு வெகு வெகு முறுக்கலும் விறைப்பிலும் இருந்து விட்டுப் போகிருர்கள். ஆனல், அவ்வீட்டினரிடம் பெற்றுச் செல்லும் கடனே ஊர்போய் அனுப்புவதேயில்லே.

கிரி சாக்கிரியுமல்ல, அன்பற்றவனுமல்ல. எல்லாம் நீ புத்திசாலித்தனமாய் நடந்து கொள்வதில்தான் என் அன்பைப் பெறும் சங்கதியும் அடங்கியிருக்கிறது.

என்ருர். காளியும் இந்தப் புத்திமதிகளுக்கு வணங்கியவளாய்த் தன் கணவனுக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வித்தாள். புருஷனும் மனைவியும் சந்தோஷமாய்ச் சிற்றுண்டிகளைக் குழந்தைகளுடன் உண்பதாயினர். சாமுபிள்ளையின் குடும்பத்துச் சங்கதி இப்படி. உங்களின் குடும்பத்துச் சங்கதி எப்படி? சரி சரி யென்று பொறுத்துக்கொண்டு எவ்வாருகவேனும் குடும்பத்தை ஸந்தோஷமாய் நடத்திக்கொண்டு போகப் பாருங்கள். வீட்டின் சமாதான வாழ்வே பெரிய பொக்கிஷமாகும். பிரிந்து போகாமல் கையை மூடி ஒன்றுசேர்ந்திருப்பதிவ் தான் குடும்பகௌரவமிருக்கிறது.

சந்தா நேயர்களே!

நான் பிரதி மாதமும் 15-ந்தேதி யன்று, அதாவது தமிழ் மாதம் முதல் தேதியன்றே சென்னையை விட்டு எனது காரியாலயத்தினின்று வெளிப்போந்து, தங்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தும், சில அன்பர்கள் என்னுடைய வரவைக் காணுது மனக்கவலைப்படுவது கேட்க யான் மிக வருந்தலாயினேன். என்னைப் பரிபாலிக்கும் தலைவர், தங்களுடைய விலாசத்தை நன்ருகக்குறித்து என்னைத் தங்களிடம் காலம் தவருது சேர்க்கும்படி, காருண்ணிய கவர்ன்மெண்டின் தபால் ஆபீசுக்கு அனுப்பிவிடுகிருர். நான் அப்படித் தங்களை நாடி வந்தடையாவிடில், உடனே நேயர்கள் என் தாமதத்தைப்பற்றித் தங்கள் ஊரைச்சேர்ந்த போஸ்ட் மாஸ்டருக்குத் தெரிவித்தால் நான் ஒழுங்காகத் தங்களிடம் வந்தடைந்து விடுவேன்.

தங்கள் செல்வி,

அமிர்தினி.

தம் அந்திய காலத்திற்கு உதவி புரிவரென்று உலகினர் தம் மனதிற்கு விசுவாசமாகப்பட்ட ஒருவரையோ, சிலரையோ நம்பித் தம்மிடம் உள்ள பணத்தையும் பாத்திர வகைகளையும் கொடுத்து வைக்கின்றனர். கடைசியில் கண் மூடும் வேளையிலோ தாங்கள் நம்பி யிருந்தவர்கள் தமக்கு ஏதும் செலவிடாத துரோகத்தைக்கண்டு திகைக்கிருர்கள். இதைவிடத் தபாலாபீஸ் சேவிங் பாங்கியில் ஒரு நூறு ரூபாய் சேர்த்து வைத்துத் தம் அந்தியத்தில் துணையாகப் பெறுவது மேல்.



I. மேல் நாட்டுக் காதல்.



லேடி 'வேலா பையா பென்' அழகிற் சிறந்த அப்ஸர ஸ்திரீ என்றே சொல்லவேண்டும். செம்மட்டை மயிரும்,—இல்லை,—தங்கக் கம்பிபோன்றகேசமும், கூரிய மூக்கும், பூனைக் கண்ணும், சிவந்த அதரங்களும், தந்தத்தில் கடைந்தெடுத்த முத்துக் களையொத்த பற்களும் ஆங்கில மாதர் கோஷ்டியில் அழகரசியென இவளையே கூறும்படி யிருந்தது.

ஃ

மாலை மணி ஐந்து. பென் நாற்காலியிலமர்ந்து சுருட்டு குடித்துக்கொண்டிருக்கிறாள். தபால்காரன் ஓர் கடிதத்தை யளித்துவிட்டுச் சென்றான். பென் பரபரப்புடன் அதைப் பிரித்துப் படிக்கலானாள். ஹா! அவளுடைய உடல் நடுங்கியது. கடிதத்தைப் பிடித்திருந்த கைவிரல்கள் 'பிடில் வாசிக்க' ஆரம்பித்தன. நிற்கமாட்டாமல் தடாமாறித் தடாலென்று சோபாவில் சாய்ந்தாள். பாதி கவுனுக்கு வெளியே தெரிந்ததும் தெரியாததுமாய் கண்ணாமூச்சி காட்டி விளையாடும் அவளது பூரித்த ஸ்தனங்கள் வெடித்துவிடும்போல் எழுந்து எழுந்து தாழ்ந்தன. "மை லார்ட்! மை லார்ட்!!" (கடவுளே! கடவுளே!!) என்ற இரண்டு வார்த்தைகளே அவளது வாயினின்றும் வெளிவந்தன.

ஃ

அவளைக் கலவரப் படுத்திய கடிதம் என்னவென்று வாசகர்கள் அறிய ஆவலுடனிருப்பார்கள். அது பின் வருமாறு :—

ஆசைக் கிளியே,

நான் உன்னுடன் இன்ப சுகங்களை யனுபவித்துக் கூடிக் குலாவிக் கொண்டிருந்தது நினைவா அல்லது கனவா என்று இப்பொழுது எண்ணமிடவேண்டி யிருக்கிறது. ஹா! இருவரும் முன்போல் கைகோர்த்துக் கொண்டும், முத்தமிட்டுக்கொண்டும், சிரித்து விளையாடிக்கொண்டும் இனி இருக்கப்போகிறோம் என்று நான் கண்டுகொண்டிருந்த மனக் கோட்டையும் தூள் தூளாய்விட்டது. கண்ணே, நீ வேறொருவனை மணம் செய்துகொண்ட போதிலும் என்னை மறப்பதில்லை என்று வாக்குத் தத்தம் செய்தது ஞாபகமிருக்கலாம். உன்னுடன் கூடிக் குலவியிருக்கும் பாக்கியத்தை மறுபடியும் ஓர் இரவு பெற விரும்புகின்றேன். மறுத்தால் என்ன நேரிடும் என்று என்னை நன்கறிந்த

இரவில் சாதம் வேண்டாமென்பவர்க்கு அவர் நடுராத்திரியிலே புசித்துக்கொள்ளும்படி ஏதாவது சிற்றுணவும் ஜலமும் அவர் அருகே வைத்துவிடுவது நன்று. அவ்விதம் செய்ய உள்ளன்பு இருந்தால்தான் முடியும்.

உனக்கே தெரிந்திருக்குமாதலின் நான் கூறவேண்டுவதில்லை. காலத்தையும் தேதியையும் குறிப்பிட்டெழுதவும்.

உன் ஆசைக் காதலன்,

ஆர். வீ. மாதைய்.

ஃ

மாதைய் என்பவன் 'பென்'னுடைய பழைய காதலன். அவன் ஏழ்மையானவனாதலின் பென் அவனைக் காதலித்தாளே யாயினும் மணம் செய்துகொள்ள இயலவில்லை. ஆயினும், இருபது வயதாகியும் மணமாகாமலிருக்கும் பென் தனது தனித்த வாழ்க்கையிற் பெரிதும் மனப் புண்ணுனாள். அதிலும் வீதியில் ஆண் பெண் இருபாலரும் கூடிக் கூடிப் போவதையும், கடற்கரையில் காதலர்கள் கட்டி முத்தம் கொடுப்பதையும், ட்யூப் ரெயில் பாலத்தில் (Tube Railway) கள்ளக் காதலர்கள் மகிழ்ந்து சுகிப்பதையும் கண்ணால் கண்ட கட்டழகிக்குத் தானும் இதே போல் ஒருவனுடன் களிக்கவேண்டுமென்ற காமவேட்கை தோன்றுவது சகஜமே! மணம் செய்துகொண்டு விட்டால் பிற புருடனை நாடவேண்டியதில்லை. ஆனால், இருபது ஆண்டுகள் நிறையுமுன்னர் மணம் செய்துகொள்வது தவறு என சமூகக் கொள்கை. என்ன செய்வாள் பென்? அதுவரையில் தற்போதைய கூலிக் கணவன் (Temporary Husband) என்று ஒருவனைத் தேடிக்கொள்ள வேண்டியதாயிற்று. அதன் பின் ஜோன் என்பவனை மணம் செய்துகொண்டு குடும்ப நிர்வாகத்திலிறங்கி விட்டாள். இப்பொழுது மாதைய் விரும்புகின்றவாறு அவனுக்கு இணங்காவிடில் அவன் நேரில் வந்து தன் கணவனிடம் எல்லா இரகசியங்களையும் கூறிவிடில் என்ன செய்வது எனத் தயங்கினாள்! அவனுக்கு இணங்குவதால் பதிவிரதைத் தத்துவம் போய்விடுமே யெனச் சிறிதும் அவள் எண்ணவில்லை. ஆனால், தன் கணவன் இருக்கையில் எப்படி மாதையை வரவேற்பது என்பதே பெரிய கவலையாய்விட்டது.

ஃ

இவ்வாறே யோசித்துக்கொண்டிருக்கையில் அவள் கணவனான டாக்டர் ஜோன் உள் நுழைந்தான். பென் கடிதத்தை மறைத்துக்கொண்டு புன்முறுவலுடன் கணவனை வரவேற்றாள். ஜோன் தான் அவசர வேலையாகப் பக்கத்துக் கிராமத்திற்குப் போகவேண்டியிருப்பதாயும், மறுநாட் காலையே வரக்கூடுமென்றும் கூறிவிட்டுச் சென்றான். கணவன் வெளிச் சென்றதும் பென் பின்வருமாறு ஓர் கடிதமெழுதித் தபால் பெட்டியில் சேர்ப்பித்தாள். இரவு ஒன்பது மணி டெலிவரியில் அக்கடிதம் மாதைய்க்குக் கிடைத்தது. அதில் கண்ட விஷயம் பின்வருமாறு:

மனதிற்கினிய மணாளா!

நான் தங்களைச் சிறிதும் மறந்தவளல்ல. இன்றிரவு என் கணவர் கிராமத்திற்குப் போயிருக்கிறார். நாளைக் காலையே வருவார். உடனே தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

தங்கள் காதலி

ஸோபையா பேன்.

நன்றியும் தாராளசிந்தையுமுள்ள இடத்திலிருந்து நாலு பணம் சம்பாதிப்பதானது, கொடுமையுள்ள விசுவாசமற்ற இடத்திலிருந்து நாற்பது பணம் பெறுவதிலும் மேலென்றே தோன்றும்.

இவ்வாறு படித்ததும் மாதைய் ஆநந்த பரவசமானான்.

ஃ

மறுநாட் காலை மணி $4\frac{1}{2}$ இருக்கலாம். லேடி பென்னும், மாதெய் என்னும் ஆடவனும் பாபம் சூழ்ந்த இப்புவியையே மறந்து ஆழ்ந்த நித்திரையிலிருந்தனர். 4-மணிக்கே மாதைய் எழுந்து வீட்டைவிட்டுப் போய்விட வேண்டுமென்று 'அலாரம்' (Alarm) வைத்திருந்தானேயாயினும் கெடியாரத்திற்கு சாவிகொடுக்க மறந்துவிட்டானாகையால் கெடியாரம் தான் செய்யவேண்டிய தொழிலைச் செய்யச் சக்தியற்று, நிர்வாணமாய்ப் பின்னிப் படுத்திருக்கும் கள்ளக் காதலர்களைப் பார்த்தவண்ணம் நிம்மதியாயிருந்தது. களைப்புற்ற காதலர்களின் உறக்கம் திடீரெனக் கலைக்கப்பட்டது. ஜோன் அவர்கள் முன்னிலையில் சிம்மத்தைப் போல் கர்ஜித்துக்கொண்டு நின்றான். பென் சட்டென்று தன் கவுனை மாட்டிக்கொள்ளவும், மாதைய் சாளர வழியாகக் குதித்துக் கம்பி நீட்டினான்.

ஃ

பென் அப்பொழுதிருந்த நிலையைக் கூறமுடியாது. பயத்தால் அவள் உடல் நடுங்கியது. அப்படியே பேச நாவெழாமல் பிரமித்து நின்றுவிட்டாள்.

"அடி! துரோகி! இதற்கா உன்னிடம் நான் இவ்வளவு நம்பிக்கை வைத்துச் செல்வமாய் நடத்தி வந்தது! சண்டாளி, நான் இல்லாத சமயங்களில் எவ்வளவு முறை இப்பாதகனுடன் கூடிச்சுகித்திருக்கின்றாய்?" என்று பல்லை நறநறவென்று கடித்தான். பென் பதில் பேச முடியாது நின்றாள்.

ஃ

அதே சமயம் கதவு திறக்கப்பட்டு ஓர் மாது உள் நுழைந்தாள்.

"சண்டாளா! மணமாகவில்லையென்றும், என்னையே மணம் செய்துகொள்வதாயும் இவ்வளவு காலமாய் என்னை ஏமாற்றிக் கற்பழித்த பாபம் உன்னைத் தொடரும்! நீ எவ்வளவு பொய்கள் கூறினாய்? பென் உன் சகோதரி என்றல்லவா கூறி என்னை ஏமாற்றினாய்! ஹா! இன்றே உண்மையை அறிந்தேன்!" என்று கண்கள் சிவக்கப் படபடப்பாய்ப் பேசினாள்.

ஃ

ஜோன் எதிர்பாராது நேர்ந்த சம்பவத்தைக்கண்டு கலங்கினான்; அடிக்கடி ஜோன் நோயாளிகளுக்கு சிகிச்சை செய்யச் செல்வதாகக் கூறிவிட்டுக் கிராமத்திற்குச் செல்வது இம்மாதை நாடியே. தான் ஓர் பெண்ணை மணந்துகொண்டு விவாகரத்து செய்துகொண்டு விட்டதாயும், இம்மாதையே இனி மணப்பதாயும் ஆசைகாட்டி அவள் கற்பையழித்தான். ஓர் தினம் ஜோன் பென்னுடன் போவதைக் கண்ட அம்மாது மறுநாள் அவள் யார் எனக்கேட்க, அதற்கு ஜோன், பென் தன் சகோதரி எனக் கூறித் தந்திரமாய்த் தப்பித்துக்கொண்டான். நேற்று மாலை அம்மாதிற்கு பென் என்பவள் ஜோனின் மனைவியே யெனத் தெரிந்துவிடவும், அன்றிரவு ஜோன் தன்னிடம் இன்பமனுபவித்துவிட்டு வீடு திரும்புகையில் பின்தொடர்ந்துவந்து உண்மையைக் கண்டுகொண்டாள்.

ஃ

இறந்து போனவர்களுடைய செய்கைகளைப் பார்த்து உயிரோடிருப்பவர்களுடைய மேன்மைகளைப் பாராட்டுதற்கு நாம் தெரிந்து கொள்ளவேண்ம்

இனி என் செய்வது? ஜோன் உண்மையில் அம்மாதைக் காதலிக்கின்றானேயன்றி பென்னைக் காதலிக்கவில்லை யென்றும், பென் மாதையைக் காதலிக்கின்றாளேயன்றி ஜோனைக் காதலிக்கவில்லை யென்றும் உண்மை விளங்கியபின் என்ன தாமதம்? காருண்ய கவர்ன்மெண்டார்தான் சுலபமாக விவாக ரத்து அளித்துவிடுகின்றனர். இனிமேல் என்ன கவலை? ஜோனுக்கும் பென்னுக்கும் விவாக ரத்து வாங்கியாய்விட்டது. பென் மாதைய் என்பவளை மறபடி மணந்துகொண்டாள். அவர்களின் பொருட்டு ஜோன் தன் சொத்தில் கால்பாகமும், அவன் காதலி தன் சொத்தில் கால் பாகமு மளித்துவிட்டனர். ஜோன் தனது காதலியை மணந்துகொண்டான். ஆனல், இதுமட்டும் கடைசி முறை விவாகமல்ல. இறக்கும்போது யார் ஒருவனுக்கு மனைவியாக இருக்கிருளோ அவளே உண்மை மனைவி! ஏனெனில், அதற்குள் எவ்வளவு விவாக ரத்துக்களும், புதிய மனைவிகளும் தோன்றுவாரோ! இதுவே மேல்நாட்டுக் காதலின் சிறப்பாம்!

கே. வி. எஸ். வாஸ்.

"பாபுலர்" ஸஞ்சிகையின் துணை

ஆசிரியர்.

> அடுத்த மாதம்
> மேல் நாட்டுக் காதல்
> II
> ட்யூப் ரெயில்வே மர்மம்.

கடிதம் எழுதுவதில் பல விதங்கள்.

வியாதியாய்க் கிடப்பவன் அவனே பிறருக்குக் கடிதம் எழுதுவதொன்று. அதில் சுகவீனத்தையோ, குணப்பட்டு வருவதையோ குறிப்பிடக்கூடும். அவனைப்பற்றிப் பிறர் வரைவது மற்றொன்று. அவனைப்பற்றியேனும், அவனது மாணத்தைக் குறித்தேனும் தம் கடிதங்களில் விவரிப்பர். அக்ஷர ஞானமில்லாதவர் வேறொருவரைக்கொண்டு எழுதும் கடிதம் இன்னொரு வகை. எந்த சங்கதிக்கும் தான் கையொப்பமிடாமலே தன் கீழ்உள்ளவர்களையே கையெழுத்திட வைத்து, பிறகு விவகாரம் வரும்போது அந்தக் கடிதம் எழுதியது தானல்லவென்றும், தனக்கு எதுவுமே தெரியாதென்றும் கூறி மோசம் செய்யப் பார்ப்பது வேறொரு தினுசாகும். இவ்விதமாக கடிதம் எழுதுவதில் எத்தனையோ வகைகள்!

சிலர் பிறருக்கு இடாமல், அந்தப் பிறர் வீட்டில் தங்களுக்கு மட்டும் உபசரிப்பை எதிர்பார்க்கின்றனர். அத்தகையோருக்கு இட்டு இட்டுச் சலித்த அந்தப் பிறரின் உள்ளம், பிறகு என் இட என்று வெறுத்து மவுனமாகி விடுகிறது.



சமயபுரம் இரதோற்சவம்.

“யாரையா சமயபுரம் போரவுங்கோ? சமயபுரம், சமயபுரம், ஆள் ஒன்றுக்கு ஆறணு!” என்று ஜட்கா வண்டிக்காரன் உரக்கக் கத்திய காலம் போய்விட்டது. பெரும்பான்மையோர் திரிச்சி டவுன், ஸ்ரீரங்கம் ஸ்டேஷன்களில் ரயில் ஏறிச் சென்றனர். கொள்ளிடத்திலிருந்து சமயபுரம் வரைக்கும் வழியில் இருமருங்கும் வண்டிகள் நிற்பதையும், கிராம ஜனங்கள் கோலாகலமாய்த் திரிவதையும் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. அநேக ஜனங்கள் கால் நடையாகவும் சென்றுகொண்டிருந்தார்கள். சமயபுரத்தைச் சமீபிக்க சமீபிக்கக் கூட்டமும் அதிகரித்தது. நூற்றுக் கணக்காகப் பக்திமான்கள் தலையின் மேல்கரகங்களை வைத்துக்கொண்டும், மார்பில் பெரிய பூமாலைகளைத் தரித்துக்கொண்டும் வாத்தியங்களின் முன்னர் ஆநந்தத் தாண்டவமாடுவதைப் பார்த்தால் பக்தி யில்லாதவனுக்குங் கூட மகமாயியினிடத்தில் பக்தி உதித்துவிடும்.

ஃ

மாரியம்மனைக் கண்டு தரிசித்தோம். ஜகதீசுவரி தேரின்மீது ஜெகஜ்ஜோதியாய்ப் பிரகாஸித்தாள். தாயைக் கண்டு மக்களெல்லாம் ஸந்தோஷித்தார்கள். ஜனங்களுடைய கவலையை நீக்கும் பரமேஸ்வரி எல்லாருடைய மனதையும் களிப்பித்தாள். காலரா, அம்மை முதலிய வியாதிகளால் வருந்தியபோது யார் யார் என்ன கோரிக்கொண்டனரோ அவரவர்கள் அந்தந்தக் கோரிக்கைகளை அன்று நிறைவேற்றினார்கள். அன்று அநேகர் அம்மனுக்கு ஆடு கோழிகளைப் பலியிட்டனர். அன்று இறந்தஆடு, கோழிகளுக்குக்கணக்கேயில்லை. ஒரு பாவமும் செய்யாத ஆடு, கோழிகளை இரக்கமில்லாமல் கொலை செய்கிறார்களே மனிதர்கள்! அவைகள் விலக்கு விலக்கு என்று உதைத்துக்கொண்டு உயிர் விடுவதைப் பார்த்தால் சகிக்க முடியவில்லியே! உயிர் கொலை செய்வதுதானா உண்மைப் பக்தி? கொலை செய்யாமல் வேறு நல் வழிகளில் நமது பக்தியை அம்மனுக்குக் காட்டலாகாதா? தேங்காய். பழம், கற்பூரம் முதலியவைகளை வைத்து அம்மனைத் தரிசிக்கக் கூடாதா? அபிஷேகம் செய்யலாகாதா? இவைகளை ஜெகதீசுவரி ஏற்றுக்கொள்ளமாட்டாரா? பலியிட்டவர்களுக்கு உண்மையான பக்தி இருந்தது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், வேறு பல நல்வழிகளில் பக்தியைக் காட்டலாமே என்பதுதான் நான் சொல்வது.

ஃ

ஒருவனுடைய குடுமியைப் பிடித்திழுத்து ஆட்டுவதற்கு, அவனுடைய பணக்கணக்கு தன்னிடம் கொஞ்சம் இருந்தால்தான் நல்லதென்று சிலர் நினைக்கிறார்கள்.

வெயிலின் கொடுமை அதிகமாயிருந்தாலும் ஜனக்கூட்டம் குறையவில்லை. தண்ணீர்ப் பந்தல்கள் ஏராளமாயிருந்தன. கடைகளுக்கோ கணக்கில்லை. காப்பிக்கடைகள், மிட்டாய்க்கடைகள், கரும்புக் கடைகள் இவைகளில் கூட்டம் அதிகரித்திருந்தது. சில்லரைக்கடைகள், வளையல்கடைகள், பொம்மைக்கடைகள் ஆகிய இவைகளில் ஸ்திரீகளின் கும்பலே அதிகமாயிருந்தது.

எனது கடிதத்தை முடிக்குமுன் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அதாவது, இந்த மாரியம்மன் சக்தியுள்ள தெய்வம் என்பதற்கு அத்தாட்சி அன்று வந்த நூற்றுக்கணக்கான கரகக்காரர்களே. இது சென்ற வருஷம் நான் தரிசித்தது இம்முறை 17-4-1934-ல் இந்த ரதோற்சவம் வருகிறது.

C. P. முத்துசாமி.

ஆத்திர மூட்டுவதின் நோக்கம்.

பிறருக்கு ஆத்திரம் உண்டாகும்படித் தூண்டிக் கொடுத்து, அவர்களுடைய ஆத்திரத்தைத் தங்கட்கு லாபகரமாகவும், அனுகூலமாகவும் ஆக்கிக்கொள்வது சில சமர்த்தர்களின் வேலை. கோள்கூறி ஆத்திரமூட்டுவதும் சுயநலக் கருத்துடனேயேதான். ஒருவர் மற்றொருவருக்குக் கேவலமாய் இகழ்ந்து ஒரு கடிதம் விடுவிக்கின்றார். அதன் நோக்கமென்ன? அதற்குப் பதில் வரின், அதை ஒரு ஆதரவுக் கடிதமாய் வைத்துக்கொள்வதற்கேதான். கேவலக் கடிதம் பெற்றவன் தன் ஆத்திரக் கொதிப்பில் பலபல எழுதிவிட, அது ஆத்திர மூட்டியவர்க்கு ஒரு சரியான தஸ்தாவேஜியாகிவிடுகிறது. ஆதலின், கேவலக் கடிதம் வரினும், தன் கடிதம் எதிரியிடம் ஆதரவாக ஏதும் சிக்காதிருக்கப் பார்ப்பதே விவேகமாகும்.

விரை வீக்கத்திற்கு ஆயுர்வேதம், யூனானி இவற்றில் மருந்தில்லையா? இல்லாமலிராது. ஒரு யூனானி வைத்தியர் ஒருவரின் விரை வீக்கத்தைப் பார்த்துப் பயந்து சென்று மறுபடியும் திரும்பி வரவேயில்லை. குணப்படாதென்பது அவர் கருத்தோ யாதோ! இங்கிலீஷ் டாக்டர்கள் சதை சதையால் விரையைச் சுற்றியுள்ள துர்மாமிசத்தை யெல்லாம் மாங்காய் சீவுவதுபோல் அறுத்து எறிந்துவிட்டு கட்டு கட்டினால் குணமாகுமென்கிறார்கள். அதிர்ஷ்டமிருந்தால் மூன்று மாதங்கட்குப் பிறகு வீக்கம் தானாகவே வாடி விடுகிறதுமுண்டு என்று பட்டறிந்த ஒரு அனுபவி கூறுகிறார்.

பேச்சளவில் உற்சாகம் காட்டி, வெறுங்கூச்சல் போட்டுவிட்டுப் போவதில் கொஞ்சமும் பிரயோஜனமில்லை.

ஹரிதாஸரின் பக்தி.



ஹரிதாஸர் என்பவர் ஒரு சிரேஷ்டமான மகம்மதிய குலத்தில் பிறந்தவர். அவர் 16-ம் நூற்றாண்டில் ஜஸ்ஸோரைச் சேர்ந்த பாங்கால் ஸப் டிவிஷனிலுள்ள பியூரான் என்னுமிடத்தில் வசித்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவானிடத்தில் எல்லையற்ற பக்தியுண்டு. ஹரி என்கிற பரமாத்மாவினிடத்திலிருந்த அவருடைய பக்தி வாசாமகோசரமே. அவருடைய ஆசை பரமாத்மாவையே ஒட்டிக்கொண்டிருந்தது. ஹரி நாமத்துக்குள்ள பூரணசக்தியும் அவர் நன்றாய் உணர்ந்திருந்தபடியால், அந்த ஹரி நாமம் ஜனங்கள் காதில் விழுந்தால் அவர்கள் கடைத்தேறுவார்களென்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. ஆதலின், அவர் எப்போதும் ஹரி நாமத்தை உறக்கச் சொல்லிக்கொண்டிருப்பது வழக்கம். புல் பூண்டுமுதல் பெரிய நக்ஷத்திரமண்டலம் வரையில் எங்கே பார்த்தாலும் ஹரியின் வியாபகம் தென்பட்டபடியால், ஹரி ஹரி யென்று ஸந்தோஷத்தோடு உறக்கச் சொல்வதை அவரால் தடுத்தும் நிறுத்தமுடியவில்லை. பரமாத்மாவினிடத்தில் எவ்வளவு அன்பு வைத்திருந்தாரோ, அவ்வளவு அன்பை ஸர்வ பிராணிகளிடத்தும் கொண்டிருந்தார். மனுஷ்யர்களும், ஸ்திரீகளும் தங்கட்குக் கிலேசம் வந்தகாலத்தில், அவர்கள் அவரிடம் போனவுடன் ஸஞ்சலம் நீங்கி ஸந்தோஷமுற்றார்கள். எந்தக் கவலையுள்ளவர்களும், எவ்வகைத் துயருள்ளவர்களும் ஹரிதாஸரின் ஸன்னிதானத்தில் வந்த மாத்திரத்தில் அக்கவலைகளும் துயரங்களும் அவர்களை விட்டு விலகிப்போவதுடன், அவர்கள் பெரும் ஆறுதலையும் அடைவதாயினர். தெய்வ பக்தியை ஸமுத்திரத்துக்கு ஒப்பிடுவோமானால், அந்த பக்தி என்னும் கடலில் அவரைச் சேர்ந்தவர்கள் ஆநந்தபரவசமாய் நீந்திக்கொண்டிருந்தார்களென்னலாம். ஹரிதாஸருடைய சிஷ்யர்கள் பெருகிக்கொண்டு வந்தார்கள். ஹரி நாமம் மகம்மதிய வகுப்பாரிடத்திலும் பரவிற்று.

ஃ

நகரத்தின் காஜியார் இவரது நடவடிக்கையில் உக்கிரகமான கோபம் கொண்டார்.

“ஒரு மகமதியன் ஹிந்துக்களின் கடவுளுடைய நாமத்தைச் சொல்லிக்கொண்டிருப்பது மிகவும் பிசகான கேடுகெட்ட நடத்தை” யென்று எண்ணினார். “இது நம்மால் பொறுக்க முடியாது. இவனொரு மத விரோதி. மற்றவர்களையும் தன்னைப் போல் ஆக அவர்களைத் தூண்டிக் கொண்டிருக்கிறான்.”

காஜி என்பவர் மத ஆவேசத்தால் இந்த மாதிரியாகத் தர்க்கித்து, தாஸரைக் கொலை செய்வதுகூடப் போதாதென்றெண்ணினார். கடைசியில் கொன்றுவிடுவதென்ற முடிவுக்கு வந்தார். அவருடைய குற்றம்

யிகவும் குரூரமானதென்று காஜியி னுடைய எண்ணம். ஹரிதாஸ் என்ப வரைப்பற்றி எது குரூரமென்று தோன்றுகிறதோ அச்செய்கையால் அவரைக் கொல்லும்படி காஜி கூறி னார். பட்டணத்திலுள்ள பல கடை கள் கூடுமிடத்திலும் அவனைக் கரகர வென்று இழுத்துக்கொண்டுபோய் அவ்விடம் ஒவ்வொன்றிலும் ஈரம் இரக்கமில்லாமல் சாட்டையால் செம் மையாக அடிக்கவேண்டியதென்று உத்திரவிட்டார்.

ஃ

அப்போதிருந்த மகம்மதிய கவர் னர் முதலில் ஒன்றும் செய்யாதிருந்த போதிலும், கடைசியில் காஜியாரு டைய தீர்மானததைச் சரியென்று அனுமதித்து விட்டார். அப்போது ஹரிதாஸருக்கு ஒரு விதமான பயமு மில்லை. அவரை முதல்கடை வாச லுக்கு இழுத்துக்கொண்டு போனார் கள். அவ்விடத்தில் காஜியிருந்தார். அடிக்கிறதாக ஒப்புக்கொண்ட கொடிய பாவிகள் ஹரிதாஸரின் முதுகுதோல் பிரியும்படி அடித்தார் கள். இச்செய்கைகளைப் பார்த்து மனம் திடுக்கிட்ட ஜனங்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானை மனதில் ஸ்மரித் துக்கொண்டிருந்தார்கள். ஹரிதாஸ ரின் முதுகில் அடிகள் விழ விழ இரத்தம் பீரிட்டு அடித்தது. இப் போது ஹரிதாஸரை யார் இரக்ஷிப் பார்? அவருக்கு இரக்ஷகர் யார்?

ஃ

காஜி சொன்னதாவது:—"கொ ரானை வாசி; இல்லாவிடில் துன்பத் தை யனுபவி."

—"என்னைத் துண்டம் துண்ட மாக வெட்டினாலும். பாவனமாயும் பரிசுத்தமாயுமுள்ள ஸ்ரீ கிருஷ்ணபக வானின் நாமத்தை ஒரு க்ஷணப் பொ ழுதாகிலும் சொல்லாமலிரேன்" என்று ஹரிதாஸர் நவின்றார்.

உடனே ஆகாசத்தில் ஒரு சப்தம் உண்டாயிற்று. காஜி ஓடிப் போனார். ஜனங்கள் இங்குமங்கும் ஓடினார்கள். அடித்தவர்கள் போன இடம் தெரியவில்லை. ஹரிதாஸர் மூர்ச்சையடைந்தார். அவர் கண்களை விழித்துப் பார்த்தபோது அவர் ஆறு தலடையும்படியாக ஒரு தேஜோ மூர்த்தி அவருக்கு எதிரே நின்றார். ஹரிதாஸர் ஆநந்தக்களிப்புகொண்டு ஹரியின் பாதாரவிந்தத்தில் சாஷ் டாங்கமாக நமஸ்காரம் செய்தார். உடனே பகவான் தன் திவ்ய மிருது மயமான திருக்கரங்களால் வாரி யெடுத்தபோது அடியில் கண்டபடி அவரது செவியில் பட்டது.

ஃ

—"என் அன்புள்ள ஹரிதா ஸரே! எனக்காக நீர் இவ்வளவு கஷ்டத்துக்குள்ளானீர். என்னவித மான தண்டனை உன்னை வதைத்த வர்களுக்கு விதிக்கவேண்டுமென்று சொல்லு. ஆயிரம் பேர்களுடைய தலைகள் என்னுடைய பக்தரின் தலை ரோமம் ஒன்றுக்கு ஈடாகமாட் டாது."

ஹரிதாஸர் பகவானுடைய ஜீவ காருண்ணியத்தைத் தவிர, தன்னைச் சேர்ந்தவர்களுக்கு வேறே ஒன்றும்

"மற்றவர் தாம் ஜீவிப்பதற்குத் தம் முயற்சியையே பெரிதும் மதிக்கின் றனராக, யானோ என் முயற்சி யொடுயாவும் இறைவனின் அருட்படியே நிகழ்கின்றனவென நம்பும் தன்மையேன்."

வேண்டியதில்லை யென்று பகவானைப் பார்த்துச் சொன்னார்.

"என்னுடைய அழியா ஆசீர்வாதமே உனக்கு ஆஸ்தி. என்னிடம் உனக்கு நீங்காது விளங்குகின்ற பக்தியே உனது ஸந்தோஷம்" என்று சொல்லி ஹரிதாஸரை பகவான் ஆசீர்வதித்தார்.

ஃ

காஜியார் பக்தர் ஹரிதாஸரின் காலில் வீழ்ந்து மன்னிப்புக்குப் பிரார்த்தித்தார். அவரும் மன்னித்தார். பிறகு காஜி முக்கிய சிஷ்யர்களில் ஒருவரானார். இந்த சரித்திரத்தால், மனுஷ்ய கோஷ்டியில் எந்த ஜாதி எந்த மதத்தினராயினும் பகவானிடத்தில் பக்தி வைத்து அவரே கதியென்று இரவும் பகலும் அவருடைய நாமங்களை எவர்கள் ஸ்மரிக்கின்றார்களோ, அவர்களுக்கு என்ன ஆபத்துவந்தாலும் அவர் அவர்களைக் காப்பாற்றுவது திண்ணமென்று தெரிகிறது.

தமிழிலுள்ள "பஞ்ச தந்திரம்" சரியா?

"பஞ்ச தந்திரம்" வடமொழியிலுள்ள மூல நூலுக்கு நேரான தமிழ் மொழி பெயர்ப்பு இதுவரை யாவராலும் செய்யப்படவில்லை. தாண்டவராய முதலியார் எழுதியிருக்கும் தமிழ்ப் பஞ்ச தந்திரம் ஸம்ஸ்கிருதத்திலிருந்து நேராக மொழிபெயர்க்கப்பட்டதன்று. மஹாராஷ்டிர பாஷையில் பஞ்ச தந்திரக் கதைகளை மட்டும் ஒருவாறு தொகுத்திருந்ததொரு நூலினின்றும் கதைகளைத் திரட்டித் தமிழில் ஸ்ரீமான் முதலியார் வெளிப்படுத்திவிட்டாரென்று தெரிகிறது. எனவே, பூமண்டல முழுமையிலும் தனக்கொரு நிகரில்லாத ராஜ்ய நீதி சாஸ்திரமும், ஹிந்துக்களின் அறிவு நுட்பத்திற்கும் பெரும் புகழும் ஆகி விளங்கும் ஸமஸ்கிருத பஞ்ச தந்திரம் தமிழில் இயற்கையாக மொழிபெயர்க்கப்படவில்லை. அதன் அழகான நீதிவசனங்களில் பெரும்பான்மை தமிழ் மொழிபெயர்ப்பிலே யில்லை. மேலும், தமிழ்ப் பஞ்ச தந்திரத்தைப் படித்தால், இஃதொரு ஸாமான்யமான கதைப் புஸ்தகமென்று தோன்றுகிறதேயன்றி, உலகத்து ராஜ்ய தந்திர சாஸ்திரங்களுக்குள்ளே இஃது சிரோமணி யென்பது துலங்கவில்லை.

தேகம் சுகமாயிருக்கையில் நாக்கின் ருசிக்காக அதிகம் செலவிடக்கூடாதாம். அப்போது காசு மிச்சம்பிடித்தால்தான் சுகம்கெட்டுப் பாயிற் படுத்தபோது நாக்கின் ருசிக்கும் மருந்துகளுக்கும் செலவிடக் கையில் பணம் மிஞ்சுமாம்.

சிறுமணித்திரள்

பார்த்தருசி சேர்த்தவொரு பைந்தேன் கூடு.

[ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள்.]

(1) ஒரு பெரிய பிரஸங்கியார் "அதிகமாக மாமிஸம் சாப்பிடுவது தான் முக்கியம்" என்று ஒரு கூட்டத்தில் ஆரவாரமாகப் பேசுகிறார். அதே பிரசங்கியாரின் பெயர் கொட்டை எழுத்தில் கீழ்க்கண்டபடி காணப்பட்டது. "புலால் மறுப்புச் சங்கத்தில் புலாலைத் திரஸ்கரித்தல், புலாலின் தீமை" என்ற விஷயத்தைப்பற்றி........இன்னார் பேசுவார்கள்" என்பதாம். என்ன வேடிக்கை இது? இப்படித்தான் ஒற்றுமையற்று பிரிவினைவுற்றுப் பிறர் நகைக்க ஏதுவாகிவிடுகிறது.

(2) சொல்லும் காரியத்தைச் சிறுவர்கள் உடனே செய்தால் பெரியோருக்குத் திருப்தி யுண்டாகிறது. இந்த உணர்ச்சியை அறியாத பிள்ளைகள் வேண்டுமென்றே காரியத்தைச் செய்திருந்தும், செய்யவில்லை என்று முதலில் கூறிப் பெரியோர்களின் கோபத்தைப் பெருக்கி வேடிக்கைப் பார்ப்பதோடு, தாமும் வசவு வாங்குவது அவர்களின் தமாஷ்போலும்.

(3) இரகஸியமாக வைத்துள்ள வைப்பாட்டியுடன் தன்னைக் காண நேர்ந்த சிநேகிதர்கட்கு இவளே தன் மனைவி என்று வாய் கூசாது சொல்லிவிட, பிறகொரு சமயம் அச் சிநேகிதர்கள் அம்மனிதனின் உறவினரைக் காணும்போது 'இன்னாருடைய மனைவியை வேறோர் மனிதனோடு பார்த்தோ'மென்று கூறிவிட, அப்போது குட்டு வெளியாகி விடுகிறது.

(4) ஊரை ஏமாற்றி உலையில் போடுவதையே தன் தொழிலாகக் கொண்டுள்ள எந்த ஆணோ, பெண்ணோ தானும் சுகப்படுவதில்லை. ஒருவரிடமும் நீடித்த சிநேகமும் உண்டாவதில்லை. எங்கு பார்த்தாலும் சண்டை, மனஸ்தாபம் தான்.

(5) ஒரு வியாபாரத்தின் ரகஸியத்தை யறியும்பொருட்டே சிலர் அந்த வியாபாரஸ்தலத்தில் வேலையிலிருந்து அதிலுள்ள சகல நோக்கங்களையும் கிரகித்துக்கொண்டு அதற்கு எதிரிடையாக வேறு ஒன்று ஸ்தாபிக்கத் துணிந்து விடுகிறார்கள். இது நம்பிக்கைத் துரோகமா? சுயநலத்தனமா?

(6) எவரையும் எளிதில் நம்பி ஏமாறாதே; உஷார்! உஷார்! என்று பிறரை எச்சரித்த மனிதர்களே ஒரு ஒரு குள்ள நரியால் ஏமாற்றப்பட்டு வாட நேருகிறது. பிறரை எச்சரிக்கப் புத்தி தோன்றியதும் தன் விஷயத்தில் மந்தமாகிவிடுகிறது.

சரித்திரம் படிக்கும்பொழுது அதில் என்ன கூறியிருக்கிறதென்பதை அறிந்து கொள்வதுடன் மாத்திரமிருந்து விடாதீர்கள். சரித்திர காலத்தில் என்னென்ன பிரசினைகள் ஏற்பட்டன; அதை நம் பெரியார் எவ்விதம் தீர்த்தார்களென்று நன்கு பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

(7) டாக்டர்களில் சிலருடைய தடபுடலைப் பார்க்கும்போதே அவர் சென்ற உயிரையும் திருப்பிவிடும் வல்லமை பெற்றவர் என்று பிரமிக்கச் செய்கிறது. சிலரோ கைதேர்ந்த பக்காப் பேர்வழியாக விருப்பினும், வெகு சாந்தமாயும் அடக்கமாயும் இருக்கிறூர்கள். அவர்களைப் பார்த்த சிலரோ, "ஆமாம். இதைப் பார்த்தாலே துணி முடிந்ததுபோலவிருக்கிறது; இதற்கென்ன தெரியும்? வேறு வைத்தியனைக் கூப்பிடுங்கள்" என்கிறூர்கள். படாடோபத்திற்கன்றே மதிப்பு!

(8) சிலர் தாம் செய்த சங்கீதக் கச்சேரியைப்பற்றிப் பலரிடம் பல மாதிரியாகக் கூறிவிடுகிறூர்கள். அக்கச்சேரியை நேரில் கேட்டபேர்களும் பாடியவர்களின் வாய்ப்பறையைக் கேட்டபேர்களும் ஒன்ருகச் சந்திக்க நேர்ந்தகாலையில் வண்டவாளம் வெளியாகிவிடுகிறது. வீண் ஜம்பத்தின் பலன் இது.

(9) தாயாருக்குத் தெரியாமல் மனைவிக்கும், மனைவிக்குத் தெரியாமல் தாயாருக்கும் பழங்கள் வாங்கிக் கொடுத்துத் தான் இருவரிடத்திலும் நல்லவனுகிறுன். தாயார் தனக்குக் கொடுத்ததையும், மனைவி தனக்குக் கொடுத்ததையும் பெருமையோடு பிறரிடம் ஜம்பமாய்க் கூறிக்கொள்ள, அப்போது ரகஸியம் வெளியாகிப் பெருத்த சண்டையாகிவிடுகிறது. இது அநேக குடும்பத்தின் கண் காட்சி போலும்.

(10) தான் மற்றொருத்தியை ரகஸியத்தில் வைத்திருப்பதை உலகமே அறியாதென்று அவன் நினைத்திருக்கிறுன். அந்த வைப்பு ஸ்திரீயோ தான் இன்னுரை அடைந்திருப்பதாகக் கூறிக்கொண்டால் பெருத்த கௌரவம் என்று எண்ணி முக்கியமான மனிதர்களிடம் கூறிவிட, அது அவனுக்குத் தெரிந்துவிட, பெருத்த சண்டையுடன் பிரிவும் உண்டாகின்றது. சிலருக்கு அவர்களின் ஜம்பமே சத்துருவாகிறது.

(11) மகாமேன்மையாயும் யோக்கியமாயும் ஒரு காலத்தில் குடும்பம் நடைபெற்றது மறைய, பின்னொரு காலத்தில் மகன் திருடனுகிச் சிறை செல்லவும், மகள் இதர மதத்தினருடன் ஓடிவிடவும், தாய் தந்தையர் கலங்கிச் சாகவும் ஆய்விடுகின்றது.

(12) விபரீத எண்ணத்துடன் சிலர் சிநேகம் செய்ய வருவதும், நெருங்கிய பிறகு சிறுகச்சிறுகப் புத்தக இரவல், சாமான்களிரவல், நகைகள் இரவல் கேட்டுப் பெற்று அந்தக் கடைசி லாபத்துடன் ஆள் ஓட்டமும் மறைவும் காட்டி விடுகிறூர்கள். முதலிலேயே மனுஷ்யர்களின் குணம் அறியாது மோசம் போவதில் இது ஒன்று.

(13) சனதனக் கொடி கட்டிப் பறக்கும் சிலரின் வீட்டில் விவாகமாகாத பெண்கள் 20 வயதிற்குக் குறையாமல் இரண்டு மூன்று பேர்களை வைத்திருப்பது எந்த சனதன அநாதி சாஸ்திரத்தில் எழுதி இருக்கிறதோ தெரியவில்லை.

(14) விவாகம் முதலிய விசேஷங்களுக்குப் பிறர் கொடுக்கும் பரிசுப் பொருள்கள் விலை பெற்றவைதானு

ஒரு வேலையில் களைத்து விட்டால், அதை அவ்வளவில் வைத்து வேறொரு வேலையைத் தொட்டுக் கொள்ளவேண்டும். இவ்விதம் வேலையை மாற்றுவது மிக்க சிரமசாந்தியைத் தரும். உண்ணும் உணவு வகைகளையும் அடிக்கடி மாற்றி யுண்பது தெவிட்டாதிருக்கச் செய்வதுடன் தேக சுகமும் தரும்.

என்று கணக்குப் பார்ப்பவர்களுக்கு, தாங்கள் பிறருக்குச் செய்யும்போது இக்கணக்கு மறந்துவிடுகின்றது. "எல்லாம் போதும் இரண்டு ரூபாயில் செய்து விடலாமா?" என்ற சொல் தாராளமாக வந்துவிடுகிறது.

(15) விதியின் கொடுமையினுல் விவாகம் தடைபட்டுவிட்ட காதலர்களின் கதியும். குற்றம் செய்யாது அநியாயப் பழியால் அந்தமானுக்கு அனுப்பப்பட்ட கைதிகளின் கதியும் ஒன்ருகவே இருக்கும்.

(16) மகாத்மா காந்தியை நேரில் கண்டேன், பேசினேன், கதர் மாலையைப் போட்டேன் என்று சிலர் மூட்டையை யடுக்குகிருர்கள். இதை அநேக பாமரர்கள் உண்மை என்றே எண்ணுகிருர்கள். காந்தியுடன் கூட இருந்தவர்களைக் கேட்ட பிறகோ மேல்குறித்த பொய் மூட்டை வெளியாகி விடுகிறது. அவர்கள் காந்தியைச் சரியாகத் தரிசிக்கக்கூடயில்லை என்று அறிய நேர்கிறது. இது ஒரு கௌரவம் !!

(17) சில குள்ளநரிகள் நாத்திமார்களுக்கு இச்சகமாகத் தான் நடப்பது; ஆனுல் புருஷனிடம் சரியானபடி வத்திவைத்து ஒரு பைசா அவர்களுக்குக் கொடுக்க விடாமலும், சரியானபடி பேச விடாமலும் செய்து விடுகிருர்கள். உள்ளுக்குள் நடக்கும் சுரங்கத்தை யறியாத நாத்தியோ அண்ணன்மீதே ஆயாசப்படுகிருள்.

(15) துஷ்ட காரியத்தைப் பிரத்யக்ஷமாகத் தன் மகன் செய்ததைத் தாயார் கண்டியாதது போக "என் மகன் ஒருபோதும் செய்ய மாட்டான்; சத்தியமாகச் சொல்லுவேன்" என்று கூறிச் சண்டை யிடுவதைப் பார்த்த மகன் திருந்துவதேது? இன்னும் துஷ்டத்தனம் செய்யத் தயாராகித் துணிந்து விடுகிருன்.

(19) உண்மையான சினேகிதர்களிடத்தில் எந்த முக்கிய விஷயத்தையும் ஒளிக்க மனம் வருவதில்லை. சொல்லாவிடில் தான் ஏதோ மறைத்த குற்றம் செய்து விட்டதாகத் தோன்றுகிறது. சினேகிதர்களும் அங்ஙனமே களங்கமற்று இருப்பின் பாலும் தேனும் போல் இனிக்குமன்ருே!

(20) சங்கீதக்காரர்களை, ஆசிரியர்களை சினேகம் செய்துகொள்ள அநேகரின் விருப்பம். அதற்கே அலைகிருர்கள். அவ்வலைச்சல் எதற்கு? தாங்கள் இனும் புஸ்தகம் பெறுவதற்கும், தம் வீட்டுக் கலியாணத்தில் இலவசமாகப் பாடச் செய்வதற்கும் தான். சொந்த விஷயம் இல்லாவிடில் வருவதுஎது?

(21) கண்டிப்பு இல்லாத மனிதர்களுக்குச் சுகமில்லை. கண்டிப்புடன் செய்யும் எக்காரியத்திலும் ஜெயம் கிடைக்கும். தேக சுகமும் கெடாது. பிறருக்கும் நம்மிடத்தில் ஓர் கடிபுடி மரியாதை மதிப்பு இருக்கவைக்கும். வழ வழ கொழகொழ என்ற காரியம் அதேபோல்தான் ஆகும்.

(22) தங்களிடத்திலுள்ள அல்பத்தனத்தை ஒரு சிலர் அறிகிருர்கள். அதை வெளியில் காட்டிக்கொள்ளாமலிருக்கவும் முயல்கிருர்கள். பலாப் பழத்தை முடிவைத்தாலும் வாசனை யடங்குமோ? அதே போன்று இவர்களை யறியாமலேயே அந்த அல்பத்தனம் வெளியாகி விடுகிறதாம்.

வெளி வுலகமெல்லாம் தவருன வழியில் கடவுளை வழிபாடு செய்யும் பொழுது உங்கள் பெரியார் உங்களுக்கு உத்தமமான வழியைக் காட்டியிருக்கிருர்கள். அதை நீங்கள் பின்பற்றி உங்களின் வாழ்க்கையின் மேன்மையைத் தேடிக்கொள்ளுங்கள்.

(23) எல்லோரையும் குற்றங் குறைகூறித் தூஷிப்பதேதான் பெருமை என்று சிலர் நினைக்கிறார்கள். பிறரோ, "ஆமாம், அவர்களின் பவிஷே அவ்வளவுதான். அவர்களின் பேச்சும் ஒரு பேச்சா தூரத் தள்ளு." என்று அலக்ஷியமாகக் கூறி விடுகிறார்கள். மேல் குறித்தவர்களுக்கு மதிப்பேது?

(24) பசுமாடு தாராளமாக இரண்டு படி பால் கறந்தாலும் அதை யொளித்து அரைப்படிதான் கறக்கிறது என்று சிலர் அல்பத்தனமாகக் கூறுகிறார்கள். வாங்கும்போது கால்படி பால் வாங்கி விட்டு முக்கால்படி பால் வாங்குகிறேன் என்று சிலர் ஜம்பம் பேசுகிறார்கள். இதில் என்ன லாபம் பெருமை வந்து விடுகிறதோ!

(25) தன்னுடைய ஊழல் குப்பைகள் வெளியாகிவிடப் போகிறதே என்கிற பயமின்றிப் பிறரை அனுவசியமாகத் தூஷிக்க, அதன் மூலம் தன்னுடைய நாற்றம் வெளிக்கிளம்பி ஊர் சிறிக்கும்படியாக பிறகு கையைப் பிசைந்து பலன் என்ன?

ஒன்றைப் பார்த்து எழுதுதல்.

மனதில் ஒரு பரபரப்பான நடமாட்டம் இல்லாதவர்களுக்கு ஒன்றைப் பார்த்து எழுதுதல் சுலபமாய்த் தோற்றும். புத்தி சுறுசுறுப்புள்ளவர்கட்கோ தம் உள்ளத்தில் உற்பவிக்கும் சிந்தனை ஊற்றுகளை யெல்லாம் அடக்கிக்கொண்டு ஒரு மந்தமதியேபோல் அதிலுள்ளதை அப்படியப்படியே எழுதவேண்டி வருவதில் அது அதிக கஷ்டமாகிறது. தன் மனத்திலே பொங்கும் புதிய நினைவுகளும் சுறுசுறுப்பும் மங்கி மறைகிறது. ஒன்றைப் பார்த்து எழுதுவதைவிட, தன் மனதில் வந்ததை மட மடவென்று எழுதிச் செல்வது சுலபமா யிருக்கிறது. ஒன்றைப் பார்த்து எழுதுவதிலே தான் யோசித்துச் சிரமப்படாமலே வரையக்கூடியதா யிருப்பதில்—அது ஒரு சுகமே. என்றாலும் தீவிர புத்தி எவ்வளவோ மந்தப்பட்டு ஒரு மூலையில் கிடப்பதாகிறது.

இரு புஜங்களிலும் சங்கு சக்கரங்களை அனலிற் காட்டிச் சூடு இடுவதான ஸமாச்ரயணை என்ற வைஷ்ணவ தருமத்தை வைஷ்ணவ மடாதிபதிகளும் அவர்களால் நியமிக்கப்பட்ட பிராமணோத்தமர்களும் முற்காலத்தில் நிறைவேற்றி வந்தனர். தற்போது அது ஒருகுடும்பப் பிழைப்பாகக் கொள்ளப்பட்டதோடு, இதில் நல்ல லாபமிருக்கிறதென்று பிராமணரல்லாதாரிற் சிலரும் ஆசாரிய புருஷாளாய் சமாச்ரயணை செய்யப் புறப்பட்டுவிட்டார்கள். அவர்களுக்கும் சிஷ்யர்கள் கிடைத்து சமாச்ரயண வியாபாரம் நன்றாக நடந்து ஆயிரக் கணக்கில் சொத்தும் சேர்ந்திருக்கின்றன. பணம் சேர்க்க இதுவும் ஒருவழிபோலும்!

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

அது உங்களுக்குத் தெரியுமா?



என்னடா! விகடன் காட்டுவதெல்லாம்

வேடிக்கையா யிருக்கின்றதே! அது என்ன சங்கதி, எது சமாச்சாரமென்கிறீர்களா? எல்லாம் வேடிக்கை தான்! உற்றுப் பார்த்தறிகிற சங்கதியுமுண்டு; பிறர் சொல்லத் தெரிகிற சங்கதியுமுண்டு; தானே தனது அனுபவமாய் உணர்ந்து கண்டு வைக்கிற சங்கதியுமுண்டு! அத்தகைய இல்லாத பொல்லாத அல்லாத சொல்லாத நில்லாத கல்லாத செல்லாத சங்கதிகளிலே கொஞ்சம் சரக்கை விகடன் இப்போது கொட்டி யளக்கிறேன்! நீங்களும் கிட்டி முட்டி வந்து ஒட்டிக் கேளுங்கள்!

ஃ

உலகம் வேடிக்கையாக மட்டுமெல்ல, விநோதமாக மாத்திரமல்ல, அது ஒரு புதுமையாகவும் தோன்றுகிறது! "மெல்லின்ஸ் ஆகாரம்" போல் 'பிறர் கைபடாத' புதுச்சரக்கையே ஒவ்வொருவனும் விரும்புகிறான்! தேடு முன்னே, கேட்கு முன்னே, காணுமுன்னே, தொடு முன்னே, தொட்டுத் தாவுமுன்னே எல்லாம் முதன்முதலிலே எதுவுமே புதுமைதான்! 'புதிசு' என்கிற எண்ணந்தான்! புதியதிலே எதுவும் பளபளப்பும், தளுக்கும், குலுக்கும், மினுக்கும் காட்டுகிறதுதான்! பிறகு இருக்கிறதடா அப்பா சங்கதி! "இந்த மூஞ்சிக்கு இத்தனை மஞ்சளா" என்பதுபோல அப்பாலே அது தொளதொளத்துப் பழுத்து வெளுத்து சுளித்து புளித்து சழுத்து இழுத்துக் கொள்வதுமாய் விடுகிறது! முதலில் புதியதாகவே ஒன்றைத் தான் பெற்றுப் பிறகு தன்னாலேயே அது பழயதாகிவிடும்போது, அதில் குற்றம் சொல்ல இடமில்லாததால் அது மனதுக்கு சமாதானந்தான்! புதியதொன்றோடு அனுபவித்துப் பழகிய பழக்க வாசனை, அதுபழயதாகிவிடும்போதுங் கூட விட்டுப்போகாமல் தொட்டுக் கொள்ளுந்தான்! இந்த வகையிலே என்றைக்கும் ஒற்றுமைதான்! திருப்திதான்! ஆனால், பழயதையும், பிறர் பழகிப் புளித்ததையும், அழுகியதையும், ஒடிந்த ஓட்டையையும் புதியதென்றே நினைத்துப் புத்தி மயங்கிப் பெற்றுப்போய்ப் பிரகு ஏமாறிவிடுகி

நரைத்துவிட்ட மீசையானாலும் அது முகத்திலிருந்தால் அதற்கு ஒரு தனி மகிமை இருக்கத்தான் செய்கிறதென்று ஒருவர் கூறுகிறார்.

றூர்களே! அதுதானப்பா பெரிய சங்கடம்! பெருமூச்சு! ஏக்கம்! கண்ருவி! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

சிலர் தங்களின் பிகுவு திகுவு முறைப்பு கோபங்களை யெல்லாம் மற்றவர்களிடம் காண்பித்துக் கொண்டு விலகிப் பிரிந்து தூரப் போய்விடுகிருர்கள்! அந்த மற்றவர்களோ இவற்றை யெல்லாம் சட்டையே செய்வதில்லை! இந்த இடத்தில் தங்களின் பருப்பு வேகாதென்று தெரிந்துபோன பிறகு, தாங்களாகவே வலிய வந்து மறுபடியும் உறவு, நேசம் பிடிக்க நெருங்குகிருர்கள்! ஆனுலும், இவர்களின் சுபாவமும் குணக்கோணல்களும் வெட்ட வெளிச்சமாய் அறிந்துகொண்டுவிட்ட பிறகு, மற்றவர்களுக்குப் பழைய பிடிப்பு விட்டுப்போய் முன்னைப் போல அவ்வளவு நெருங்கிப் பழகுவதில்லையாம்! பேச்சுகளும் சரி சரி என்று வெகு சுருக்கத்தில் முடிந்து எழுந்துவிடும்படியாகிறதாம்! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

நம்பிக்கையுள்ள வேலையாட்கள் எவ்வளவு உயர்ந்த சம்பளம் கொடுத்தாலும் சிலருக்கு அகப்படுவதே யில்லையாம்! வேறு சிலருக்கோ குறைந்த சம்பளத்துக்கே திறமையுள்ள வேலையாட்கள் கிடைக்கிருர்களாம்! அது உங்களுக்குத் தெரியுமா? குறித்த இரண்டொருவர் அதிகமாகத் தன் வீட்டுக்கு வருவதைப் பற்றி வீட்டுக்காரன் சந்தேக எண்ணமிட்டுக்கொண்டு யோசிக்கிருன்! இவர்கள் வெகு நல்ல மனிதர்கள் போல இவ்வளவுக்கு ஏன் பணிந்து நடக்கவேண்டுமோ என்றும் உறுமிப் பார்க்கிருன்! வீட்டுக்குள்ளேயே ஆண்கள் பெண்கள் மீதும் சந்தேகமுண்டாகிவிடுகிறது! அவர்களின் நடத்தைக் கோணல்களைக் கண்டுபிடிக்கிற வேலையைத் தூக்கிக்கொள்கிருர்கள்! அதற்குப்பிறகு கலகம் சண்டை பிரிவினை மனஸ்தாபங்கள். ஒருவரையொருவர் விழுங்கிவிட நினைக்கிற—சபிக்கிற சங்கதிகளெல்லாம் புறப்பட்டு முற்றிக்கொள்கிறதுகளாம்! அப்பாலே, ஒன்ருயிருந்து சந்தோஷப்பட முடியாமலே போய், ஒருவருக்கொருவர் சாவு வாழ்வுகளுக்கும் கூட எட்டிப் பாராமலே அறுத்துக் கொண்டு போய்விடுகிருர்களாம்! இவ்வளவும் சந்தேகப் பேய் செய்யும் கூத்துகளாம்! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

ஒரு மிளகு கஷாயம் வைக்கிறதென்ருல், அதற்கு வீட்டிலே இருக்கிற மிளகையே எடுத்துக்கொள்ளச் செய்யவேண்டுமாம்! அப்படியின்றி, வேறே மிளகு வாங்கி வருவதாகச் சொல்லிப் பிறகு அதை மறந்துவிட்டால் "எல்லா சாமான்களும் கடையிலிருந்து வாங்கிவர ஞாபகமிருக்கும்; எனக்கென்று மிளகு வாங்கத்தான் மறந்துபோகும்" என்று வீட்டிலிருப்பவர்கள் சண்டை பிடித்துக்கொள்வார்களாம்! பிறகு வாங்கி வருவதாகச் சொன்னுலோ, "எனக்கு ஏன் அந்தச் செலவு செய்யவேணும், வேணடவே வேண்டாம்" என்று முறைத்துக்கொள்வார்களாம்! இவ்வளவு சச்சரவுக்கு இடமில்லாமல் வீட்டிலிருக்கிற மிளகையே போட்டுக்கொள்ள விட்டிருந்தால் எந்தக்

மிகுந்த முன்கோபகுணங் கொண்டோர் எவ்வளவு பக்தி ஜபம் செய்தாலும அவை பலியாவாம். சாதுக்களாய்த் தோன்றும் சிலரைக் கோபவேளையில் காணுகையில் நெருப்பைக் கக்குகிருர்கள்!

கூச்சலும் புறப்பட்டிராதாம்! இப்படியே கையில் அன்றைக்கு இருப்பதைக்கொண்டே அந்த நாளின் பொழுதை முழுதும் கழித்துப்போட வேண்டுமோம்! கடன் கேட்கப் புறப்படுவதும், கடைக்குப்போய் வாங்குவதும், முழு ரூபாயாக இன்று கையிலேஇருப்பதைச் சில்லரைக்காக மாற்றுகிற சங்கதியும் மறுநாளைக்கு-அடுத்த தினத்துக்கு வைத்துக்கொள்வதே சமுசார செட்டித்தனமாம்! இப்படிச் செட்டாக இருந்து முழு ரூபாயை அன்றைக்கு மாற்றுமல்ல இருக்கிறவரையில், அன்றைக்கு எதுவும் சுருக்கமாகி வேறு செலவுகளில்லாமற் போகுமாம்! அவ்விதமின்றி முழு ரூபாயைச் சில்லரையாக மாற்றிவிட்டாலோ அன்றைப் பொழுதிலேயே அது தீர்ந்துபோய், மறுநாளைக்கு வேறு முழு ரூபாயொன்றை எடுக்கும்படியாகிவிடுமாம்! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

ஆண்டவன் அவரவர்களுக்குத் தக்கபடியேதான் படியளக்கிறாராம்! ஒருவனை ஒரு உதவியுமின்றித் தானேஉழைத்து வாழுகிறவனை அப்படியே சமாளித்துக்கொள்வானென்று அந்தவாழ்விலேயே விட்டுவிடுகிறாராம்! எப்போதுமே தன் பக்கத்தில் வேலைக்காரனோடு காலமுழுதும் பிரபுத்வமாகவே செல்வாக்கிலிருக்க நினைப்போருக்கு அவர்களின் செலவுகளுக்கெல்லாம் கட்டிவருமாறு படியளக்கிறாராம்! காலணா எண்ணெயிலேயே சமையலை முடித்துக்கொள்கிறவர்களுக்கு அந்தக் காலணா எண்ணெயே கொடுக்கிறாராம்! ஒரு படி எண்ணெயில் வறுக்கிறவர்களுக்கு அந்தப் படியே தருகிறாராம்! நெய்யே வேண்டுமென்போருக்கு நெய்யிலேயே யெல்லாம் தயாராக வைக்கிறாராம்! மண்ணே போதுமென்பவர்களுக்கு மண்ணையே தருகிறாராம்! வீடு நிறையும்படி மனுஷ்யர்கள் அதிகமாகக் கூடியிருந்தபோது அதற்குத் தகுந்த அதிக வரவும், ஜனக்கூட்டம் குறைந்துவிட்டபோது அதற்குத் தக்கின சொற்ப வருமானமும் காண்பிக்கிறாராம்! சற்று அதிகப்பட்ட ஒரு முக்கிய செலவை ஒருவன் செய்துகொண்டு வரும்போது 'அந்தச்செலவு ஏன்?' என்று அதை அவன் நிறுத்திவிட நினைத்தாலும், "கடவுளே இந்தச் செலவுக்கு எவ்வெவ்விதமாகவோ வழி செய்து நடத்திவரும்போது, தான் அதை வேண்டாமென்று ஒதுக்கிவிட்டால் கடவுளும் அந்தச் செலவுக்கென்று படியளந்துவருகிற அதிகப்பட்ட பணத்தையும் தனக்குக்கிடைக்காமற் செய்துவிடக்கூடும்" என்று நீளநீள எண்ணமிட்டபடி, "ஆண்டவனே அருளுடன் தந்து நடத்துகையிலே, நடக்கிற செலவு நடக்கட்டும்" என்று கடவுளின்மீது அந்தப் பாரத்தை — பொறுப்பைப் போட்டுவிடுகிறானும்! இப்படிக் கடவுளையே நம்பி, எல்லாம் அவர் செயலாகவே எண்ணிவிடுகிறவர்களுக்கு, அவர்களின் கையில் எவ்வளவுதான் காசு பணம் குறைந்திருந்தாலும், புதுபுது வருமானங்கள் எங்கெங்கிருந்தோ வந்து, அவ்வப்போது நடக்கவேண்டிய செலவுகளெல்லாம் நாலுபேர் முன்பு மதிப்பாகவே கௌரவமாகவே நடந்துவிடுகின்றனவாம்! இது கடவுளையே நம்பிய நம்பிக்கை

பிரிட்டிஷ் ராஜ்யததில் அரசரும் அரசியும் ப்ரோடெஸ்டெண்டு மதத்தினராகத்தான் இருக்கவேண்டுமென்றும், பிரிட்டிஷ் அரசர் ரோமன் கத்தோலிக் மதத்தினளாகிய ஒரு பெண்ணை விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்றும் பார்லிமெண்டின் சட்டம் கட்டுப்பாடு செய்துளதாம்.

யின் ஒரு தனித்த மகத்துவமாம்! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

ஒருவரைக் கண்டதுமே பரபரப்புடனே வேஷ்டியை இழுத்து இடையில் சுற்றிக்கொண்டு, கையெடுத்துக் கும்பிடுபோட்டு, அனுவசியமாய் அதிகம் உட்பட்டுத் தனது மதிப்பைக் குறைத்துக் கொள்வதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறவர்களை, மற்றவர்களும் அந்தத் தாழ்ந்த தரத்திலேயே வைத்துவிடுகிறார்களாம்! அவ்விதமின்றித் தன்மதிப்போடு சரிசரியாய் நாற்காலி தேடி அதில் உட்கார வருவோரை அதற்கேற்றபடியே நாற்காலிபோட்டு மரியாதை செய்கிறார்களாம்! எல்லாம் அவரவர்கள் நடந்து கொள்கிறவிதத்தி லிருக்கின்றனவாம்! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

நல்லது நினைக்கிறவனுக்கு என்றைக்குமே சொட்டுச்சொல் தானும்! பிறரது அவசரத்துக்கு உதவவேண்டுமென்று அவர்களோடு உழைத்தால், அப்படி உழைக்கிறவனை மதிக்காமல் அவனை ஏதோ சோற்றுக்கு வீங்கி வந்தவனாக எண்ணி அவன் மேலே அதிகாரங்கள் செய்யப் புறப்பட்டுக் கொள்கிறார்களாம்! ஒரு கல்யாணத்துக்கு இருவர் போனார்களாம்! அதில் ஒருவன் அவ்விடத்திய வேலைகளுக்கு உதவியாயிருந்து எல்லோருக்கும் வட்டித்து எச்சிலைகளும் எடுத்தானும்! மற்றொருவனோ கௌரவமாய் நாலு பேர் மத்தியிலே மதிப்புடன் உட்கார்ந்திருந்தானும்! மறுநாள் பந்தி பரிமாறுகையில் முன்பு எச்சிலை எடுத்தவனும் அந்தப் பந்தியில் உட்கார்ந்துகொள்ள, அங்கிருந்தவர்கள் "என்ன அப்பா, நீயும் உட்கார்ந்து விட்டாய், பரிமாறுகிறது யாரு, இலைகளை எடுக்கிறது யாரு, சே! எழுந்திரு" என்றார்களாம்! அவனைப் பந்தியிலிருந்து எழுப்பியே விட்டது அவனுக்கு அவமானமா யிருந்ததாம்! ஏதோ வேலைகளுக்கு உதவியாகத் துணையிருக்கப்போய்த் தனக்கு வந்த கேவலத்தை நினைத்து நொந்தானும்! மற்றொருவனோ கௌரவமாகவே நின்று பந்தியில் புசித்து எழுந்தானும்! உதவியாயிருந்தவன் உதைப்படுவதுதான் அதிகமாம்! விசுவாசக்காரனுக்கு வெண்ணீரும் பருக்கையுந்தானும்! தட்டோட்டக்காரனுக்கும், தளுக்குக்காரனுக்குந்தான் தயிரும் சாதமுமாம்! அதிகம் உழைத்தவனையும், அதிகம் உதவியவனையுந்தான் கண்டபடி ஏசுகிறதாம்! காய்த்த மரத்தில்தான் கல்லடி அதிகமாம்! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

தூர பந்துக்களிடம் அதிகம் முகங்கொடுத்துப் பேசினால், எங்கே அவர்கள் தங்கள் வீட்டிற்கு வந்து குந்திக் கொள்வார்களோவென்று பேச்சுகளைக் குறைத்து, மூஞ்சியைத் திருப்பி ஒதுங்கிக்கொண்டு போய்விடுவது சிலரது வழக்கமாம்! அது உங்களுக்குத் தெரியுமா? வீட்டிலிருக்கிற முக்கியஸ்தர்கள் குறித்த சிலரை முதலில் மதிப்பாக நடத்தி விட்டுப் பிறகு மனம் மாறி அன்னியர்கள்போல் நினைத்துவிட, அந்த

ஒருநாட் ஜ்வரம் ஒரு யானையின் பலத்தை உறிஞ்சிவிடுகிறது. நாக்கு கசப்பாகிறது. அரைப்பானை சாப்பிட்டவன் மூன்று பிடி அன்னம் போதுமென்கிறான். அவனைத் தூக்கி உட்காரவைக்க ஒருவர் வேண்டியிருக்கிறது. எழுந்து நடக்கக் கால்களில் பலமே காணோம்.

வீட்டில் வாழ வருகிற மருமகப் பெண்களோ அதற்கும் மேலாகத் துள்ளி 'அவர்களிடம் என்ன பேச்சு, அன்னியரிடத்து ஏன் வார்த்தை' என்று விலகிக்கொண்டு, வெளிக்குத் தாங்கள் நாணத்தால் பேசாமல் தூரப்போய் அப்படியான ஒரு மரியாதை காட்டுவதாகக் குலுக்கித் தளுக்கு வேஷம் போடுவார்களாம்! அத்துடன், மற்றவர்களைக் கிள்ளுகீரையாகவும் கேவலம் அன்னக்காவடிகளாகவும் எண்ணி விடுவார்களாம்! சில பெரிய வீடுகளின் சங்கதிகள் இப்படியிருப்பதில், அங்கே எட்டிப் பார்க்கக்கூட விருப்பமில்லாமல் கசந்து ஒதுங்கிப் போகும்படியாகிறதாம்! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

எவ்வளவு உறவு—நேசங்களானாலும், இவ்வளவு வரைக்கும் தான் வீட்டுக்குள் நுழைந்து வரலாமென்ற ஒரு எல்லையும் அளவும் இருக்க வேண்டுமாம்! அந்த ஒழுங்கைத் தாண்டி மீறி வீட்டிற்குள் எந்த இடத்துக்கும் அறைகளுக்குள்ளும் தாராளமாக வரவும் போகவும் ஆகிவிடுவதிலே சில சமயங்களில் கேவல விபரீதங்களுக்கும் ஏதுவாய் விடுகிறதாம்! வீட்டில் பெண்கள் தனித்துள்ளபோது அவ்வீட்டுக்காரரையோ மற்றவரையோ தேடிவருவோர் வெளித்திண்ணையைத் தாண்டி உள்ளுக்குக் கால்வைப்பது ஒழுங்கீனமாகுமாம்! முன்பு அழைக்கப்பட்டு அந்த வீட்டுக்குள் தாங்கள் உட்கார்ந்திருந்த இடமாயினும், மறுபடியும் அங்கு அழைத்தாலன்றிப் போகக்கூடாதாம்! அதிலும், வீட்டில் ஆண்மக்கள் இல்லாதபோது அந்த இடத்திற்குக் கால் வைப்பதே கூடாதாம்! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

எவ்வளவுதான் வைராக்கியங்களிருக்கட்டும்; ஒழுங்கு, முறை, நன்னெறிகளிருக்கட்டும்; பெரிய படிப்புகளைச் சுமந்தவர்களா யிருக்கட்டும்; இவர்கள் மட்டுமே யல்ல,—எவ்வளவோ நோய் நொடி பிடித்து அழுகிறவர்கள் தங்களின் உபாதைகளைக் கவனியாமலும், எத்தனையோ பெரிய துயரத்தில் தவிப்பவர்கள் தங்களின் ஸஞ்சலங்களை மறந்துவிட்டும், சொலற்கரிய கஷ்டங்களில் சிக்கிக் கொண்டவர்கள் அவற்றை எண்ணாமலுமே போய், அந்த சமயத்துக்குத் தங்களின் புத்தி—தர்மம்—நியாயம்—துக்கம்—நிர்ப்பந்தம் எதையுமே அடியுடன் மறந்துவிட்டு, திடீரென்று மூண்டுகொண்ட காமத்தீயின் வலையிற்பட்டுக் கெட்டுச் சீரழிந்துவிட்டு, அதற்கப்பாலேதான் தாங்கள் நடந்துகொண்டுவிட்ட ஈனச் செய்கைக்குப் பல்லாலே கடிக்கிறதும் துடிக்கிறதும் நோகிறதும் வேகிறதுமாய் ஆகிறார்களாமே! இவ்வளவுக்கு மயக்கு மயக்க வல்லதாய் ஸ்திரீகளின் தோற்றம் மகா மந்திரசக்தியால் நிர்மாணிக்கப்பெற்ற ஒரு மோகனக்கோட்டைபோலிருக்கிறதாமே! அந்தக் கோட்டை எத்தகையோரையும் வேட்டையாடித் தன்னிலே வீழ்த்தி, எல்லாக் கவலைகளையும் மறக்கவைத்து மாயம் விளைத்து நேயம் செய்துவிடுகிற

ரங்கசாமி நாயக்கர், அங்கப்ப செட்டியார், கிருஷ்ணசாமிபிள்ளை என்றிருந்த பெயர்கள் பாகவத கோஷ்டியில் சேர்ந்துகொண்டவுடன், ரங்க ராமாநுஜதாஸர், அங்கப்ப ராமாநுஜதாஸர், கிருஷ்ண ராமாநுஜதாஸர் என்று மாறிவிடுகின்றன. ஆனால் ஒரு பத்திரத்தில் கையெழுத்திடும்போது மட்டும் பழய பெயரையே உபயோகிக்கிறார்கள்.

தாமே! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

ஒருவனுக்குத் தன் சரீரத்தைப் பாதுகாக்க முதல் மனைவியோ அதை வளர்த்தவர்களோ இருக்கிற வரையில் கவலையே யில்லையாம்! இன்னும் தின்னு தின்னு என்று கொடுத்து மட்டுக்கு மிஞ்சி ஊட்டுவார்களாம்! அத்தகையோர் கண் மூடிப்போன பின்பு, தன் தேகத்தைத் தானேதான் காத்துக்கொள்ள வருமாம்! மற்றவர்கள் அவ்வளவு சிரத்தைப்பட மாட்டார்களாம்! சம்பாதித்துக் கொண்டு வந்து போட்டால்மட்டும் கொழுக்கத் தின்னுவார்களாம்! அதோடு போச்சுதா? "உன் உடம்பைக் காப்பாற்றிக் கொள்ள மட்டும் பாலும் வெண்ணெயும் வேண்டியவரை உண்ணுகிறாயே; அப்படித்தானே இருக்கும் எங்கள் உடம்பும்; உனக்குச் செலவிடமட்டும் பணம் கிடைக்கிறதா?—எங்களுக்குச் செலவிடவென்றால் மட்டும் கை சுருங்குகிறதா?—என்று சொல்லிக் குத்திக் காண்பிப்பார்களாம்! அவ்வளவே தவிர, வீடுமுழுதுக்கும் உழைத்துக் காப்பாற்றுகிறவன் தனக்கென்று தனியாகச் சில புஷ்டியானவைகளும் சேர்த்துச் சாப்பிட்டு நன்றாயிருக்கட்டுமென்ற பெரிய புத்தியுடன் நினைக்கமாட்டார்களாம்! அப்படி அவர்கள் பொறாமையுடன் சொல்லும்போது, தன்னை ஊட்டி வளர்த்தவர்கள் உயிரோடு இப்போதிருந்து, தான் வெண்ணெயும் பாலும் ரொட்டியும் தின்றால் இப்படிச் சொல்லிக் காட்டுவார்களா?—இன்னும் அதிகமாக வல்லவோ புசிக்கச் செய்வார்கள்; அந்தப் பெரிய புத்தியின் பெருமை எங்கே?—இந்த அல்பத்தனப் பொறாமைப் புத்திக்காரர்களின் சிறுமை எங்கே?—என்று துக்கப்பட்டு ஏங்க வருமாம்! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

எல்லோருமே நோய் நொடியில்லாமல் சவுக்கியமாய் எப்போதுமே இருந்து விடுகிறார்களா? பாயில் படுத்துக்கொள்கிற நாளும் ஒன்று இருக்கவே இருக்கிறது! ஒருவர் பிணியால் மெலிந்து கதறும்போது, அப்படித்தான் வேண்டுமென்று பழித்துக் கிழிப்போர், தாங்களும் அப்படியே ஒருநாள் படுத்து வீங்க வருமென்று நினைத்துப் பார்க்கிறதில்லையாமே! மாமிக்கு நோய் வந்தால் மருமகள் சிரிப்புடன் இருக்கிறாளாமே! மூத்தாளைத் தேள் கடித்தால், இளையாள் அந்தத் தேளை அடிக்காமலே உயிருடன் வெளியில் எறிந்துவிட்டு வேடிக்கை பார்க்கிறாளாமே! கடித்த தேளை அடித்துக் கொல்லாவிடில் கடியுண்டவர்களுக்கு விஷம் இன்னும் அதிகமாய் ஏறி வாதனைப் படுத்துமாம்! அப்படி அதிகப்பட்ட வாதனையை மூத்தாள் படட்டுமென்றே இளையாள் அந்தத் தேளை அடிக்காமல் எறிகிறாளாம்! இப்படிப் பழித்துச் சிரித்துக் குலுக்கி வேடிக்கை பார்த்தவர்கள் வியாதியாய்ப் படுத்துக் கொள்ளுகிற காலம் வரும்போது, முந்தியவர்களைவிட அதிகமாகத் துள்ளிக் கதறிக் கத்துகிறார்களாமே! அப்பா, அப்பா என்று அலறுகிறார்களாமே! அது உங்களுக்குத் தெரியுமா?

ஃ


பணத்துக்கு ஆசைப்பட்டுக்கொண்டு புது பதவியில் புகுந்து பழைய நன்றிகளையும், பழைய நண்பர்களையும், பழைய ஞாபகங்களையும் மறந்துபோவது எங்கும் இயல்பாகி வருகிறது.

ஒருவனை மிக்க மேன்மையாக மதிக்கிறது; அவனை எல்லோரிடமும் புகழ்ந்து சொல்வது; அவனை எவ்வளவோ பிரியமாக வரவேற்று உபசரிப்பது; தன்னுடனேயே இருக்கும்படி வேண்டுவது; இன்னும் கொஞ்சம் நேரமிருந்து பேசிப் போகும்படி அன்பால் கெஞ்சுவது! இவ்வளவு பிரீதியுடனிருந்தும் அந்த ஒருவனோ அதற்குத் தகுந்தபடி யில்லாமல் வாயளவில் அன்பாய், எவ்வளவு கடும் நோயில் கிடந்தாலும் வந்த மறு நிமிஷமே பறந்துபோய் அப்பால் பத்து தினங்களுக்குப் பிறகு வருகிறவனாய், அந்த ஊரிலேயே இருந்தும் பல நாளைக்கும் எட்டிப் பாராமல் எப்போதோ ஒரு பொழுது வந்து சில நிமிஷம் பேசிக் கை கழுவிக்கொண்டு கடன் கழித்து ஓடுகிறவனாய், ஒட்டியிராமல் தூர தூரவே போகிறவனாயிருந்தால் அவன் மீது அன்பு வைத்தவர்களும், நாம் வைத்த அன்புபோல் அவன் நம் மீது வைக்கவில்லையென்று மனம் வெறுத்து சலித்து அலுத்து ஒதுங்கிப்போக வருகிறதாம்! அதற்கப்பால், அவன் வந்தாலும் போனாலும் கவனியாமல் அதற்கு ஒரு மதிப்பும் ஒரு கணக்கும் வைக்காமல், எந்தஆவலாதியும் பற்றுதலும் இல்லாமலே போகிறதாம்! ஒரு அடி ஒருவன் விலகினால், இன்னொரு அடிக்கு மற்றவர்களும் விலகுவார்களாம்! அது உங்களுக்குத் தெரியுமா? இன்னும் மற்றுமுள்ள சரக்குகளை யெல்லாம் அடுத்த மாதம் சொல்லுகிறேன்! ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

ஒட்டுவதில்லை!

சிலருக்கு எத்தகைய உயர்ந்த வாழ்வு வரினும் ஒட்டுவதில்லை. தக்க இடத்தில் தம் பெண்ணைக் கொடுப்பினும் அதுவும் நீடித்திருப்பதில்லை. எவ்வளவோ செல்வம் கைக் கெட்டுவதுபோல் தோன்றிப் பின்பு தூர ஓடிவிடுகிறது. எஜமானன் காலமாக, அந்த வியாபாரம் தனக்கே சொந்தமாகும்போலிருந்து, பிறகு திடீரென வேறு கை மாறிவிடுகிறது. குடிசை வீட்டிலிருந்த பெண்கள் விவாகமாகி மாடி வீட்டு வாழ்வுக்கு உயர்ந்தும், சீக்கிரத்திலேயே குடிசை வாழ்வுக்குத் திரும்பிவிடுகிறார்கள். மண்ணில் விழுந்து புரண்டாலும் ஒட்டுவதுதான் ஒட்டும்.

தன் மனைவியே தனக்குப் பலம். அவளே தன் துணை. தாய்க்குப் பிறகு தன் மலத்தை வாரித் தன்னைக் கழுவிவிடுகிறவள் அவளே. அந்த வேலையைப் பாட்டி, அத்தை (தந்தையின் தங்கை தமக்கை) இவர்களைத் தவிர வேறு யாரும் செய்யார். உன் மலஜலங்களை அருவருப்பின்றி எடுக்கக்கூடிய உறவினர் யாரென்று பார்த்துவை. மருமகள் இருக்கிறாளே எனில், அவள் உன் குமாரனின் மனைவி. உன் மனைவியைப்போல் உனக்கு உதவமாட்டாள்.



தன் விஷயங்களை ஊர் அறிய விரும்பினால், பிறரை வீட்டுக்குள்ளே ஒரு வேளைக்கு வரவிட்டால் போதுமாம்!

உள் நுழைந்து ஆராய்வதற்கு வருவோரைத் தெருத் திண்ணையிலேயே வைக்கவேண்டுமாம்!

இரவில் உண்பதில்லை யென்போருக்கும் உப்புமா காபி கொடுத்தால் வயிறு நிறைய இழுப்பார்களாம்!

விவாகத்திற்கு வழியில்லாதவர்களே துறவி வேடத்தில் நடிப்பார்களாம்!

இந்திரியச் சேற்றிலிருந்தே உருப்பெற்ற இவ்வுடம்பு அதை மறக்க முடியுமா என்கிறார் ஒருவர்!

முக்காலணா பாக்கும், காலணா வெற்றிலையும் சேர்ந்தால்—அதற்குத் தான் தாம்பூலம் என்று பெயராம்!

பெண்களையே பெற்றால் சீக்கிரம் மருமகன், பேரன் பேத்திகளைப் பார்க்கலாமாம்!

சொத்துகள் இருக்கிறவரையில் பெண் குழந்தைகளே பிறக்குமாம்! யாவும் போன பிறகே ஆண் குழந்தைகள் உதிப்பார்களாம்!

எதுவொன்றையும் தானே செய்து பார்க்கும்போதுதான் அதிலிருக்கிற தலைவலி தெரியுமாம்!

மாற்றாந்தாயின் விரோதம் அப்பன் போன பிறகுங்கூடத் தீராதாம்!

எவ்வளவுக்குக் கபடமோ சுயநலமோ அவ்வளவுக்கு சாதுத் தன்மையாகக் காட்டுவதாம்!

படித்தவர்களுக்கு வேலை கிடைக்காவிடினும், உபாத்தியாயரின் தலைப்பாகைமட்டும் எப்போதும் பெரிதாகவே இருக்குமாம்!

எவ்வளவு அசங்கித எச்சில் ஜலமானாலும், சோடா புட்டிக்குள் இருந்தால் தீட்டுத் தோஷமில்லையாம்!

ஒருவர் பத்திரிகையை வாங்க, அதை இலவசத்தில் நூறுபேர் சுற்றி நின்று நக்குகிறதாம்!

பிறரது குடியைக் கெடுத்து ஸந்தோஷப்பட நினைப்பவர்களை இலகுவில் திருப்தி செய்யமுடியாதாம்!

கோழி முட்டையின் சத்து, மாட்டிறைச்சியின் சாரம் சேர்ந்திருந்தாலுங்கூட, அது மருந்தானால் புட்டி புட்டியாய் வைதீகர்கள் தங்களின் திருவயிற்றுக்குள்ளே தள்ளலாமாம்!

சும்மா சும்மா காசு செலவில்லாமற் கிடைத்தால் அது நல்ல பத்திரிகையாம்!

தூரத்தி லிருப்பவன் தன் வீட்டைப்பற்றி ஏங்கிவாட, அவன் வீட்டிலிருப்பவர்களோ நன்றாக உடுத்தியுண்டு சந்தோஷமா யிருக்கிறார்களாம்!

ஒருவருடைய பிரியம் சிதறிப் போன பிறகு மறுபடியும் அங்கு சென்று தொங்குகிறவனுக்கு எச்சில் இலையும் கிடைக்காதாம்!

தன் உருட்டு புரட்டு தந்திரங்களை மற்றவர்கள் அறிந்துகொண்ட பிறகேதான் அதிக யோக்கியன் போல் காட்டிக் கொள்வதாம்!

நேசம் என்பதெல்லகம் பிறகு அநுகூல சத்துருவாகிறது தானாம்!

தன் காரிய லாபப் பேச்சைத் தவிர, மற்றப் பேச்சுகளைச் சட்டென்று வெட்டிக்கொண்டு விலகுகிறவன் தன் வாழ்விலும் அப்படியே விலகி விட வருமாம்!

தன் வியாபாரமே கண்ணாய், அதற்கே பிறரிடம் நட்பாயிருப்பவனே பிழைக்கத் தெரிந்தவனாம்!

கள்ளுக்கடை நண்பர்கள்.

"என்ன அப்பேன்! நல்ல மஜாதானா? வெளு வாங்கு வாங்குறாயே! நமக்குஇன்னெக்கி இன்னும் ஒண்ணறையாவது சப்ளை பண்ணிடுணுமில்லே" என்று சொல்லிக் கொண்டே "குடகுட"வென்று கருப்பண்ணன் இரண்டு கள்ளுச் சீசாக்களை ஒரே மூச்சில் காலி செய்து விட்டான்.

ஃ

"நீ சும்மா வேணுமிண்ணமட்டும் உடடா! எனக்கென்ன புள்ளையா குட்டியா, ஒரு எழவும் கிடையாது. நீ தான் எனக்குப் புள்ளே. இன்னும் நாலு பூசைகள் சேர்த்துப் பளீர் பளீர் என்று விட்டால் என் சமுசாரம் இன்னொரு கையெழுத்துப் போட்டு விடுகிறாள். அதிலே வர்ர பணத்துக்கு அப்பறம் 4, இல்லாட்டி 5 மாசங்களுக்கு ராசா மாதிரி குடிக்கலாம்" என்று தடபுடலாய்க் கூறிக் கொண்டே கோவிந்தன் "மடமட" வென்று மூன்று சீசாக்களைக் காலி செய்துவிட்டான்.

ஃ

கோவிந்தனென்பவன், பனையபுரம் என்னும் கிராமத்தில் வேளாளர் குலத்துதித்த ஓர் தனிகனின் ஏகபுத்திரன். தன்னுடைய இருபத்து நான்காம் வயதிலேயே தாய்தந்தையரை இழந்துவிட்டான். இத்தனை வயதாகியும் அவனுக்குக் கல்யாணமாகாததின் காரணம் தன்னுடைய நடத்தை அவ்வூரார்க்குத் தெரிந்திருந்ததனாற்றான். பக்கத்தூரிலுள்ள காமாட்சியா பிள்ளை என்பவர் தன்னுடைய ஒரே புத்திரியான கமலாவை, கோவிந்தனுக்குரிய எட்டு ஏகரா நிலங்களுக்கு ஆசைப்பட்டு, அவன் குடியன் என்று தெரிந்திருந்தும், அவனுக்கே கல்யாணம் பண்ணி வைத்தார். காமாக்ஷியாப் பிள்ளையும் தன்னெண்ணப்படியே அந்த எட்டு ஏகரா நிலங்களையும், மற்றவைகளையும் தன் மகளும், கோவிந்தனின் மனைவியுமாகிய கமலாவிற்கே உரியதாக எல்லா பாத்தியங்களுடனும் எழுதி வாங்கிக்கொண்டார். கல்யாணமானதிலிருந்து கோவிந்தன் தன் எண்ணப்படி சிலவழிக்க முடியாமற் போயிற்று. ஆதலால், கோவிந்தன் தனக்குப் பணம் தேவையான பொழுதெல்லாம், தன் மனைவியை நையப்புடைத்து, பத்திரங்களில் கையெழுத்துப் போடும்படி வற்புறுத்தி பின், அதனால் கிடைக்கும் காணியை விற்று, குடித்துக்கொண்டு வருவது வழக்கம். இங்ஙனமாகவே கிட்டத்தட்ட எல்லா சொத்துக்களும், கோவிந்தனால் மதுபானத்திற்கு விரையஞ் செய்யப்பட்டபின் மிஞ்சியிருந்தது ஒன்றரை ஏக்கரா நிலமே. இதையும் அழிப்பதற்காகவேதான் முன் சொன்ன சம்பாஷணை நடக்கலாயிற்று.

ஃ

பின் வருமாறு எதிர்வீட்டுக் கருப்பண்ணன் என்னும், மனைவி மக்களற்ற குடியானவனும் பேசவாரம்

"பணிவுள்ளவர்களே கடாக்ஷமுள்ளவர்கள்" ஏசுநாதர்.

பித்தான். "அண்ணே! பாத்தியா நம் சிநேகிதத்தை. இதெல்லாம் அந்தப் பீடியிலே யிருந்து வந்துச் சில்லே. நல்லா நினைச்சுப் பாரு. மூதல்லே ஒரு பீடி புடிச்சோம். அப்புறம் அது மூத்திப்போக, அரை அணுவுக்கு கஞ்சா வாங்கி அடிச் சோம். பின்னாலே கால்புட்டி, அரைபுட்டி, ஒன்னு, ரெண்டு இண்ணு இப்போதிக்கு மூணிலே வந்து நிக் கிறது. ஆமண்ணே" என்று சொல்லி விட்டு கோவிந்தன் வைத்திருந்த மற்றொரு சீசாவையும் இரகசியமாக எடுத்து, தன் வயிற்றை நிரப்பிவிட் டான்.

ஃ

கோவிந்தன் "நமக்கென்னடா தம்பி குறவு. இன்னக்கி இதோடே நிருத்திக்கோ. நாளைக்குத்தான் நமக்கு வேட்டை. பணம் வரப்போ வுது. எங்க எசமான் ஒரு ஊஸ் லெஸ் ஆசாமி. அவனைப் பாரேன். நம்ம நித்தம் அவன் ஊட்டு தெருவழி யாய் கள்ளுக்கடைக்கு வரவேண்டி யிருக்கு. தினம் அவன் ஒரு உண்டி யிலே "நாலணா போடு" இண்ணு துளைச்சு வாங்கிப்புடுறான். கடைசி யிலே எல்லாத்தையும் சேத்து திருப் பிக் கொடுத்துவிடுகிறதாக சத்தியமும் பண்ணுகிறான். அவன் குடுக்கிற தேது, எளவு எது? அவண் புள்ளை குட்டி வாயிலே போட்டுக்கிறத்துக் குத்தான். அவன் பேரைப்பாரேன். தர்மசாமிப் பிள்ளை. பேர்தான்ரொம்ப லட்சணம். அடி எங்கிரத்துக்கு ஆம்படையானைக் காணமாம்; தடி போல ரெண்டு புள்ளையாம் எங்கிரது போல, விளக்கமாத்துக்குப் பட்டுக் குஞ்சமாம். சரி எளுந்திரி. போவ வாம்" என்று கூற, அவனுடைய பொக்கிஷதாரியான கருப்பண்ண னும் புறப்பட்டான்.

ஃ

இருவரும் வீடுபோய்ச் சேர்ந்த தும், கருப்பண்ணனுக்கு இரவு பன் னிரண்டு மணிவரையில் தூக்கமே வரவில்லை. எதிர்வீட்டில் எப்பொ ழுது "பொத், பொத்" என்று சப் தம் கேட்குமென்றும், எப்பொழுது கோவிந்தனின் மனைவி கமலம் "ஐயோ! ஐயோ! கையெழுத்துப் போடுறேன்" என்று அலறுவாள் என் றும், எப்படி ஒரு நரி வெகு ஆவலு டன், சுடுகாட்டில் குழந்தைகளைப் புதைக்க வருவார்கள் என்று காத் துக்கொண்டிருக்குமோ, அதேபோல் ஒரு மணி வரையில் காத்துக்கொண் டிருந்தும், பயனில்லாததால் அதிக வருத்தத்துடன் அயர்ந்து தூங்கி விட்டான்.

ஃ

கோவிந்தன் வீடு சென்றதும் என்ன நடந்ததென்று கவனிப்போம். கணவன் உள்ளே வருவதை அம் மாது கண்டாள். கோவிந்தன் முகத்தி லேற்பட்டிருக்கும் வேறு பாடுகளையும், தன்னை அடிப்பதற்காக அவன் கையில் வைத்துள்ள தடியை யும் கவனித்த கமலம் அன்றிரவு தனக்குக் கட்டாயம் சாத்துமுறைத் திருநாள் என்று அறிந்துகொண்டு தாரையாய்க் கண்ணீர்விட்டு, இனித் தான் தன் கணவன் வீடு திரும்பு வதேயில்லை யென்றும் மறுநாள் காலை கணவன் வெளிப்போன வுடனேயே தானும் தன் தகப்பன் வீட்டிற்குச் சென்று விடுவதாயும் தீர்மானித்து விட்டாள். பின்பு அவள் தன் கணவ னருகே வந்து "என்ன தாங்கள் ஒரு

ஒருவரிடத்தில் அதிகப் பிரீதிகொண்டிருப்பின், மற்றொருவரிடத்துப் பிரீதி குறைந்ததாகக் கருதுவது உலகத்தின் ஸ்வபாவம்.

விதமாய் இருக்கிறீர்கள். தாங்கள் நாலைந்து மாதங்களாக என் என்னிடம் பணமே கேட்பதில்லை. முன்பு ஒன்றேகால் காணி விற்ற பணம் தீர்ந்து போயிருக்குமென்றே நம்புகின்றேன்'' என்று கூறி இந்தாருங்கள், இந்த ஐந்து ரூபாவை நாளை



செலவிற்கு வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள்'' எனத் தந்திரமாக மொழிந்து ஒரு ஐந்து ரூபாய் நோட்டைக் கணவனிடம் கொடுத்தாள். கோவிந்தனும் சிறிது இரங்கி சாத்து முறையை ஒத்திவைத்துத் தன் படுக்கைக்குச் சென்றுவிட்டான். கமலமும், தன் தந்திரம் நிறைவேறியவளா யிருப்பினும், தான் அனுபவிக்கும் அல்லல்களைப்பற்றி நினைந்து அழுது கொண்டே, தான் காலை பயணமாவதற்கு ஒரு மூட்டையும் கட்டி வைத்துக்கொண்டு, உறங்கச் சென்றாள்.

ஃ

பொழுதும் புலர்ந்தது. கோவிந்தன் ஐந்து ரூபாய்க்கும், அடுத்த வீட்டுக் கணக்கப் பிள்ளையிடம் ஒரு அணு வட்டம் கொடுத்து சில்லரை வாங்கிக் கொண்டு கருப்பண்ணனிடம் போனான்.

ஃ

கருப்பண்ணன்:—என்னப்ப? இது? வெறும் சில்லரை! நோட்டு ஒன்றையுங்காணோமே? ஏமாந்தாயா

கோவிந்தன்:—இது அவள் தந்தது; அதுபோக பாக்கிக்கு எல்லாம் இண்ணக்கி ராத்திரியல்லோ யிருக்குது திருவிழா!

என்று சொல்ல, இருவரும் கள்ளுக்கடையை நோக்கி நடந்தனர் கள்ளுக்கடையின் முன்பு "நாளையிலிருந்து இவ்விடத்தில் கடை கிடையாது'' என்று பெரிய எழுத்துகளில் எழுதி ஒரு பலகை தொங்கவிடப் பட்டிருந்தது. அதை வாசித்த இருவரும் இடியொலி கேட்ட நாகம் போல் ஏங்கினர்.

கருப்பண்ணன்:—எல்லாம் அந்தக் காந்தி ஆசாமிகள் செய்து போட்ட வேலை. பிரசங்கம் பிரசங்கம் என்று ஊர் ஊராய்ப் போய் கன்னு திங்குறாங்கோ. அதும் போதாதுண்ணு இப்போ நம்ப வவுத்திலே மண்ணைப் போட்டுட்டாங்க.

கோவிந்தன்:—போடா அதுவும் நியாயமாய்த்தாண்டா இருக்குது. நான் எல்லா நிலத்தையும் வித்து குடிச்சு புட்டேனே, அப்புறம் என்ன பண்றது? நான்கூட குடிக்கிறதை உட்டுட்டா தேவலாமிண்ணு பாக்கிறேன். உன்னாலேதான் என் குடித்தனம் அடியோடே கெட்டுது.

ஒரு உண்மையான நாணயத்துக்கு அதன் பதிவுக்கிரயம் முழுமையும் உண்டு. அவ்விதமே உண்மையான மனிதன் ஒருவனே துணையாயிருப்பினும் அதன் மதிப்பு பெரிது. பத்துலக்ஷம் பொய் நாணயங்கள் இருந்தாலும் அவை வீண் பாரமே; யாதொன்றுக்கும் பயன்படமாட்டா. அவ்விதமே போலி நண்பர்களும், போலி உறவினர்களுமாம்.




என்று சொல்லிக்கொண்டே பணத்தை எடுத்து நீட்டி சீசாக்களை வாங்கி இருவரும் குடித்து விட்டுத் திரும்பினர். நடுவழியில் அதிகக் குடிவெறியால் கருப்பண்ணன் நடக்க முடியாமல் அங்கோர் சத்திரத்தில் உட்கார்ந்து கொண்டான். கோவிந்தன் மட்டும் தான் வேலைக்குப் போக வேண்டியிருந்ததால் வீட்டிற்குத் திரும்பினான். வீட்டில் மனைவியைக் காணவில்லை! தாய் வீட்டுக்குச் சென்றாளென்று அங்கு இருந்தவர்கள் கூறினர். மிக்க ஏக்கத்துடன் கருப்பண்ணன் விழுந்து கிடக்கும் சத்திரத்துக்கு மறுபடியும் சென்றான். அன்று வேலைக்குப்போக மனமில்லை.

ஃ



கருப்பண்ணன் அறிவு மயங்கிக் கிடந்தான். தாகம் தாகம் என்று சொல்ல, கோவிந்தன் அவனைத் தூக்கி உட்காரவைத்து, அவனுக்குச் சிறிது ஜலம் கொண்டு வருவதற்காகச் சென்றான். ஒரு பெரிய மாடி வீட்டினருகே சென்று அங்கு நின்று கொண்டிருந்த இரு குழந்தைகளிடம் தாகத்திற்கு ஜலம் வேண்டுமென்று கெஞ்சினான். அந்தக் குழந்தைகளோ ஏக்கத்துடன் “அம்மா மயக்கமாக் கிடக்கு” என்றனர். இவன் திடுக்கிட்டு, “உள்ளே வேறு எவருமில்லையா?” என, குழந்தைகள் யாரும் இல்லை, வேலைக்காரன் கடைக்குப் போனான்” என்று கூறின. கோவிந்தன் ஆபத்துக்குப் பாபமில்லையென்று துணிந்து வீட்டிற்குள் குழந்தைகளோடு சென்றான். பூரண கர்ப்பிணியான பெண்மணியொருத்தி மூர்ச்சையாய்க்கிடந்தாள். குழந்தைகள் அழுதன. கோவிந்தன் துணிப்புகையை மூக்கின் அருகே மெதுவாகச் செலுத்தவும் பெண்மணி கண் விழித்துப் பார்த்து ‘சோடா’ என்றாள். கோவிந்தன் வெளியிலோடித் தன் பணத்தில் ஒரு சோடா புட்டியை வாங்கிக்கொண்டு வந்து



பெண்மணிக்குத் தரவும், அவளும் அதைப் பருகிக்கொண்டிருக்கையில் போலீஸ் இன்ஸ்பெக்டராகிய மீனு

க்ஷிசுந்தரம் பிள்ளை வீட்டிற்குள் வந்தார். தன் மனைவியின் அருகில் ஒரு அன்னியன் நிற்பதையும், அப்பொழுதுதான் தன் மனைவி 'சோடா'வைக் குடித்துப் புட்டியை அவனிடம் தருவதையும் கண்டார். குழந்தைகள் நடந்தவற்றை யெல்லாம் கூறின.

ஃ

உடனே மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை சந்தோஷத்துடன் கோவிந்தனைப் பார்த்து, 'அப்பா! உன் வாயில் மதுவின் வாடை வீசுகிறது. ஆயினும் குணத்தில் சிறந்திருக்கிறாய். எவருமில்லாத வீட்டில். வீட்டுப் பெண்ணும் மூர்ச்சையாயிருக்கையில் நகைகளோடும் நின்ற குழந்தைகளைக் கண்டும், களவாடுவோமென்ற குற்றச் செயலில் உன் புத்தி போகவில்லை. அதற்குப் பதிலாக ஆபத்தில் நீயே உன் காசைச் செலவிட்டு உபசாரம் செய்தாய். நீ யார்? எங்கு இருக்கிறது?' என்று விசாரித்தார். கோவிந்தனோ தன்னையே மறந்தவனாய் தன் விஷயங்கள் யாவற்றையும் கூறிவிட்டான்.

ஃ

சத்திரத்தில் வெறித்துக்கிடந்த கருப்பண்ணன் வெகு நேரத்துக்குப் பிறகு எழுந்து, கோவிந்தனைத்தேடிக் கொண்டு அவன் வீட்டிற்குச் சென்றான். அன்றிரவு ஒன்பதுமணிக்குக் குடிவெறியால் கள்ளுக் கடையில் ஒரு கொலை நடந்துவிட்டது. கருப்பண்ணனைப் போலீஸார் கைது செய்யவும், அவன், நான் அல்ல கோவிந்தனே கொன்றுவிட்டு ஓடினான் என்றான் ஆயினும், அவன் இறந்தவனோடு சண்டை செய்ததைப் பார்த்திருந்ததால் அவனைச் சிறை செய்தனர். கோவிந்தன் எங்கும்



அகப்படவில்லை. மூன்றாம் நாட் காலையில் கமலத்தின் தாய் வீட்டில் அவனைக் கைது செய்தனர். கமலம் தன் கணவன் போலீஸார் வசமானதைக் கண்டு கதறினாள்.

ஃ

கேஸ் விசாரணையாயிற்று. கோவிந்தனே கொலையாளி என்பதைக் கருப்பண்ணன் வெகு விவரமாய் எடுத்துக்கூறினான். கோவிந்தனோ தனக்குப் போலீஸார்தான் சாக்ஷியென்றும், தான் நிரபராதியென்றும் புகன்றான். நீதியதிபர் போலீஸார்தான் உன்னைக் குற்றவாளியென்கிறார்கள் என்று புன்னகையுடன் கூற, கோவிந்தன், போலீஸ் இன்ஸ்பெக்டரவர்களே எனக்கு சாக்ஷி என்றான். இன்ஸ்பெக்டர் விசாரிக்கப்பட்டபோது, தம் வீட்டில் நடந்த விஷயங்களைக் கூறி கோவிந்தன் யோக்கியனென்

சிலருக்கு அவர்கள் கேட்டதை உடனே செய்து திருப்திதராவிடில்—அதற்குமுன்பு செய்த யாவும், முன்பு காட்டிய அன்பு விஸ்வாசம் முதலியவைகளும் அந்த க்ஷணமே அழிந்துபோய் விடுகின்றன. அவர்கள் வேற்று மனிதர்களாகிப் பகைக்கவும் தொடங்குகிறார்கள்.

றும், கருப்பண்ணனால் கெட்டா னென்றும், கொலை நடந்த இரவும் மறுதினம் மாலை வரையிலும் தம் வீட்டிலேயே கோவிந்தன் இருந்த தும் உறங்கியதும் எல்லோருக்கும் தெரியுமென்றும், கொலை நிகழ்ந்த இரவு தமது வீட்டிற்கு வந்த பெரிய மனிதர்களிடம் கோவிந்தனைப்பற்றி சிலாகித்துப் பேசியதாயும், ஆதலின் கொலையில் அவன் சம்பந்தப்படவில்லை யென்றும் கூறினர். மற்றும் சாக்ஷி கள் விசாரிக்கப்பட்ட பிறகு கோவிந் தனை விடுவித்து, குடி வெறியால் கொன்றதாகக்கொண்டு கருப்பண்ண னுக்கு ஐந்து வருட சிக்ஷை விதித்த னர். கோவிந்தனும் கமலாவும் தங் களை ஆபத்திலிருந்து காத்த இன்ஸ் பெக்டரின் பாதங்களில் விழுந்து வணங்கினர்.



ஃ

கோவிந்தனுக்குக் கட்குடியின் வெறி நீங்கிற்று. தன் சொத்துக்களை யழித்த கருப்பண்ணனே தனக்கு எதிரியானதைக் கண்டு துஷ்ட சக வாசத்தை விட்டொழித்தான். மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை விசேஷித்த உதவிகளைச் செய்தார். கமலாவும் கோவிந்தனும் இப்போது மிக்க மனோரம்மியமாய் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். கோவிந்தன் முன்பு விற்றுவிட்ட நிலங்களில் இரண்டை யும் மீட்டுக்கொண்டான். கள்ளின் பெயரை எவரேனும் சொன்னால் நாளைக்கும் கோவிந்தன் நடுங்குவான். எவரும் திருந்துவதற்கு ஒரு காலம் பின்னுக்கு இருக்கிறது போலும்.

கையொப்பம்—ஒரு முக தரிசனம்.

கடிதத்தைப் பிரிக்காமலே அதிலுள்ள எழுத்துகளைக் கொண்டு இன்னார் வரைந்ததெனச் சொல்லிவிடக்கூடும். ஒருவருடைய எழுத்துகள் அவர்களது சாயலைத் தெரிவிக் கும் சிறந்த கருவியாகும். ஒரு கடிதத்தில் இடப்படும் கையொப்பமோ ஒருவரது முகத்தைப் பிறருக்கு அப்படியே புலப்படுத்துவது போன்றதாம். அந்தக் கையொப்பத்தில் அதற்குரியோரது முகத்தோற்றத்தைப் பிறர் காண்பர். அந்தக் கையொப்பத்திற்கேதான் எல்லா மகிமையும்!

இயேசு நாதர்.

இயேசுநாதர் பிறந்து, உலகத்தின் துக்க நிவர்த்திக்காகச் சிலுவையி லறைப்பட்டா ரென்பது உண்மை. கிறிஸ்து பிறப்பதற்கு முன் ஜனங்கள் இகலோக சுகங்களையே பெருக்கிக் கொண்டு சென்றனர். வலிமையுள்ள ஜாதியார் எளியாரைப் பிடித்து அடித்து அழிக்க முயல்வதும், வாதுக்குஇழுத்துச் சண்டை யிடுவதும், அக்காலத்து ஜனங்களின் இலக்ஷியமாகும். ஒருவாறு நாஸ்திகத் தன்மை யடைந்து, கடவுளை மறந்து, அமைதி குன்றி, சிற்றுயிர்களாய், தர்மமில்லாமல், நடை முறை தவறி மேனாட்டார்கள் நடந்துகொண்டிருக்கையில். இயேசுநாதர் பிறந்து, மனிதன் தன் ஜன்மம் எடுத்த பின்னர், அறிவினால் கஷ்டங்களைப் போக்கிக்கொண்டு, அன்பினால் ஒருவரை யொருவர் கட்டுப்படுத்திக் கொள்வது கடமை என்ற மகத்தான உபதேசத்தைச் செய்தார். அக்கொள்கைகளுக்கு இணங்காத யூதர்கள் தூண்டுதலின்பேரில் ரோமாபுரியைச் சேர்ந்த இராஜப்பிரதிநிதி ஒருவர் ஏசுநாதரைச் சிலுவையில் அறைய உத்திரவிட்டார். உலகத்தில் பாபத்தையும் அறிவு மயக்கத்தையும் அழிக்க, ஆத்மத்தியாகமே முதன்மையான கருவி எனக் கண்டு கொண்ட உண்மையை, கிறிஸ்துநாதர் அனுபவத்திலேயே காட்டி, சிலுவையில் மடிந்தனர். ஓர் உயிர் போக, அவர் மதம் மும்முரமாக ஐரோப்பா முழுதும் பரவிற்று. அவ்விதம் பரவுகையில், ஏசுநாதரின் உபதேசத்துக்கு, தத்தம் மனப்போக்குக்குத் தக்கபடி வியாக்கியானம் செய்து, தனித்தனியே சில்லரை மதங்களை ஸ்தாபித்துக் கொண்டனர்.

வ. ரா.

ஆசிரியர்களின் மதிப்பு



ஜப்பானிலிருந்து ஓர் புத்தகசாலை மானேஜர் ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாவது:—புஸ்தகம் எழுதும் பிரபல ஆசிரியர்கள் இப்பொழுது உலக யாத்திரை செய்து, சந்தர்ப்பம் வாய்த்த விடங்களில் பேசுவது இயல்பாகி விட்டது. அத்தகையவர்கள் ஜப்பானுக்கு வருவதனால், அவர்கள் எழுதும் புஸ்தகங்களுக் கேற்படும் கிராக்கி குறைந்துபோகிறது. பெர்னாட்ஷா, பெர்ட்ரண்ட் ரஸ்ஸல், ஈன்ஸ்டீன் முதலியவர்களுடைய புஸ்தகங்கள் ஏராளமாக விற்பனையாகிவந்தன. அந்த ஆசிரியர்கள் ஜப்பான் வந்த பிறகு அவர்களுடைய புஸ்தகங்கள் விற்பனையும் குறைந்து போய்விட்டன. இதனின்றும் புஸ்தகம் எழுதுபவர்களின் கியாதி-மதிப்புரை மூலமோ, அல்லது அவர்களுடைய புஸ்தகங்களைப் படித்ததன் மூலமோதான் பரவுகிறது. அவர்களைப் பார்த்துவிட்டால் அந்த மதிப்பேற்படுவதில்லை. அந்த ஆசிரியர்கள் ஜப்பானியரைப் புகழ்ந்து ஜப்பானுடைய தேசீய உணர்ச்சியை வியப்பவர்களாகவிருந்தால், அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டு ஆதரவுமதிகரிக்கிறது. சில ஆசிரியர்கள் தாங்கள் எழுதும் புஸ்தகத்தில் காட்டும் புத்திக்கூர்மையையும் திறமையையும் தங்கள் பேச்சு மூலமோ அல்லது காட்சி மூலமோ வெளியிடச் சக்தியற்றிருப்பதும் சகஜம்.

து. நே.

பிராணன் வேறு, ஜீவன் வேறா ?

“பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும்” என்று நமது ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். இவ்விரண்டில் முன்னையதை நாம் அனுபவத்திற் பார்த்தும், பின்னையதை அனுமானத்தால் உணர்ந்தும் வருகின்றோம்.

ஃ

மனிதன் உயிரோடிருக்குங் காலத்தில் அவனிடம் மூன்று அம்சங்கள் பொருந்தி யிருக்கின்றன. அவை:—(1) சரீரம். (2) பிராணன். (3) ஜீவன் என்பதாம். நம்முடைய ஸ்தூல உடம்பே சரீரம் எனப்படும். நம்முடைய சரீரத்தில் ஆன்மா இயங்குதற்கு உபகாரமாய் நிற்கும் ஒரு வகையான சக்தியே “பிராணன்” எனப்படும்.

ஃ

சரீரத்தினும் வேறாய், பிராணனிலும் வேறாய், விளங்கும் சுத்த அறிவு மயமான சித்துப் பொருளே “ஆன்மா” எனப்படும்.

ஃ

பிராணன், ஜீவன், இவ்விரண்டும் ஒன்றுதான் என்று எண்ணுவது தவறு. பிராணன் என்பது வேறு; ஜீவன் அல்லது ஆன்மா என்பது வேறு. பிராணன் என்பது மாறும் இயல்பினது. அதாவது என்றும் ஒரே தன்மையாய் இராமல் மிகுந்தும், குறைந்தும், தோன்றியும் அழிந்தும் பல மாறுதல்களுக்கு உட்படும் இயல்புடையது. ஆனால், ஆன்மாவோ இத்தகைய மாறுதல்களுக்கு உட்படுவதன்று.

ஃ

பிராணன் என்பது மின்ஸாரம், உஷ்ணம் இவைகளைப்போல் சில காரணங்களால் உற்பத்தியாகும் ஒரு விதமான சக்தியாகும். ஆகவே, பிராணனுக்கு எப்போது உற்பத்தியுண்டோ, அப்போதே அதற்கு முடிவுமுண்டு என்பது நிச்சயம். ஆனால், ஆன்மாவுக்கோ உற்பத்தியுமில்லை; முடிவுமில்லை.

ஃ

எனவே, பிராணனோடு கூடிய மானிட சரீரத்தில் வசிக்கும் ஆன்மாவே ‘மனிதன்’ என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது என்று கூறுதல் இழுக்காகாது. இதிலிருந்து ‘மரணம்’ என்றால் என்ன என்பதை நாம் ஒருவாறு ஆராய்தல்கூடும். ஆன்மாவும் சரீரமும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்துபோகும் அவசரமே மரணம் எனப்படும். இந்தப் பிரிவு எப்போது உண்டாகிறதென்றால், பிராண சக்தியினால் சரீரம் இயக்கப்படாமல் இருக்கும் சமயத்தில் உண்டாகிறது. அதாவது, சரீரத்தை இயக்கிவரும் பிராணனுடைய சக்தி குறைந்து அழியப்போகும் தறுவா

உலகத்தில் மானிடராகப் பிறந்தால் புருஷனும் மனைவியும் சேர்ந்து எப்படி வாழவேண்டுமென்பதைப்பற்றியும், மனித வாழ்க்கையில் எவ்வளவு இடையூறுகள் நேரும் என்பதையும், அந்தந்த சமயங்களில் அவரவர்கள் எவ்வெவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும் நன்றாய் ராமாயணத்தில் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

யில், ஆன்மா சரீரத்தைவிட்டுப் பிரிந்துபோய் விடுகிறது. ஆகவே, பிராணன் வேறு, ஜீவனுகிய ஆன்மா வேறு என்பது தெளிவு.

ஃ

மரணத்தின்பின் ஆன்மா என்ன ஆகிறது?—அதனுடைய நிலைமை யாது?—என்னும் கேள்விகள் எளிதில் விளக்கப்பட முடியாத கேள்விகளாகவே இருக்கின்றன. பண்டைக் காலம் தொடங்கி இன்றுவரையிலும் இம்மாதிரியான கேள்விகள் கேட்கப்படுகின்றன. இவைகளுக்கு மதாச்சாரியர்கள் தத்தம் மதானுசார ரீதியாய் பதில் கூறுவதில், ஒரு மதத்தினரது விடை மற்ருெரு மதத்தினருக்குத் திருப்திபடுவதில்லை. இவ்விதமே, இதைப்பற்றித் தத்துவ சாஸ்திரிகளும் பற்பல விதமான் அபிப்பிராயங்களை வெளியிட்டிருப்பதில், ஒருவர் கூறியதை மற்றவர்கள் ஏற்காமல் அங்கும் கலவரமே தருகிறது.

வழக்கத்தில் கேட்டுப்போன பெயர்கள்.

மாமி, நாத்தி, மாற்ருந்தாய், தந்தி என்ற பெயர்கள் எங்கும் சந்தேகக் கண்களுடன் பார்க்கப்படுகின்றன. அவைகள் கொரேத்தன்மையுள்ள பெயர்களாகவு முள்ளன. குறித்த சிலரின் பெயரைக் கேட்கையிலேயே மனம் திடுக்கிடுகின்றது. அவர்களிடமிருந்து கடிதம் வரின் அதில் உள்ள விஷயம் நல்லதோ கெடுதலோ என்றும் அஞ்சவைக்கின்றது. ஒரு அதிகாரியின் கடிதமும் இவ்விதமே அச்சந் தருகின்றது. ஒரு கொடிய எஜமானனின் கடிதமும் —அவன் நல்லதே எழுதியிருப்பினும் நடுக்கமே. தந்தி —என்றதும் எவருக்கும் பெருங் கவலை தோன்ருமலில்லை.

காலணு பெருத முருங்கையிலையை ஒரு சிறுவன் பறித்துக்கொண்டு போனதற்காக அந்த மரத்துக்காரி சண்டையிடுகிருள். அச்சிறுவனின் தாய் அதற்கு எதிர் சண்டையிடுகிருள். எதிர் சண்டைக்காரியின் மாமியோ மரத்துக்காரியுடன் சேர்ந்துகொண்டு தன் மருமகளை எதிர்க்கிருள். மருமகளோடு சேர்ந்துகொண்டு பேசினுலல்லவோ வீட்டின் கௌரவம் நிலைக்கும். சிறு சண்டை பிரமாதமாகி விடுகிறது.

வயிற்றுக் கடுப்பைக் குணம்செய்ய ஒரு தமிழ் வைத்தியர் மூன்று ரூபா கேட்டார். அது தராததால் அவரும் போய்விட்டார். ஒரு காசும் செலவில்லாமல் ஆஸ்பத்திரியில் மருந்துண்டதில் சுகமாகிவிட்டது. வயிற்றுக் கடுப்புக்கு எத்தனையோ கைமருந்துகள் உண்டு. பத்து தினங்கள் பாடுபட்ட பிறகே கடைசியில் ஒரு மருந்தால் குணமாகும். அதற்குள் எவ்வளவு சித்திரவதை செய்து கதறவைக்க வேண்டுமோ அவ்வளவும் செய்து வாட்டிவிடும்.

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(8-வது கமலம் 790-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒரு பெண்மணி எழுதியது.

கல்யாணமோ ,செலவில் குறைவில்லை. எல்லோருக்கும் திருப்தி. ஆனல், அளவுக்கு மிஞ்சிய ஆடம்பரம் கிடையாது. ஏழைகளுக்கெல்லாம் பெரிய விருந்தாயிருந்தது. ஒருவரும் அதிருப்தி கொள்ளவில்லை. அந்தக் கல்யாணம் ஒரு வாரம் வரையில் கலியாணம் போலவே யிருந்தது. பிறகு சம்பந்திகள் எல்லாம் தங்கள் ஊராகிய மயிலாப்பூர் சென்றனர். கோபாலையரும் ஜானகியும் தங்கள் கிரகத்துக்குப் போக அநுமதி கேட்க; மகாதேவையரும் பாகீரதியும் அவர்களை அங்கேயே இருக்கும்படி எவ்வளவு வேண்டியும், கொஞ்ச நாளைக்குத் தாங்கள் தனியே இருப்பது உசிதமென்று விநயமாய்க் கேட்டுக்கொண்டதின்பேரில், குழந்தை ஸரஸ்வதியை நிறுத்திக் கொண்டு அவர்களைமட்டும் அனுப்பிவைத்தார்கள். கோபாலையர் தினம் நீலாவுக்கும் ஸரஸ்வதிக்கும் நடராஜனுக்கும் பாடம் சொல்லிக் கொடுப்பதை முன்போலவே நடத்திவந்தார். முன்னைவிட நீலா ஸரஸத்தை அரை நிமிஷங்கூடவிட்டுப் பிரியாமல் அதிகமாய் நேசித்துவந்தாள். பாகீரதியம்மாளோ மருமகளையும் மகனையும் மனமாகிய தராசில் ஏற்றத்தாழ்வின்றி ஸமமாக வைத்திருந்தாள். மகாதேவையருக்குகந்த மகா உத்தமியான அவ்வம்மணியின் அருங்குணங்கள் வருணிக்க முடியாத அவ்வளவு விசேஷமானது. எவ்வளவோ செல்வமிருந்தாலும் கொஞ்சமேனும் கர்வம் பெருமை என்பதே கிடையாது. கஷ்டப்படுபவர்களுக்கு உதவுவதற்காகவே பகவான் நமக்குச் செல்வத்தைத் தந்திருக்கிறார்; ஆகையால் நாம் நம்முடையது, நமக்குத்தானுரிமை என்னும் அகம்பாவம் நமக்கிருக்கக்கூடாது என்றும் அடிக்கடி நினைத்தும் வாயாரச் சொல்லியும் ஸந்தோஷப்படுவாள். யாரையேனும் மகாதேவையர் கடிந்துரைத்தாலும் அவ்வம்மைக்கு அது தாங்காது. எப்பொழுதும் அவள் ஹிருதயம் குளிர்ந்தே யிருக்கும். எப்பொழுதும் சிரித்த முகமும், கள்ளங் கபடற்ற கண்களும், முப்பத்தைந்து வயதுடையவளானாலும் இரு

பதே வயதுடையவள் போன்ற இளமையும் உடையவளா யிருந்தாள். அவர்களுக்கு அன்னியோன்னியமான நெருங்கிய பந்துக்கள் ஒருவருமே கிடையாது. கற்புள்ள பெண்ணும் அன்புள்ள புருஷனும் ஒருமித்து வாழுங் காலத்தில் ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் உதித்ததால், அவர்களுக்கு பந்துக்களைப்பற்றிக் கவலையே கிடையாது. அன்புடையவள் மனத்தில் உலகத்திலுள்ள எல்லாஜனங்களும் பந்துக்களே. அவ்விதமான கவலை அவர்களுக்குத் தோற்றவே யில்லை. அவ்வூரிலிருக்கும் முன்னூறு வீடுகளுக்கும் அவர் ஒரு அரசர்போல் விளங்கினர். போக்கிரிகளுக்கு மகாதேவய்யரைக் கண்டால் நடுக்கம். நல்லவர்களுக்கோ அவரைக்கண்டால் ஆனந்தம். ஏழைகளுக்கு அவர் வீட்டில் அன்னக் களஞ்சியம் திறந்து விடப் பட்டிருக்கும். குழந்தைகளுக்குக் குலதெய்வம். வயது முதிர்ந்தவர்க்கு வாழ்த்தும் செல்வமாக விளங்கினர். ஆனல் கொஞ்சம் முன் கோபமுள்ளவர். உடனே அக்கோபம் குளிர்துவிடும். அவர் குடும்பத்திலிருந்தாலும் பற்றற்றவராகவே யிருந்தார். அவரது பூர்வ புண்ய வசத்தால்அவருக்குக் கிடைக்கப்பட்ட குருவின் அருளாகிய உபதேசம் அடிக்கடி அவரைப் பக்குவப்படுத்திக்கொண்டிருந்தது. ஒரு வீட்டில் தாய் தகப்பன் எவ்விதமான நடக்கை நடந்துவருகின்றனரோ அவ்விதநடவடிக்கை அவர்களின் குழந்தைகளுக்கும் ஏற்பட்டுவிடுகிறது. சிறு குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்காமலே ஸ்வபாஷை எப்படி வருகின்றதோ, அப்படியே நல்லதோ கெடுதலோ குழந்தைகள் பழகிக்கொள்கிறார்கள். அதைப் போலவே, நீலாம்பாளும், நடராஜனும் தாய் தகப்பனைப்போலவே சிறந்து விளங்கினார்கள். வஞ்சக நெஞ்சம் அவர்களிடம் மருந்துக்குக்கூட அகப்படாது.

ஒருநாள் அக்குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்த பிறகு அவர்களின் தோட்டத்திற்கு உலாவ கோபாலய்யர் அவர்களை அழைத்துச் சென்றார். அப்பொழுது ஏதோ ஒரு பண்டிகைக்காக மாப்பிள்ளையாகிய பத்மநாபனும் அவ்விடம் வந்திருந்தான். அவனையும் அவர்களுடன் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றிருந்தார்கள். மாப்பிள்ளைப் பையன் சிறுவனு யிருந்தாலும் மூக்குக் கண்ணாடியும், கலையாத கிராப்பும், ஜரிகைப் பட்டுக்கரை வேஷ்டியும் கலைந்து நலுங்கிவிடுமோ என்று நடக்கக்கூடப் பயந்து மெதுவாக நடந்துகொண்டிருந்தான். மற்றவர்கள் மாலைப்பொழுதின் உற்சா

கமும், இயற்கையமைப்பின் அழகால் அடைந்த உற்சாகமும் உடையவர்களாய்த் தங்களையே மறந்து விளையாடிச் சென்றுகொண்டிருந்தார்கள். இவர்களெல்லாரிலும் நீலா அதிக தைரியமும் சுறுசுறுப்புமுள்ளவளாகக் காணப்பட்டாள். மாப்பிள்ளை பத்மநாபன் பயந்தவனாகக் காணப்பட்டான். நடராஜனோ வாத்தியார் சொல்லிக் கொடுத்த பாடத்தில் கவனமா யிருந்தான். ஸரஸ்வதி மல்லிகைச் செடியிலுள்ள புஷ்பங்களை யெல்லாம் பறித்துக்கொண்டிருந்தாள். கோபாலய்யர் குளக்கரையில் ஸந்தியா வந்தனம் செய்து கொண்டிருந்தார். அங்குள்ள மாதுளை, கொய்யா முதலிய பழங்களைப் பறித்து எல்லோருமாகக் குதித்து ஆனந்தமாகத் தின்றார்கள். அங்கு கொத்துக் கொத்தாக மாங்காய்கள் தலையிலிடிக்குமாறு வெகு அழகாகத் தொங்குவதைக் கண்ட பத்மநாபனுக்கு அந்த மாங்காய்களின்மீது கவனம் சென்றது. ஆனால், அதைப் பறித்துத் தின்னவும் வெட்கப்பட்டுக்கொண்டிருந்தான். நீலா அவன் கவனத்தை யறிந்துகொண்டு ஒரு குதி குதித்துக் கொத்தான மாங்காய்களைப் பறித்து இந்தாருங்கள் என்று அவனிடம் கொடுத்தாள். வேண்டாம், கத்தியில்லாமல் எப்படி நறுக்குவது என்றான். இது ஒரு கஷ்டமா என்று அங்குள்ள ஒரு பாறையின்மீது வைத்து ஒரு கல்லால் அக்காயை உடைத்து அவனிடம் கொடுத்தாள். அவனுக்குக் கத்தியில்லாமல் மாங்காயைத் தன் மனைவி நறுக்கிக் கொடுத்தது மிகவும் ஸந்தோஷமா யிருந்தது. ஸரஸ்வதியோ மல்லிகைப் பூக்களைப் பறித்துச் செண்டுகளாகவும், மாலைகளாகவும் கொத்துக் கொத்தாய்க் கட்டி நீலாவை மாலைகளால் அலங்கரித்துக் கூத்தாடினாள். பதில் நீலாவும் அவள்மேல் மாலையைப்போட ஒருவர்மீதொருவர் புஷ்பங்களை வாரி இறைத்துக் கொண்டு விளையாடுங்கால் குளக்கரையிலிருக்கும் கோபாலய்யருக்கு கண்கொள்ளாக் காக்ஷியா யிருந்தது. அச்சமயம் மகாதேவையர் வெகு அவசரமாகவும் ஏதோ கவலையுற்றவராகவும் அக்குழந்தைகளை வீடு செல்லும்படி உத்தரவிட்டுத் தோட்டத்தின் பின்புறம் அடர்ந்த புதரருகே சென்று நாற்புறமும் திருப்பிப் பார்க்க, ஸூரியன் மலை வாயிலில் விழுந்ததும் வெளிச்சம் கொஞ்சம் மயங்கியதுமாகிய அவ்வேளையில் ஒரு புதரின் மறைவிலிருந்து ஒரு நீண்ட உருவம் நாற்புறமும் சுற்றிப் பார்த்துக்கொண்டே எழுந்து மகாதே

வையரைச் சைகை செய்து அழைத்தது. மகாதேவையர் அந்த உருவத்துடன் சந்தடி செய்யாமல் சென்றுவிட்டார்.

---

2. அமராவதியின் அரசியல்.

பாளையம் ஜமீன் ஜெயபாலன் சென்று வருவதாகச் சொல்லிப் போய் வருஷமாகியும் இன்னும் வராதிருப்பதையும் நினைத்து அவ் வூர்க் குடிகளும் அரண்மனையிலுள்ளோரும் ஒரே அழுகையா யிருந் தார்கள். இன்று வருவார் நாளை வருவாரென்று எதிர்பார்த்த தினங்களும் மணிகளும் காற்றுகப் பறந்துவிட்டன. அரண்மனை யிலோ அவரது அருமை மனைவி தன் ஒரே மகன் அரங்கபாலனுக்கு விவாகம் செய்து பிள்ளையும் மருமகளும் உயிரும் உடலுமாக இருப் பதைக் கண்டு அடங்கா மகிழ்ச்சியுடனிருக்கும் காலத்தில் விதி வசத்தால் அரங்கபாலன் காலமான ஒரே ஏக்கத்தால் தன் மருமக ளைக் காணச் சகியாளாய் தன் ஜீவனை விட்டனள். ஆகையால் எல்லாவிதமான கவலைகளுக்கும் இருப்பிடமாக அமராவதி தன் அருமைப் பாலனுகிய ஆறு வயதுடைய குழந்தை பூபாலனோடு காலந் தள்ளினுள்.

அவள் தன் கணவன் காலமானதைப்பற்றிக் கவலைக்குள்ளா யிருக்கும் காலத்தில் அருமைத் தாயைப்போன்ற மாமியைப் பறி கொடுத்தாள். அவள் உலக வாழ்க்கையில் மிக வெறுப்புக்கொண்டு தன்னுயிரை மாய்த்துக்கொள்ள எண்ணி யிருக்குங் காலத்தில் தந்தையைப்போன்ற மாமனும் பல வருஷகாலமாய் வெளியூர் சென்று வாராமலிருந்தால் அவளுடைய தவிப்பைச் சொல்லவும் முடியுமோ? தன்னையும் தன் சிறு பாலனையும் தன் சொத்துக்களையும் காப்பவர் யார் என்று பெரிய கவலையா யிருந்தது. ஒருவேளை தன் மாமனுர் இறந்துவிட்டாரோ என்ற ஸந்தேகம் அவள் மனதை அலக்கழித்தது. இவ்விதமாக அவள் யோசனை செய்து செய்து களைத்துப்போய் செயலற்றிருந்தாள். அவ்வூர்க் குடிகளோ அவளைத் தளரவிடாமல் தைரியம் சொல்லி வந்தனர். கடைசியில் அவள் யாவரையுமே மறந்து தன் செல்வக் குமாரன் பூபாலனுக்குத் தன் னைத்தவிர வேறே ஆதரவு இல்லாததால் அவனுக்காகத் தான் உயிர் வாழ்வது மிக அவசியமென்று தோன்றியது. கொஞ்சங்கொஞ்ச மாகத் தன் மனதைத் தேற்றுதற்கு ஆரம்பித்தாள். (தொடரும்.)

" அமிர்த குணபோதினி "

பவஸூலத்திய சித்திரை மாத பஞ்சாங்கம்.

ஏப்ரல் 4—28 / மே

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
அ	13	1	வெ	சசி-1-9, உப-●-57-34, ரே-56-2, மேஷரவி-25-1, விஷு-வத்.
சி	14	2	சனி	பிர-57-26, அசு-56-26, அதிக வைசாக சுத்தம்.
பி-சி	15	3	ஞா	துவி-57-33, பர-58-9.
ம	16	4	திங்	திரி-59-7, கிரு-60-0, ஸ்ரீபெரும்பூதூர் கூரேசவிஜயம், கிருத்திகை.
சி-அ	17	5	செவ்	சது-60-0, கிரு-1-23.
சி	18	6	புத	சது-2-14, ரோ-6-0, கரிநாள்.
ம	19	7	வியா	பஞ்-6-54, மிரு-12-6, தஞ்சை குறவஞ்சி நாடகம்.
சி	20	8	வெ	ஷஷ்-12-38, ஆரு-19-17, ரிஷபாயனம்-46-21.
சி	21	9	சனி	ஸப்-19-1, புந-26-56, திருக்கழிகுன்றம் அதிகாரநந்தி
சி	22	10	ஞா	அஷ்-25-24, பூச-34-34, அப்பர்காக்ஷி.
சி-ம	23	11	திங்	நவ-31-4, ஆயி-41-23, திருவையார் ஆத்மபூஜை.
சி	24	12	செவ்	தச-35-27, மக-46-55, திருக்கடவூர் காலன்ஸம்ஹாரம்.
அ	25	13	புத	ஏகா-38-7, பூர-50-12, தஞ்சை ரதம்.
ம-சி	26	14	வியா	துவா-38-56, உத்-52-49, மதுரை திருமணம்.
அ-சி	27	15	வெ	திர-37-53, ஹஸ்-53-4, கரிநாள், கஞ்சிவரதர் திருநக்ஷத்திரம்.
ம-அ	28	16	சனி	சசி-35-23, சித்-51-42, ஸ்ரீமுஷ்ணம் தீர்த்தம்.
சி-உ	29	17	ஞா	○-30-55, ஸ்வா-48-56, சித்திரா பூர்ணிமை.
ம-சி	30	18	திங்	பிர-25-32, விசா 45-15, திருவல்லிக்கேணிகருடன்
சி-உ	1	19	செவ்	துவி-19-23, அநு-40-56. திதிதுவயம், கரிநாள்.
சி-ம	2	20	புத	திரி-12-52, கேட்-36-17, திருநீர்மலை கருடன்.
சி	3	21	வியா	சது-6-17, உப-53-38, மூல-31-42.
பி-சி	4	22	வெ	ஷஷ்-53-55, பூரா-27-23, ஸ்ரீபெரும்பூதூர் ரதம்.
சி	5	23	சனி	ஸப்-48-28, உரா-23-35.
அ-ம	6	24	ஞா	அஷ்-43-36, ஶ்ரவ-20-25, பொன்னேரி தீர்த்தம்.
சி	7	25	திங்	நவ-39-24, அவி-17-51.
ம	8	26	செவ்	தச-35-54, சத-15-58. திருநாவுக்கரசு.
அ-சி	9	27	புத	ஏகா-33-7, பூட்-14-46, ஸர்வைகாதசி.
சி	10	28	வியா	துவா-31-4, உட்-14-19.
அ	11	29	வெ	திர-29-53, ரே-14-40, ஸ்ரீரங்கம்தீர்த்தம், சிவராத்திரி, பிரதோஷம்.
சி	12	30	சனி	சசி-29-39, அசு-15-56.
பி-சி	13	31	ஞா	●-30-32, பர-18-13, ஸ்ரீவைகுண்டம் தீர்த்தம், கிருத்திகை, பவுத்த ஜயந்தி, அமாதிதி.

புத	ரவி குஜ		
சுக் சனி	15உ-க்கு ராசி		கே
ராகு			
			குரு.

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone,
At the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.